கோகுலம்

GOKULAM


ஏப்ரல் '98 ரூ. 5.00

லீவு விட்டாச்சு,
ஊருக்குக் கிளம்பியாச்சு!





எந்த இரண்டு பூனைகள் ஒன்றாக உள்ளன?



விடை : 2, 6



கோகுலம்

ஏப்ரல் '98 மலர்: 16 இதழ்: 3

அருமைச் சிறுவர் சிறுமியரே!

சுற்றுலாக்களில் பல ரகம் உண்டு.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்; பறவைகள், மிருகங்களுக்கு அடைக்கலம் தரும் சரணாலயங்கள்; புனிதத் தலங்கள்; மலை ஏறுதல், படகு செலுத்துதல் போன்ற விளையாட்டுகளுக்கு முக்கியத்துவம் தரும் கேந்திரங்கள் என்று பல ரகப் படுத்தலாம்.

அல்லது நகரின் சந்தடியிலிருந்து விட்டு விலகி 'அக்கடா' என்று சும்மா கிடந்தால் போதும் என்றால் அதுவும் சுலப சாத்தியம்தான்.

ஆனால் சங்கடம் என்னவென்றால் ஒரு குடும்பத்தில் பல ரக மனப்பான்மையுடன் பலர் இருப்பார்கள். வேலை செய்து களைத்துப் போய் ஓய்வு தேடும் அப்பா; குறிப்பிட்ட தலங்களுக்கு வந்து நேர்த்திக் கடன் செலுத்துவதாக பிரார்த்தித்துக் கொண்டிருக்கும் அம்மா; விடுமுறையில் 'அங்கு போனோம், அதைப் பார்த்தோம், இதைச் செய்தோம்' என்று சொல்லிக் கொள்ள விரும்பும் பள்ளிக் குழந்தைகள் என்று பலதரப்பட்டவர்கள். இவர்களுடைய பல்வேறு சிந்தனைகளுக்கு ஏற்ப எப்படி பயணத் திட்டத்தை வகுப்பது என்பதுதான் பிரச்னை.

முதல் மூன்று நாட்கள் குழந்தைகளுக்காக; அடுத்த இரு தினங்கள் அப்பா விருப்பப் படி பூரண ஓய்வு; கடைசி இரு நாட்கள் அம்மாவின் பிரார்த்தனை பூர்த்தி என்று பயணத் திட்டம் வகுக்கலாம்.

எவ்வாறாயினும் பெற்றோர், குழந்தைகளின் விருப்பத்தைக் கேட்டறிவதும், அதே போல் குழந்தைகள் பெற்றோரின் எண்ணங்களை மதிப்பதும் அவசியம். எனவே விடு முறைக்கு முன்னதாக அப்பா, அம்மாவிடம் பேசுங்கள். உங்கள் ஆசைகளைச் சொல்வது போலவே அவர்களுக்கு ஏதேனும் திட்டங்கள் இருக்கிறதா என்றும் கேட்டறிந்து கொள் ளுங்கள்.

உங்கள் பேச்சிலே மகிழ்ந்து போகிற பெற்றோர் உங்களுக்கும் அனுசரணையாக பயணத் திட்டம் வகுப்பார்கள். குடும்பத்தில் எல்லோரையும் திருப்திப் படுத்தக் கூடிய ஒரு சுற்றுலாதான் முழு மகிழ்ச்சியை அளித்து விடுமுறையை அர்த்தமுள்ளதாக்கும்.

அம்மா போக விரும்பும் கோவில்கள் பற்றிய தல புராணங்கள், அங்குள்ள தெய்வத் தின் மகிமை போன்ற அம்சங்களை அறிந்து கொள்ள நீங்கள் ஆர்வம் காட்ட வேண்டும். அதே போல் நீங்கள் பார்க்க விரும்பும் சரணாலயத்தில் இருக்கும் வன விலங்குகள் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள உங்கள் பெற்றோரும் துடிப்பு காட்ட வேண்டும்.

அத்தகைய பயணம் சுற்றுலாவாக மட்டுமின்றி பந்த பாசத்தை வளர்க்கிற ஓர் இனிய அனுபவமாக வும் இருக்கும். அதற்கு ஈடு இணை ஏது!

அன்புடன்

(கி. ராஜேந்திரன்)

ஆசிரியர்



உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

— பாரதியார்.

கோகுலம்

ஏப்ரல் 1998

இந்த இதழில்...

ஐயா! பரீட்சையெல்லாம் முடியப் போகுது! புத்தகங்களை எல்லாம் இரண்டு மாத காலம் பரணில் தூக்கிப் போட்டு விடலாம். விடுமுறைக்கு என்ன செய்வதாக பிளான்? ரிமோட்டும் கையுமாக காலையிலிருந்து இரவு வரை டிஸ்கவரி மற்றும் கார்ட்டூன் சேனல்களைப் பார்த்து பொழுதைக் கழிக்கப் போகிறீர்களா? ஏனென்றால் தாத்தா பாட்டியைப் பார்க்க கிராமத்துக்குப் போவதெல்லாம் பழங் கதை ஆகி விட்டதே! டிஸ்கவரியில் வரும் அமேசான் காடுகளையும், ஆப்பிரிக்க விலங்குகளையும் காண அந்தந்த இடங்களுக்குத்தான் போக வேண்டும் என்பது கிடையாது. இயற்கை இந்தியாவுக்கு தாராளமாகவே கருணை காட்டியிருக்கிறது. அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டில், உங்கள் மாவட்டத்திலேயே உங்களுக்குத் தெரியாமல் பல வன உயிரின உய்விடங்கள் (Wild Life Sanctuary) இருக்கலாம். இந்த உய்விடங்கள் அழிந்து வரும் விலங்கினங்களை பாதுகாப்பதல்லாமல், அரிய தாவரங்களை நமது எதிர் கால சந்ததிகளுக்கும் பலன் கொடுக்கும் வகையில் காப்பாற்றி வைக்கின்றன.







கோடை விடுமுறையில் எங்கு போகலாம்?

சென்னை :

குழந்தைகள் பூங்கா - கிண்டி.

சென்னையில் உள்ள பலர் இதைப் பார்த்திருப்பீர்கள். இங்கு ஒரு மினி மிருகக்காட்சி சாலை உள்ளது. இந்த பூங்காவைச் சுற்றி பெரிய காடு இருக்கிறது. இங்கு காட்டெருமை, நரி மற்றும் ஏராளமான பறவையினங்கள் உண்டு. பலர் பூங்காவை மட்டும் பார்த்து விட்டு, காட்டுக்குள் போகாமல் திரும்பியிருப்பீர்கள். ஒரு முறை உள்ளே சென்றுதான் பார்த்து வாருங்களேன்.

அறிஞர் அண்ணா வன விலங்கு பூங்கா, வண்டலூர்.

சென்னையிலிருந்து 32 கி.மீ. தூரத்தில் அமைந்திருக்கிறது இது. நடப்பன, ஊர்வன, பறப்பன என்று சுமார் 2000 பிராணிகள் இங்கே இருக்கின்றன. காட்டுச் சூழலிலேயே பிராணிகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளது இது. செங்கல்பட்டிலிருந்தும், தாம்பரத்திலிருந்தும் பேருந்துகள் உள்ளன. நல்ல கோடைக்காலத்தில் வேடந்தாங்கலுக்குப் போகாதீர்கள். நவம்பர் மாதத்திலிருந்து பிப்ரவரி-மார்ச் மாதங்களுக்குள் சென்று பார்க்க வேண்டும். அப்போதுதான் அங்குள்ள



ஏரியிலுமம மரங்களிலும் உலகின் பல பகுதிகளிலிருந்து வந்துள்ள பறவைகள் கேம்ப் போட்டிருக்கும். இங்கு வன இலாகாவின் தங்கும் விடுதியும் உண்டு. இதன் பக்கத்திலேயே கரிக்கிரி என்ற இடத்தில் பறவைகள் சங்கமிக்கும் மற்றொரு சரணாலயமும் உண்டு.

புலிகாட் ஏரி பறவைகள் சரணாலயம்:

சென்னையை ஒட்டி, ஆந்திர மாநில எல்லையில் 481 சதுர கி.மீ. பரப்பளவில் அமைந்திருக்கிறது புலிகாட் ஏரி. சென்னையிலிருந்து 90 கி.மீ. தூரம் உள்ள இந்த புலிகாட்டுக்குச் செல் வதற்கு பேருந்துகள் உண்டு. நவம்பர் மாதத்திலிருந்து பிப்ரவரி மாதத்துக்குள் இங்கு சென்றால், இந்த ஏரியில் சர்வதேச பறவை களின் சங்கீதத்தைக் கேட்கலாம். தங்கும் விடுதி யும் இங்கு உண்டு. பக்கிங் காம் கால்வாய்க்கும் வங்கக் கடலுக்கும் இடையே உள்ள ஏரிதான் இது.

கோடியக்கரை வன உயிரின உய்விடம்:

நாகப்பட்டினம் மாவட்டம், உப்பு உற்பத்திக்குப் பெயர் பெற்ற வேதாரண்யம் நகரிலிருந்து சுமார் 15 கி.மீ. தூரத்தில் வங்கக் கடலை ஒட்டிய காடுதான் கோடியக்கரை காடு. நவம்பர் முதல் பிப்ரவரி வரை தான் சீசன். அப்போது சென்றால் உயர மான குச்சிக் கால்களுடன் நாரைகள் அந்தப் பகுதியையே தங்களது கீச்சு, கீச்சுகளால் பரபரப்பூட்டிக் கொண் டிருப்பதைப் பார்க்கலாம். இங்குள்ள காடுகளில் காட்டெருமை, நரி, மற்றும் ஆமை, எப்போதாவது தென்படும் டால்பின் ஆகியவை கூடுதல் அட் ராக்ஷன். வன இலாக்காவில் தங்கும் விடுதி உண்டு.

முதுமலை வன உயிரின உய்விடம், நீலகிரி மாவட்டம்:

உங்களுக்கு மிகவும் பிடித்த நீலகிரியி லிருந்து 65 கி.மீ. தொலைவில் அமைந் திருக்கிறது இது. புலி, சிறுத்தை, யானை, காட்டெருது, கடமான் (Barking Deer), கரடி, மலைப்பாம்பு, நீர்நாய் என்று பலவகை விலங்குகளை இங்கு காணலாம். அடர்த்தியான காடுகளையும் இடையே ஓடும் ஓடைகளையும், பார்க்க இரண்டு மூன்று நாட்கள் தேவைப்படும். யானைச் சவாரி இங்கே ஸ்பெஷல். இந்த கோடைக்கு விசிட் பண்ண அட்டகாசமான இடம். தங்கும் விடுதி உண்டு. ருசியான சாப்பாடும் உண்டு.



முகுர்த்தி (Mukurthi) தேசியப் பூங்கா நீலகிரி மாவட்டம்:

மேற்குத் தொடர்ச்சி மலையில்

சுமார் 8000 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இந்த தேசியப் பூங்கா. இங்குள்ள இயற்கை அழகை சொல்லி மாளாது. இங்குள்ள காடுகளில் யானையிலிருந்து அணில் வரை எல்லாமே உண்டு. அரிய தாவரங்கள் காடுகளில் உண்டு. பிப்ரவரி மற்றும் மே மாதத்துக்குள் இங்கு சென்று விட வேண்டும். நீலகிரி மான்கள் இந்தப் பூங்காவின் ஸ்பெஷாலிட்டி.

இந்திரா காந்தி வன உயிரின உய்விடம் மற்றும் தேசியப் பூங்கா - ஆனைமலை.

கோவையிலிருந்து 85 கி.மீ. மற்றும் பொள்ளாச்சியிலிருந்து 35 கி.மீ. தொலைவிலுள்ள இந்த உய்விடம் அடர்த்தியான காடுகளுக்குப் பேர் போனது. இங்குள்ள டாப்-ஸிலிப், வரகளியார், அட்டகட்டி, கிராஸ் ஹில்ஸ் திருமூர்த்தி ஹில்ஸ், ஆகியவை சிறப்பான இடங்கள். படுபயங்கர விலங்குகளிலிருந்து பரம சாதுவான விலங்குகள் வரை எல்லாமே இங்கு உண்டு. ஜூன், ஜூலை, ஆகஸ்ட் தவிர மற்ற மாதங்களில் செல்லலாம். தங்கும் விடுதிகள் உண்டு.

திருவில்லிபுத்தூர் சாம்பல் அணில் வன உயிரின உய்விடம்.

விருதுநகர் மாவட்டம் திருவில்லிபுத்தூரில் உள்ளது இது. மேற்குத் தொடர்ச்சி மலைக் காடுகளில் அமைந்துள்ள இந்த உய்விடத்தின் ஸ்பெஷாலிட்டி, சாம்பல் நிற அணில். நெடிதுயர்ந்த மலைகள், மலைச் சரிவில் பரந்த புல்வெளிகள். அமைதியாக ஓடும் நதி, சீறி வரும் சிற்றாறுகள், சோவென கொட்டும் அருவி ஆகியவை கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்து. இந்த சாம்பல் அணில், இரண்டு கூடுகளைக் கட்டுமாம். வெள்ளத்தினாலோ மழையினாலோ ஒரு கூடு சேதமடைந்தால் மற்றொன்றில் வாழுமாம். ரொம்ப முன்ஜாக்கிரதைதான்! இங்குள்ள காடுகளில் மருத்துவக் குணம் கொண்ட தாவரங்கள் உண்டு. வருடம் முழுவதுமே இங்கு சீசன்தான். திருவில்லிபுத்தூரில் இருந்து பேருந்துகள் உண்டு.



களக்காடு, முண்டன்துறை வன உயிரின உய்விடம், திருநெல்வேலி மாவட்டம்.

பொதிகை மலையில் அமைந்திருக்கிறது இந்த உய்விடம். தென்றல் இங்கிருந்து புறப்பட்டுத்தான் நம்மை தாலாட்டுகிறது. தமிழ்நாட்டில் புலிகளுக்கான காப்பகம் இங்கேதான் இருக்கிறது. இந்தப் பகுதியில் புலிகளைத்

தவிர சிறுத்தை, காட்டுப்பூனை, செந்நாய், நரி, சிங்கவால் குரங்கு ஆகியவைகளும் உண்டு. இதைச் சுற்றி நிறைய சுற்றுலாத் தலங்கள் உள்ளன. காட்டுக்குள் செல்லும் போது ஒரு எச்சரிக்கை. வெள்ளை ஆடைகளை உடுத்த வேண்டாம். ஏனென்றால் மிருகங்களின் கண்களுக்கு பளிச்செனத் தெரிந்துவிடும். மதுரையிலிருந்து 200 கி.மீ. தூரத்தில் உள்ளது இது. செப்டம்பர் முதல் மார்ச்சுக்குள் போய்



வந்து விடவும்.

மன்னார் வளைகுடா கடல் வாழ் உயிரின தேசியப் பூங்கா.

தமிழகத்திலேயே வித்தியாசமான தேசியப் பூங்கா இது. தூத்துக்குடி மற்றும், ராமநாதபுரம் மாவட்டங்களை ஒட்டிய வங்கக் கடலில் அமைந்துள்ள 21 தீவுகளைக் கொண்ட தேசியப் பூங்கா. கடல் வாழ் உயிரினங்களுக்காக உருவாக்கப்பட்டது. ஆவுலியா என்ற கடற்பசு ஒரு அரிய கடல் வாழ் பிராணி. கடற்பசுக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருவதால், இந்த தேசியப் பூங்காவின் முக்கியத்துவம் கூடுகிறது. இந்த 21 தீவுகளைச் சுற்றி உள்ள கடல் பகுதியில், அடர்த்தியான கடற் தாவரங்கள் கண்ணுக்கு விருந்தாக அமைந்து இருக்கின்றன. கடல் பகுதியில் உள்ள பவழப் பாறைகள் பார்ப்போரை பிரமிக்க வைக்கும். கடற்பசு தவிர கடல் ஆமை, டால்பின் போன்ற கடற்வாழ் பிராணிகளும் இங்கு ஏராளமாக உண்டு. மதுரையிலிருந்து 150 கி.மீ. தொலைவில் உள்ள மண்டபத்திலிருந்து, வன இலாக்கா மற்றும் சுற்றுலாத் துறையின் படகுகளில் சென்று தீவுகளின் அழகையும், கடலுக்கு அடியில் உள்ள இயற்கையின் அற்புதங்களையும் கண்டு களிக்கலாம். வருடம் முழுவதும் எப்போது வேண்டுமானாலும் சென்று வரலாம்.

மேற் சொன்ன வன உயிரின உய்விடங்களைத் தவிர தஞ்சை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் பறவைகள் சரணாலயங்கள் உள்ளன. தஞ்சை மாவட்டத்தில் உதய மார்த்தாண்டபுரம் (தஞ்சையிலிருந்து 65 கி.மீ.) மற்றும் வடுவூர் (மன்னார்குடியிலிருந்து 14 கி.மீ.) ஆகிய இடங்களில் உள்ள பறவைகள் சரணாலயம் பார்க்க வேண்டியவை. மழைக்காலம் முடிந்தவுடன் இங்குள்ள ஏரிகளில் பறவைகள் சங்கமிக்கின்றன. பிப்ரவரி மாதம் வரை இந்தச் சரணாலயங்களில் பறவைகளின் ராஜ்யம்தான்.


இது போலவே ராமநாதபுரம் மாவட்டம் காஞ்ஜிரான்குளம், சித்திராங்குடி, வெட்டான்குடிப்பட்டி, ஆகிய இடங்களில் நீர் வாழ் பறவைகள் சரணாலயம் உண்டு. இங்குள்ள ஏரிகளில் அடர்த்தியான தாவர வகைகள் இருக்கின்றன. இங்கெல்லாம் சீசன் நவம்பரிலிருந்து பிப்ரவரி வரைதான். கான்ஜிரான்குளம் மற்றும் சித்திராங்குடி, ஆகியவை பரமக்குடி அருகிலும், வெட்டாங்குடி காரைக்குடி அருகிலும் இருக்கின்றன.

என்ன ரெடியா? எப்போது பெட்டியை 'பாக்' செய்து கொண்டு கிளம்பப் போகிறீர்கள்? போய் வந்த பிறகு மறக்காமல் உங்கள் அனுபவங்களை கோகுலத்துக்கு எழுதுங்கள்.

— தில்லு

அட்டையில் : **அசோக் குமார், நிகிதா**
வண்ணப்படம் : **ஸ்ரீஹரி**

விஞ்ஞான அதிசயங்கள்!



ஜீன் மாற்றம் செய்து சர்க்கரைப் பொருள் அதிகமுள்ள உருளையை உயிரியல் தொழில் நுட்ப முறையில் உருவாக்கினால், அது மக்களுக்குப் பெரிதும் பயன்படும் என்பதை ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. இப்படி உற்பத்தியாகும் உருளைக் கிழங்கு, 'வறுவல்' செய்யும் போது அதிக அளவு எண்ணெய்யை உறிஞ்சாது. எனவே இதய நோயாளிகளும், உடலில் கொழுப்பு சத்து அதிகம் உள்ளவர்களும் கூட பயமின்றி உண்ண முடியும். 'ஜெனிகா அக்ரோ கெமிகல்' என்ற உயிரியல் தொழில் நுட்ப நிறுவனம், இத்தகைய உருளையை இன்னும் மூன்று வருடத்தில் அதிக அளவில் உருவாக்கி, உலக நாடுகளுடன் போட்டியிட திட்டமிட்டுள்ளது.

அது மட்டுமல்ல, வயிற்றுப் போக்கைத் தடுக்கும் புரதப் பொருளை உருளைக் கிழங்கின் ஜீனுக்குள் நுழைத்து, 'ஜீன்மாறிய உருளைக் கிழங்கை' தடுப்பூசியாகப் பயன் படுத்தலாம் என்ற உண்மையையும், நியூயார்க்கைச் சேர்ந்த சார்லஸ் ஆண்டர்சன் குழுவினர் கண்டுபிடித்துள்ளனர். மேலும் மலேரியா மற்றும் தோல் புற்றுநோய்க்கு எதிரான புரத மூலக் கூறுகளையும், உருளைக்கிழங்குக்குள் நுழைத்து, இதனை நோய் தடுப்பு உருளைக் கிழங்காகவே பயன் படுத்த முடியும் என்ற தகவலையும் விஞ் ஞானிகள் தெரிவித்துள்ளனர். எனவே ஜீன்மாறிய உருளை, எதிர்கால சந்ததியினரை உடல் நலம் நிரம்பியவராக, நோயற்றவராக உருவாக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

— மோகனா




"1001 வெடின்னு சொன்னீங்க! 999 வெடிதானே இருக்கு?!"


"தீபாவளி பற்றி நீ எழுதின கட்டுரையைப் படி!"


"பட் படீர்... டமார்!... புஸ்ஸ்... ஜிவ்வ்.. உஸ்ஸ்ஸ்... டுமீல்... படபடபடபட் படார்!"



பட்டாம் பூச்சி







சென்ற மாதம் கோகுலத்தில் வெளிவந்த காற்றாடியைச் செய்துப் பார்த்தேன். நன்றாகச் சுற்றியது. எனக்குப் பிடித்த 'பட்டாம் பூச்சி'யை காகிதத்தில் செய்து காட்ட முடியுமா? என்று கடலூரிலிருந்து ஆர். கனகா (எட்டாம் வகுப்பு) கேட்டிருந்தார். இதோ கனகாவுக்காக பட்டாம் பூச்சி!

வழக்கம் போல் சதுர வடிவத் தாளை எடுத்துக் கொள்ளுங்கள்.

1) மேலிருந்து கீழ் நோக்கி மடிக்கவும்.

2) வலது புறத்தை இடப்புறம் தொடும்படி மடிக்கவும்.

3) இப்போது சதுர வடிவம் கிடைத்திருக்கும். சதுரத்தின் ஒரு பக்கம், மேல் பகுதி வலப்புறம் வருமாறு மடிக்கவும்.

4) படம் 4-ல் உள்ளது போல் முக்கோணம் கிடைக்கும். அதே போல் பின் புறத்தையும் மடிக்கவும்.

5) முக்கோணத்தின் வல, இட முனைகளை மேல் விளிம்பு நோக்கி மடக்கி விடவும்.

6) படம் 6-ல் உள்ளது போன்ற உருவம் கிடைக்கும்.

7) மறுபுறமுள்ள முக்கோணத்தை திருப்பி கீழ் முனையை சிறிது மடித்து விடவும்.

8) இதோ பட்டாம் பூச்சி தயார்.

வண்ணக் காகிதத்தில் செய்து, புள்ளி வைத்தால் மிக அழகாக இருக்கும். அடுத்தது என்ன? என்று கேட்பது புரிகிறது. மே மாத கோகுலத்திற்காகக் காத்திருங்கள்!

அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் பரிசு பெறும் பத்தாவது கதை.

கேசவனின் ரோபோ

அபிராமி

கேசவன் ரிமோட்டை இயக்கினான். ரோபோ நகர ஆரம்பித்தது. சரியாக இருபதாவது அடி... ரோபோ வலது பக்கம் திரும்பி நகர ஆரம்பித்தது. சரியாக அறுபது அடி எடுத்து வைத்தது. கையை நீட்டியது. வாசற் கதவின் தாழ்ப்பாளைப் பிடித்து வலது பக்கம் தள்ளியது. கதவு திறந்தது. இரண்டு அடி எடுத்து வைத்து வெளியே வந்தது. இடது பக்கம் திரும்பி நடக்க ஆரம்பித்தது.


"சக்ஸஸ்! சக்ஸஸ்! என் ரோபோ இயங்க ஆரம்பித்து விட்டது. கட்டளை வாங்கிக் கொண்டு செயல்பட ஆரம்பித்து விட்டது!" என்று மகிழ்ச்சிக் கூத்தாடினான் கேசவன்.

ஆக்ஷன் சார்ட்டையும், பிளானிங் சார்ட்டையும் வைத்துக் கொண்டு புரோக்கிராம்படி ரோபோ இயங்குகிறதா என்பதை மறுபடி பரிசோதித்து திருப்தியடைந்த போது இரவு மணி பன்னிரண்டரை! பிறகு ரோபோவை உறுப்பு உறுப்புகளாகப் பிரித்து டிஸ்மாண்டில் பண்ணி பெட்டியில் அடுக்கினான். அசெம்பிள் சார்ட்டையும் ஆக்ஷன் சார்ட்டையும் கவனமாகப் பத்திரப்படுத்தினான்.

டெலிபோன் மணி கண கணத்தது. கேசவன் எடுத்துப் பேசினான். அவனுடைய ஆசிரியர்தான் பேசினார்.

"சார், என்னை வாழ்த்துங்கள். பாராட்டுங்கள். என் ரோபோ திறமையாக இயங்குகிறது. கட்டளைப்படி எல்லாம் பண்ணுகிறது. ரிமோட் கண்ட்ரோலுக்கு பணிகிறது. என் இலட்சியம் நிறைவேறியது" என்றான் கேசவன் மகிழ்ச்சி நிறைந்த குரலில்.

"என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகள் கேசவா. நீ என்னுடைய மாணவன்; என்னிடம் படித்து வருபவன் என்பதைப் பற்றி எனக்கு அளவில்லாத பெருமை. அசெம்பிள் சார்ட்டையும், ஆக்ஷன் சார்ட்டை



யும் மிக கவனமாகப் பாதுகாக்க வேண்டும். ஸ்கிரிப்ளிங் (கிறுக்கல்) கைக்கூட ஒன்று விடாமல் பத்திரமாக எடுத்து வை. பார்த்துப் பாராட்டுபவர்களுக்கும்; வியப்பவர்களுக்கும் இந்த வெற்றிக்குப் பின்னால் எத்தகைய கடும் உழைப்பு உள்ளது என்பது தெரியாது. எப்படியாவது ஆக்ஷன்

சார்ட்டையும், அசெம்பிள் சார்ட்டையும் திருடிக் கொண்டு போகப் பார்ப்பார்கள். எவ்வளவு உயிர் நண்பனாக இருந்தாலும் சரி, எத்தனை நெருங்கிய உறவினராக இருந்தாலும் சரி, இந்த இரண்டையும் மட்டும் யாரிடமும் காட்டாதே. கவனம்! நாளை காலையிலேயே வங்கி லாக்கரில் வைத்துவிடு. கையில் வைத்துக் கொண்டிருப்பது ஆபத்து. பிரஸ் மீட்டுக்கு ஏற்பாடு செய்கிறேன். அதில் இந்த வெற்றியை வெளியிட்டால் போதும். அதற்கு முன் உன் வெற்றியை வெளியிட்டு விடாதே. நன்றாகச் சாப்பிட்டுத் தூங்கி ஓய்வு எடு. யாராவது வந்தால் வீட்டில் இல்லை என்று கூறிவிடச் சொல்" என்று எச்சரித்தார் ஆசிரியர்.

கேசவன் நன்றி கூறி டெலிபோனை வைத்தான். ஆசிரியர் எச்சரித்தபடி, பரிசோதனைகளின் படிப்படியான குறிப்புகள், தோல்விக் காரணங்கள், வெற்றி பெற உதவிய படிக்குறிப்புகள், கிறுக்கல்கள், வெற்றி நிலையின் ஆக்ஷன் சார்ட்டுகள், அசெம்பிள் சார்ட்டுகள் எல்லாவற்றையும் தனி உறையில் வைத்து மூடி பத்திரப்படுத்தினான்.

இந்த மாணவப் பருவத்திலேயே தாய் நாட்டுக்குப் பெருமை சேர்க்கவல்ல ஒரு சாதனையை நிகழ்த்தி விட்டோம் என்ற மன நிறைவுடன் தூங்கச் சென்றான் கேசவன்.

ஆசிரியரின் டெலிபோன் ஒட்டுக் கேட்கப்பட்டு, ஒரு சதித் திட்டம் மிக வேகமாக உருவாகும் உண்மை கேசவனுக்கும் ஆசிரியருக்கும் எப்படித் தெரியும்?

அடுத்த நாள் இரவு பதினோரு மணிக்கு மேலிருக்கும், கதவை யாரோ தட்டினார்கள். கேசவனின் அப்பாதான் கதவைத் திறந்தார். வி.ஐ.பி கைப்பெட்டி, பிளாஷ் காமிரா சகிதம் இரு இளைஞர்கள்.

"கேசவனை அவசரமாகப் பார்க்க வேண்டும்."

"கேசவன் ஊர்ல இல்லையே! பெங்களூர் போயிருக்கான்; வர ஒரு வார மாகுமே!" கேசவன் சொல்லித் தந்தபடியே அப்பா பாடம் படித்தார்.

வந்த இளைஞர்கள் சிரித்துக் கொண்டனர்.

"சார் எல்லாருக்கும் படிக்கும் பாடத்தை எங்களுக்கும் படிக்காதீர்கள். நாங்கள் கேசவனின் ஆசிரியர் ராம்நாத் அனுப்பித்தான் வந்திருக்கிறோம். அவரே போன் பண்ணிச் சொல்லுவதாகச் சொல்லியிருந்தார்."

அப்பாவுக்கு தர்ம சங்கடம்.

"சரி உள்ளே வாருங்கள். நானே ராம்நாத் சாருக்குப் போன் பண்ணிக் கேட்கிறேன்."

இருவரும் வந்து வரவேற்பு அறையில் உட்கார்ந்தனர். அப்பா கவனமாகக் கதவை மூடித் தாளிட்டார். டெலிபோன் எண்களைச் சுழற்றினார்.

ராம்நாத்தின் டெலிபோன் இணைப்பைத் துண்டித்து விட்டே அவர்கள் வந்திருப்பது அப்பாவுக்கு எப்படித் தெரியும்?

இளைஞர்கள் சிரித்தனர். "சார், கேசவன் இங்கே மாடியில் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும் உண்மையை ராம்நாத் சாரே எங்ககிட்ட சொல்லித்தான் அனுப்பினார். அப்பவே அவர் டெலிபோனில் இங்கே பேச முயன்றார். இணைப்புக் கிடைக்கவில்லை."


வேறு வழியில்லாமல் அப்பா கேசவனை அழைத்து விஷயத்தை விளக்கினார்.

"ராம்நாத் சாரே அனுப்பியிருந்தால் அப்புறம் என்ன? அனுப்புங்கள் அப்பா" என்றான் கேசவன்.

""வால்பாறைக்குத்தான் விடுமுறைக்குப் போகணும்னு நம்ம பையன் ஒத்தை வால்ல தொங்கறான்!""

— இரத்தின மனோகரன்





இரண்டு இளைஞர்களும் கேசவனின் அறைக்கு விரைந்தனர்! கேசவன் வரவேற்றான். உட்கார வைத்தான். அப்பா பிஸ்கட்டும், டீயும் கொண்டு வந்து தந்து விட்டுப் போனார்.

"எங்களுடைய வாழ்த்துகள்; பாராட்டுகள் கேசவன். இத்தனை சின்ன வயதில் இவ்வளவு பெரிய சாதனையா! நாடே பெருமைப் படப்போகிறது."

எல்லாம் தெரிந்தே வந்திருக்கிறார்கள் என்பதைக் கேசவன் உணர்ந்து கொண்டான். ராம்நாத் சாரே கூறியிருப்பதற்கு ஏதாவது காரணம் இருக்கும் என்று நம்பினான் கேசவன்.

"கேசவன் நாங்கள் அதைக் காண வேண்டுமே?"

''வாருங்கள்'' என்று இருவரையும் அழைத்துக் கொண்டு தனது அலுவலக அறையை அடைந்தான் கேசவன். உள்ளே நுழைந்ததும் கேசவனே கதவை சாத்தித் தாழ்ப்பாள் போட்டான்.

கேசவன் அந்த அறையின் இருட்டான பகுதியில் இருந்த ஒரு பட்டனை அமுக்கினான். அந்த இடத்தில் மட்டும் மெல்லிய சிவப்பு வண்ணத்தில் வெளிச்சம் பரவியது. ஒரு பெரிய பெட்டியைத் திறந்தான் கேசவன். ''கொஞ்சம் வெயிட் பண்ண வேண்டும்'' என்று கூறிவிட்டு சில மோல்டெட் உறுப்புகளை எடுத்துப் பொருத்தினான். பதினைந்தே நிமிடங்களில் ரோபோ உருப்பெற்றது. பேட்டரியை வைத்து மூடினான். இப்போ ரோபோ கட்டளைக்காகக் காத்திருந்தது!

சில சர்க்யூட்களையும், வயர்களையும் பொருத்திய கேசவன் ரிமோட்டை செக் பண்ணிக் கொண்டான். திரும்பி, "இதோ ரோபோ தயாராகி விட்டது" என்றான் முகத்தில் பெருமை மிளிர.

"இதன் தனிதன்மை என்ன?" என்றான் வந்தவர்களில் ஒருவன். "இந்த ரோபோ சாதாரணமாக மற்ற ரோபோக்களைப் போலவே நாம் இடும் ஏவல்களைச் செய்யும். அதோடு கூட இதன் சுற்று வட்டாரத்தில் நமது எதிரிகள் இருந்தால் காட்டிக் கொடுத்துவிடும். இங்கேயே எதிரிகள் வந்து விட்டாலும் அவர்களையும் அழிக்க இதில் கட்டளை இருக்கிறது.''

''சரி, இதன் ஆக்ஷன் ப்ளானிங் பேப்பர்களையும், சார்ட் பேப்பர்களையும் எடுங்கள். அவைகளை வீடியோ எடுக்கத்தான் ராம்நாத் எங்களை அனுப்பினார்'' என்று படபடத்தான் இன்னொரு இளைஞன்.

கேசவன் அவைகளைத் தந்துவிட்டு

நிமிர்ந்த போது திடுக்கிட்டான். அவனுடைய மார்புக்கு எதிரே துப்பாக்கி நீண்டிருந்தது.

"கேசவன், நாங்க வெளி நாட்டைச் சேர்ந்தவங்க. என் பெயர் பிரசன்னா. இவன் என் நண்பன் பிரவீன். உங்கள் கண்டுபிடிப்பை நீங்கள் சொல்லும் விலைக்கு வாங்கிக்க நாங்க வந்திருக்கோம்."

"ஸாரி. வெளிநாட்டவர்க்கு எனது கண்டுபிடிப்பை விற்க விரும்பவில்லை. எங்கள் நாட்டின் பாதுகாப்புத் துறைக்கு இது மிக அவசியம்" என்றான் கேசவன்.

"ஐம்பது லட்சம் தருகிறோம்."

"ராம்நாத் சார் இத்தனை மோசமானவராக இருப்பார் என்பதை நான் எதிர்பார்க்கவே இல்லை. எத்தனை பெரிய துரோகம்!"

இருவரும் சிரித்தனர். "ராம்நாத்துக்கு இதெல்லாம் தெரியாது. நாங்கதான் விஷயத்தை டெலிபோன் மூலம் ஒட்டுக்கேட்டு வந்தோம்."

"என்ன உன் முடிவு? ஐம்பது லட்சம் வாங்கிக்கிறியா? இல்லே பரலோகம் போறியா?"


"பேரம் பேசற கட்டம் முடிஞ்சு போச்சு. அத்தனை ஆக்ஷன் சார்ட்டையும், அசெம்பிளிங் சார்ட்டையும் எடுத்துக்கிட்டோம். ரோபோவை பிரிச்சு பெட்டியில் வைச்சிட்டு, கேசவனை முடிச்சிட்டுக் கிளம்ப வேண்டியதுதான்" என்றான் பிரசன்னா.

கேசவன் தனது ரோபோவையே பார்த்துக் கொண்டிருந்தான். அதன் வலது கை உயர்ந்தது. கேசவன் குனிந்து கொண்டான். கண்ணிமைக்கும் நேரத்தில், 'துப் துப் துப் துப் துப்'பென்று மயக்க குண்டுகளை ஓசையின்றி அரை வட்டம் பொழிந்தது ரோபோ!

"முட்டாள்களா! ரோபோவை அசெம்பிள் பண்ணும் போதே நீங்கள் பார்த்து ரசிக்க வேண்டும் என்பதற்காக பாதுகாப்பு சேனலையும் இயக்கி வைச்சிருந்த உண்மை உங்களுக்கு எப்படித் தெரியும்? நல்ல காலம், பாதுகாப்பு சேனலில், பட்டால் மயக்க மடையும் குண்டுகளை வைத்திருந்தேன். உயிர் குடிக்கும் குண்டுகளை வைத்திருந்தால் உங்க கதி அதோ கதியாகியிருக்கும்." என்று சிரித்தான் கேசவன்.

சடசடவென்று கதவு தட்டப்பட, கேசவன் திறந்தான். ராம்நாத் சார்தான் பதற்றத்துடன் நின்று கொண்டிருந்தார். கேசவன் நடந்ததை விளக்கினான்.

"நீ ரோபோவை மட்டும் உருவாக்கலே, உளவாளிகளையும் பிடிச்சுக் கொடுத்திருக்கே!" என்றார் ராம்நாத் பெருமையுடன்.




ஊனமுற்றவரின் இமாலயச் சாதனை!

உடல் ஊனமுற்றவர்கள் சாதனை படைப்பதற்கு அவர்கள் உடல் ஊனம் ஒரு தடை இல்லை. ஜப்பான் நாட்டிலுள்ள ஒகைடோ நகரைச் சேர்ந்தவர் 'யோஷ்யோ புரிகி'. இவர் 1964ஆம் ஆண்டு நடந்த வாகன விபத்து ஒன்றில் இரு கால்களையும் இழந்தவர். ஆனால் மனவலிமை மிக்கவர். மலையேறுவதில் ஆவல் உள்ளவர். கால்களை இழந்த நிலையிலும் இவர் 1985ஆம் ஆண்டு மே மாதத்தில் இமய மலைச் சிகரம் ஒன்றில் 5550 மீட்டர் உயரத்துக்கு வெறும் கைகளால் ஏறி உலக சாதனை படைத்துள்ளார். உடல் ஊனமுடையவர், அதிலும் இருகால்கள் இல்லாதவர் மலையேறுவதில் சாதனை படைத்தது உலகில் இதுவே முதல் தடவை!

— ரமா ராமநாதன்

குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்

1. பிருந்தாவனம் இங்கே இருக்கிறது (3)
4. கனடா என்பது (2)
5. செருப்பு அணிவது இதற்காக (3)
7. தினமும் இதைச் சாப்பிட்டால் நல்லது (2)
11. கர்ணனின் தாய் (3)
12. மிளகாய் இந்த நாட்டிலிருந்து வந்ததால் சில்லி என அழைக்கப்படுகிறது (2)
15. ரிக் என்பது (3)

வலமிருந்து இடம்

3. நெய்வேலியில் இது கிடைக்கிறது (5)
6. ஒன்பது கோள்களும் இதைச் சுற்றி வருகின்றன (4)
9. பூட்டைத் திறக்க இது தேவை (2)
10. இது கண்டுபிடிப்பதற்கு முன் ஓலைச்சுவடிகள்தான்! (4)
14. இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் (5)

மேலிருந்து கீழ்

1. மகன் என்பதை இப்படியும் அழைக்கலாம் (4)
2. காய்களில் ஒன்று. இதன் தலையில் கிரீடம் இருக்கும் (4)
3. கும்பகர்ணனுக்கு இது பிடிக்கும் (4)
8. இரவில் மினுக் மினுக்கென ஒளிர்வது (4)
10. இரும்பை இது ஈர்க்கும் (4)

கீழிருந்து மேல்

4. வாழைத் தண்டில் இச் சத்து உள்ளது (2)
13. பூக்களில் ஒன்று, கடைசி மூன்றெழுத்து குரங்கை நினைவூட்டும் (4)
15. தோட்டத்தைப் பாதுகாக்க இது அவசியம் (2)

— ஜி. மகாராஜன்,
ஒன்பதாம் வகுப்பு, 'ஆ' பிரிவு
அரசு உயர்நிலைப்பள்ளி,
பெரியதச்சூர் (அஞ்சல்)
திண்டிவனம்.

விடை : 69ஆம் பக்கம்

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி-1998

கதை எழுத ஆர்வமுள்ளவர்களுக்கு, இதோ ஓர் மகிழ்ச்சியான செய்தி! சிறுவர் இலக்கியம் செழிக்கத் தம்மை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்ட அழ. வள்ளியப்பா, கோகுலத்தின் முதல் கௌரவ ஆசிரியர். அவர் நினைவாக இந்த ஆண்டும் சிறுவர் சிறுகதைப் போட்டியை அறிவிப்பதில் கோகுலம் பெருமை கொள்கிறது.



பரிசு ரூ. 1000/-

1. இந்தப் போட்டியில் பள்ளி மாணவ மாணவியர் (+2 உட்பட) மட்டுமே கலந்து கொள்ளலாம். ஆசிரியர் அல்லது பெற்றோரின் கையொப்பமிட்ட சான்று இணைக்கப்பட வேண்டும்.

2. சிறுகதைகள் சிறுவர்களுக்கானதாக இருக்க வேண்டும். நகைச்சுவை, துப்பறிதல், சமூகம், வரலாறு, அறிவியல் என்று எதைப் பற்றியதாக வேண்டுமானாலும் இருக்கலாம். சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழியுடன் அனுப்ப வேண்டும். கோகுலத்தில், கதைகள் 3 முதல் 4 பக்கங்களுக்கு மேற்படாமல் அமைதல் வேண்டும்.

3. வெள்ளைத் தாளில் ஒரு பக்கம் மட்டுமே எழுதலாம். கையெழுத்து தெளிவாகப் புரியும்படி இருக்க வேண்டும். தட்டச்சு செய்தும் அனுப்பலாம். ஆனாலும் கட்டாயமில்லை.

4. பரிசு பெறாத, பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகளை ஒட்டிய உறையைக் கதைகளுடனேயே இணைக்க வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை. இது குறித்து எவ்விதக் கடிதப் போக்கு வரத்தும் வைத்துக் கொள்ளப்பட மாட்டாது.

5. இதில் கலந்து கொள்ளக் கட்டணம் ஏதும் இல்லை. ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால், ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக உறுதிமொழி இருக்க வேண்டும்.

6. முதல் பரிசு ரூ. 300/- (ஒரு கதைக்கு) இரண்டாவது பரிசு ரூ. 200/- வீதம் இரண்டு கதைகளுக்கு. மூன்றாவது பரிசு ரூ. 100/- வீதம் மூன்று கதைகளுக்கு. ஆகமொத்தம் ரூ. 1000/- பரிசாக வழங்கப்படும்.

7. தவிர, பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு சிறுகதையும் ரூபாய் ஐம்பது பரிசாகப் பெறும். கதைகளை முதல் முறையாக வெளியிடும் உரிமை கோகுலத்திற்கே உண்டு. பிறகு இதன் உரிமை முழுவதும் ஆசிரியருக்கே.

8. முடிவு தேதி 31.5.98. இதற்கு மேல் வருபவை பரிசீலனைக்கு ஏற்கப்பட மாட்டா. தபாலில் ஏற்படும் தாமதத்திற்கு கோகுலம் பொறுப்பேற்காது. நடுவர் குழு பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

9. அயல்நாட்டில் உள்ளவர்கள், இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியைக் கட்டாயம் தரவேண்டும்.

10. கதைகளை, **'ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடு தாங்கல், சென்னை - 600 097'** என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். உறையின் மேல் ***'அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி'*** என்று அவசியம் குறிப்பிட வேண்டும்.

11. போட்டி குறித்து எழும் எவ்விதப் பிரச்னைகளுக்கும், சந்தேகங்களுக்கும் கோகுலம் ஆசிரியர் எடுக்கும் தீர்ப்பே முடிவானதாகும்.

முட்டாள் ராணி!



ராமபுரியை ஆண்டு வந்த ரங்கநாயகி ஒரு முட்டாள் ராணி. வித்தியாசமான தண்டனைகளை அளிப்பதில் மட்டும் கெட்டிக்காரி.

ஒருமுறை சோமன், அவள் வீதி உலா வரும்போது வணக்கம் செலுத்த மறந்து விட்டான்.

''நன்றி கெட்டவன். என் உப்பைத் தின்று வளர்பவனுக்கு நன்றியில்லை. எனவே அவன் ஐந்து கிலோ உப்பைத் தின்ன வேண்டும்'' எனக் கட்டளையிட்டாள்.

சோமன் திகைத்தான். ஐந்து கிலோ உப்பை யாராவது சாப்பிட முடியுமா என்ன?

மந்திரி மதிராஜனிடம் ஓடினான். அவர் ஓர் யோசனை கூறினார்.

''ஏழு லிட்டர் தண்ணீர் வாங்கி வைத்துக் கொள்... இரவில்தான் தின்பேன் எனக் கூறிவிடு...''

ராணியும் ஒப்புக் கொண்டாள்.

மந்திரி சொன்னபடி, நடுநிசியில், கூட இருந்த காவலர் அயர்ந்து தூங்க, சோமன் உப்பை நீரில் நன்கு கரைத்து விட்டான்.

காலையில் வந்த ராணிக்கு ஆச்சர்யம். எப்படியாவது சோமனை ...ண்டித்தாக வேண்டும். ...ண்டும் கட்டளையிட்...ாள்.

''சாப்பிட்ட உப்பை ...யெல்லாம் உடனடியாக நீ ...வெளியே கொண்டு வர ...வேண்டும்!''

சோமன் மீண்டும் மந்...திரி மதிராஜனிடம் ஓடி...னான்.

''அட முட்டாளே... ...டுப்பகலில் வரவழைப்பதாகக் கூறு... அந்த நீரை நன்றாக வெயிலில் காட்டு. இதை நான் ஏற்கனவே எதிர்பார்த்தேன். ராணி குணம் எனக்குத் தெரியும்! கூடவே நிறைய பரிசும் கேள்... இனிமேல் எந்த தண்டனையும் கூடாது என வேண்டு!'' என்றார் மந்திரி.

சோமன் உற்சாகமானான்.

நீர் ஆவியானதால் கரைந்த உப்பு வந்தது. மீண்டும் வந்த உப்பைப் பார்த்து ராணி ஆச்சரியப்பட்டு சோமனுக்கு ஏராளமான பொன்னும், பொருளும் வழங்கினாள்.

— கே. சோமசேகர்


தங்க மாம்பழம்!

பெயருக்கேற்றாற் போல் வளமான ஊர், சுவர்ணபுரி. அங்கு ஒரு தாய் தேவேந்திரன், யுகேந்திரன், மகேந்திரன் என்ற மூன்று மகன்களுடன் வாழ்ந்து வந்தார். அவர்கள் வீட்டில் ஒரு அதிசய மாமரம் இருந்தது.

அந்த மாமரம் வருடத்திற்கொருமுறை ஒரேயொரு தங்க மாம்பழத்தை மட்டும் தரும். அது தங்க மாம்பழமாக இருந்த போதிலும் உண்ணக் கூடியது. அதை உண்பவர்களின் ஆயுள் ஐம்பது வருடங்கள் கூடுவதோடு மிகவும் அழகாகி விடுவார்கள். ஆனால் ஒவ்வொரு வருடமும் அந்த மாம்பழம் கனியும் சமயம், பறக்கும் பாம்பொன்று வந்து, அம்மாம்பழத்தைக் கவர்ந்து சென்று விடும். அந்த மாம்பழங்களைத் தன் மகன்களுக்குத் தர முடியவில்லையே என்ற வருத்தம் அத்தாய்க்கு உண்டு.


சிறுவர்களாக இருந்த மகன்கள் பெரியவர்களாகினர். மாம்பழத்தைப் பற்றி கேள்விப்பட்ட மூத்த மகனான தேவேந்திரன், தன் தாயிடம், "ஒரு கத்தியும், உண்பதற்கு பணியாரங்களும் தாருங்கள். நான் அந்த பறக்கும் பாம்பைக் கொன்று வருகிறேன்," என மாம்பழம் பழுக்கும் சமயத்திற்கு முன்பாகக் கேட்டான். தாயும் சம்மதித்து கத்தியும், பணியாரங்களும் கொடுத்தனுப்பினாள்.

தேவேந்திரன் மாமரத்தில் ஏறி ஒரு கிளையில் மறைவாக அமர்ந்து கொண்டான். பறக்கும் பாம்பின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தான். நேரம் கடந்து கொண்டே இருந்தது. பசிக்க ஆரம்பித்தது. பணியாரங்களைச் சாப்பிடத் துவங்கினான். சாப்பிட்டு முடித்ததும் உறக்கம் வந்தது. அந்தக் கிளையிலேயே படுத்துத் தூங்கி விட்டான். திடீரென்று 'உஸ்ஸென்று சத்தம். பறக்கும் பாம்பு கனியைக் கவர வந்து விட்டது. தேவேந்திரன் சுதாரித்துக் கொண்டு, கத்தியை எடுப்பதற்குள் அந்தப் பறக்கும் பாம்பு மாம்பழத்



துடன் பறந்து விட்டது. தங்க நிறம் கொண்ட பாம்பு இறக்கைகளைக் கொண்டிருந்தது. அதன் கண்கள் சாதாரண கண்கள் அல்ல. வைரங்கள். அதனுடைய இரட்டை நாக்கு ஓரடி நீளத்திற்கு நீண்டது. அந்தப் பாம்பின் நீளம் மூன்று ஆட்களின் உயரம் இருக்கும். இவற்றைக் கண்ட தேவேந்திரன் தோல்வியுடன் தன் தாயிடம் வந்து நடந்ததைச் சொன்னான்.

ஓராண்டு கழிந்தது. தங்க மாம்பழம் பழுக்கும் சமயமும் வந்தது. அப்போது யுகேந்திரன் தன் தாயிடம் தன் அண்ணனைப் போலவே, “எனக்கு ஒரு கத்தியும், பணியாரங்களும் கொடுங்கள். நான் அந்தப் பறக்கும் பாம்பைக் கொன்று தங்க மாம்பழத்தைப் பறித்து வந்து தருகிறேன்,'' என்று கேட்டான். அதற்கு “நீ உன் அண்ணனை விட அதிர்ஷ்டக்காரனாக இருப்பாய் என எண்ணுகிறாயா? மேலும் அந்தப் பொல்லாத பாம்பிடம் உன்னை அனுப்ப நான் தயாராக இல்லை,'' என்றார் அவன் அம்மா. ஆனாலும் யுகேந்திரன் தன் தாயிடம் பேசி சம்மதிக்க வைத்து கத்தியும் பணியாரங்களும் வாங்கிச் சென்றான்.



மாமரத்தில் ஒரு மறைவான கிளையாகப் பார்த்து ஒளிந்து கொண்டான். ஆனால் அவன் கண் மாம்பழத்தின் மீதே இருந்தது. நேரம் செல்லச் செல்ல யுகேந்திரனுக்கு சோர்வு ஏற்படத் தொடங்கியது. பசியும் ஏற்பட்டது. பணியாரங்களைச் சாப்பிட்டான். தூக்கம் அவனையும் பற்றியது. மீண்டும் பறக்கும் பாம்பு வந்து விட்டது. அதை உணர்ந்து தூக்குவதற்குள் பறக்கும் பாம்பு மாம்பழத்தைக் கவர்ந்து சென்றுவிட்டது.

கோ. சதீஷ்குமார்



இன்னும் ஓர் ஆண்டு சென்றது. மாம்பழம் கனியும் சமயமும் வந்தது. இளைய மகனான மகேந்திரன் தன் தாயிடம், "ஒரு கத்தி மட்டும் எனக்குக் கொடுங்கள். நான் அந்தப் பொல்லாத பறக்கும் பாம்பைக் கொன்று மாம்பழத்தை பறித்து வருகிறேன்" என்று கேட்டான். அவன் தாய், "உன் அண்ணன்களே தோல்வியுடன் திரும்பி விட்டனர். நீ வயதில் இளையவன். உன்னை நான் அனுப்ப மாட்டேன்" என்று கூறினார். ஆனால் மகேந்திரன் தன் தாயை சமாதானப்படுத்தி கத்தியை மட்டும் வாங்கிச் சென்றான்.


மாமரத்தின் மீதேறி மாம்பழத்துக்கு அருகிலேயே ஒரு கிளையில் கத்தியுடன் பறக்கும் பாம்பிற்காக மகேந்திரன் காத்திருந்தான். பறக்கும் பாம்பு உஸ்ஸென்று சத்தத்துடன் வந்தது. அதற்காகவே காத்திருந்த மகேந்திரன் கண்ணை மூடித் திறப்பதற்குள் கத்தியைப் பறக்கும் பாம்பின் மீது பாய்ச்சினான். காயம்பட்ட பறக்கும் பாம்பு உடனே தன் இருப்பிடத்திற்கு திரும்பிச் சென்றது.

தங்க மாம்பழத்தைப் பறித்துக் கொண்டு தன் தாயிடம் சென்றான், மகேந்திரன். தன் சகோதரர்களுடன் பறக்கும் பாம்பின் இருப்பிடத்தைக் கண்டு பிடித்துக் கொல்லக் கிளம்பினான். மாமரத்தில் இருந்து பறக்கும் பாம்பின் ரத்தம் சிந்திய அடையாளத்தை வைத்து மூன்று பேரும் சென்றனர். இரத்தம் ரொம்பத் தூரத்தில் இருந்த ஒரு பொந்து வரை சென்றது. தரையில் இருந்த அந்தப் பொந்தில்தான் பறக்கும் பாம்பு இருக்க வேண்டும் என முடிவு செய்தனர்.

''உங்க பையன் இப்படி தைதைன்னு குதிக்கிறானே!''

''குழந்'தை'தானே!''

— கானா



முதலில் தேவேந்திரன் கயிற்றைக் கட்டிக் கொண்டு இறங்கினான். பாதி தூரம் சென்றதும் இருளைக் கண்டு பயந்து கயிற்றை ஆட்டினான். மற்ற இருவரும் உடனே அவனைத் தூக்கினர். மேலே வந்தவுடன், யுகேந்திரன் இறங்கினான். அவனும் பாதி தூரம் சென்றவுடன் பயத்தால் கயிற்றை ஆட்டினான். அவனும் மேலே வந்து விட்டான். மூன்றாவதாக மகேந்திரன் இறங்குவதற்கு முன் தன் சகோதரர்களிடம், "நான் கயிற்றினை ஆட்டினால் பொந்தின் அடிமட்டத்தை அடையும் வரை இறக்கி விடுங்கள்" என்று கூறினான்.

மகேந்திரன் பொந்துக்குள் இறங்கினான். பாதி தூரம் சென்றவுடன் கயிற்றை ஆட்டினான். மேலும் இறக்கி விடப்பட்டு பொந்தின் அடிமட்டம் சென்று சேர்ந்தான். அதுவரை இருந்த இருள் நீங்கி ஒளிமயமாக அந்த இடம் காட்சியளித்தது. பெரிய அரண்மனை போல் இருந்தது அந்த இடம். அங்கு யாரோ அழும் சத்தம் கேட்டது. சத்தம் வந்த திசை நோக்கி மகேந்திரன் சென்றான். அங்கு ஓர் அறையில் சிறை போன்ற அமைப்பில் அழகிய பெண் இருந்தாள். அப்பெண்ணிடம், "நீ யார்? இங்கு எப்படி வந்தாய்? உனக்கு பறக்கும் பாம்பு இருக்குமிடம் தெரியுமா?" என வினவினான்.

"நான் சுவர்ணபுரியின் இளவரசி. என் பெயர் வாசுகி. என்னை மூன்று வருடங்களுக்கு முன் பறக்கும் பாம்பு கடத்தி வந்தது. இந்தப் பறக்கும் பாம்பு உண்மையில் ஒரு பூதம்.

"நூறு தங்க மாம்பழங்களைச் சாப்பிட்டால் இந்தப் பூதத்தை உலகில் யாரும் அழிக்க முடியாதாம். நூறாவது மாம்பழம் சாப்பிட்டதும் என்னை மணமுடித்து உலகை ஆளப் போவதாகத் திட்டம். ஆனால் இந்த ஆண்டு நூறாவது மாம்பழம் ஏனோ அதற்குக் கிடைக்கவில்லை போலிருக்கிறது.

"இந்தப் பறக்கும் பாம்பு மிகவும் பொல்லாதது. நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள்? உடனே சென்று விடுங்கள்" என்று கூறினாள்.


"அந்த மாம்பழத்தைப் பறித்தவன் நான்தான். வாசுகி, நான் அந்தப் பறக்கும் பாம்பைக் கொல்லத்தான் வந்திருக்கிறேன்.

குறளைக் கண்டுபிடியுங்கள்!

உண்மை அன்பு உள்ளத்தில் இருந்தால்...

மரங்கள் கூட மற்றோர் வாழத்
தாங்கள் வாழுதே — நாம்
மனித ராக இருந்தும் இதை
மறக்க லாகுமா?
புறாவுக் காக உயிர் கொடுத்த
புனித சிபியை — நாம்
போற்றிக் கொண்டே உதவ மறுத்தால்
பூமி தாங்குமா?
உள்ளத்திலே உண்மை அன்பு
இருந்திடும் என்றால் — நம்
உள் எலும்பும் மற்ற வர்க்கு
உதவிடக் கூடும் — நம்
உள்ளத்திலே அந்த அன்பு
இல்லை என்றாலோ — நம்மை
உயிர் சுமக்கும் சவங்கள் என்றே
உலகம் தூற்றுமே!

— ரா. பொன்ராசன்



அன்பிலார் எல்லாம் தமக்குரியர் — அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

அதைக் கொன்று, உன்னை விடுவிக்கிறேன்" என்றான் மகேந்திரன்.

"அதைக் கொல்வது அத்தனை எளிதன்று. அதை சாதாரணமாகக் கொல்ல முடியாது. அதனுடைய கண்கள் வைரங்கள். அதைப் பறித்தால்தான் அதன் உயிர் போகும்" எனபறக்கும் பாம்பு பற்றிய ரகசியத்தைக் கூறினாள் வாசுகி.

பறக்கும் பாம்பைத் தேடிச் சென்றான். ஒரு பெரிய அறையில் பறக்கும் பாம்பு இருப்பதைக் கண்ட மகேந்திரன் அது உறங்கும் சமயம் பார்த்து, அதன் கண்களிரண்டிலும் வாளைப் பாய்ச்சி வைரங்களை எடுத்தான். பறக்கும் பாம்பின் உயிர் பிரிந்தது.

பின்னர் வாசுகியை விடுவித்து கயிறு இருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றான். வாசுகியிடம், "மேலே என் சகோதரர்கள் இருக்கின்றனர். உன் பொருட்டு என் சகோதரர்கள் சண்டையிட்டுக் கொள்ளலாம்" என்று கூறினான்.

அதற்கு வாசுகி, "அவ்வாறு உங்கள் சகோதரர்கள் சண்டையிட்டுக் கொண்டால், மாய மோதிரத்தால் உண்டான பட்டாடையை அணிந்திருப்பவரையே மணந்து கொள்வேன் என்று அவர்களிடம் சொல்லுவேன். இதை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள்" என்று மாய மோதிரத்தைக் கொடுத்தாள்.

மகேந்திரன் சொன்னதைப் போன்று வாசுகியைக் கண்டதும் கயிறை மீண்டும் கீழே இறக்காமல் தேவேந்திரனும், யுகேந்திரனும் அப்படியே விட்டு விட்டுச் சென்று விட்டனர். மகேந்திரன் மாய மோதிரத்தின் உதவியால் மேலே வந்தடைந்தான். வீட்டிற்குச் சென்றான்.

இன்னும் வாசுகிக்காகச் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள் அவனின் சகோதரர்கள். மகேந்திரன் மாய மோதிரத்தை எடுத்து அணிய, அழகிய பட்டாடையொன்று தோன்ற, வாசுகி மகேந்திரனையே மணம் முடிக்க விரும்புவதாகக் கூறினாள். சுவர்ணபுரி மன்னரின் சம்மதத்தோடு மகேந்திரன் வாசுகியை மணமுடித்து சுவர்ணபுரி மன்னனாகி நல்ல முறையில் அரசாண்டான்.


எங்கள் ஊரில் நடந்தது!



கரம் பாணி!

நானும் தம்பியும் விடுமுறைக்கு சேலம் சென்றிருந்தோம். பக்கத்து வீட்டில் ஹிந்தி பேசும் குடும்பம் இருந்தது. அவர்கள் பேசுவதை என் தம்பி கூர்ந்து கவனிப்பான். விடுமுறை முடிந்து ஊருக்குத் திரும்பினோம். தம்பி தன் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தான். நான் காது கொடுத்துக் கேட்டேன். "நான் சேலத்தில் நன்றாக ஹிந்தி கற்றுக் கொண்டேன்" என்றான் தம்பி. அவன் நண்பர்கள் வியந்தனர். அதில் ஒருவன் மட்டும் "ஹிந்தியில் ஒரு வார்த்தை சொல்" என்றான். உடனே "கரம் பாணி, அப்படின்னா சுடு தண்ணீர்" என்றான் தம்பி. "சரி, ஆறின தண்ணீருக்கு என்ன பெயர்?" மீண்டும் கேட்டான் நண்பன். சிறிது நேரம் திரு திருவென விழித்தவன் பிறகு சமாளித்துக் கொண்டு "ஹிந்திக்காரர்களுக்கு ஆறின தண்ணீரே பிடிக்காது. எனவே ஹிந்தியில் அப்படி ஒரு வார்த்தையே கிடையாது" என்றவுடன் என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை!


கே.என். பாலா, வத்தலக்குண்டு.



எங்கே நடக்கிறது?

டி.வியில் கிரிக்கெட் விளையாட்டை பார்த்துக் கொண்டிருந்தோம். அங்கு வந்த பெரியம்மா "எங்கே நடக்குது விளையாட்டு?" என்று கேட்டார். நான் "இந்தூரில் நடக்கிறது" என்றேன். "இந்தூர்லயா நடக்குது" என்று ஆச்சரியப்பட்டார். சிறிது நேரத்தில் "ஆமாம் நம்ம ஊர்ல இவ்வளவு பெரிய மைதானம் இருக்கா?" என்று மீண்டும் கேட்டார். இந்தூர் என்பதை இந்த ஊர் என்று புரிந்து கொண்டதை அறிந்த நான், விளக்கமாகக் கூறினேன்.

பி.ஆர். பார்த்தசாரதி, மன்னார்குடி.



திருடனை அடித்தேன்!




திருவிழாவிற்காக மாமா வீட்டிற்குப் போனோம். இருட்டி விட்டது. "நான் தோட்டத்துப் பக்கம் போயிட்டு வரேன்" என்றேன். "திருடர்கள் பயம் அதிகமாகி விட்டது. காலையில் போகலாம்" என்றார் மாமா. சிறிது நேரம் கழித்து ஜன்னல் வழியே தோட்டத்தைப் பார்த்

தேன். அங்கு யாரோ வேஷ்டி கட்டிக் கொண்டு நிற்பது போலிருந்தது. மெதுவாக தோட்டத்துக்குச் சென்று ஒரு சிறிய கட்டையில் அந்த உருவத்தை அடித்தேன். அந்த உருவம் பொத்தென கீழே விழுந்தது. எல்லோரையும் சத்தம் போட்டுக் கூப்பிட்டேன். மாமா வேகமாக ஓடி வந்து விளக்குப் போட்டார். "டேய் காலையில தான் திருஷ்டி பொம்மை வாங்கிக் கட்டினேன். அதற்குள் இப்படி கீழே தள்ளிட்டியே" என்றவுடன்தான் எனக்குப் புரிந்தது.

கே.ராஜா, வத்தலக்குண்டு.

ஐஸ் இருக்குதா?



எதிர் வீட்டுக் குழந்தை ஐஸ்வர்யா எங்கள் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்தாள். அப்போது ஐஸ்வர்யாவின் அம்மா வந்து "ஐஸ் இருக்கிறதா?" என்று கேட்டார். நானும் ஐஸ்வர்யாவை அழைத்து வந்தேன். "நான் கேட்டது ஐஸ்கட்டியை" என்றவுடன், சிரித்துக் கொண்டே ஐஸ் கட்டி எடுத்துக் கொடுத்தேன்.

இ. ஸ்ரீவித்யா, கும்பகோணம்.

மூன்றும் இரண்டும்?



எதிர்வீட்டில் நான்காம் வகுப்பு படிக்கும் சிறுவன் இருக்கிறான். அவன் கொஞ்சம் வினோதமானவன். மூன்றும் இரண்டும் எத்தனை என்றால் தெரியாது. அதையே அம்மா மூன்று லட்டு கொடுத்தார். அப்பா இரண்டு லட்டு கொடுத்தார். உன்னிடம் எவ்வளவு என்றால் 'ஐந்து' என சரியாகச் சொல்லி விடுவான். அதே போல் ஆறில் இரண்டு போனால் எத்தனை என்றால் தெரியாது. உன்னிடம் ஆறு மிட்டாய் இருக்கு. அதில் இரண்டு மிட்டாய்களை உன் தங்கைக்கு கொடுத்திட்டே. இப்ப எத்தனை இருக்கும்? என்றால் சரியாக 'நான்கு' எனச் சொல்லி விடுவான்!

எம். ரவிக்குமார், வெண்ணை கிராமம்.

எங்கள் ஊரில் நடந்தது!

என்ன வேண்டும்?

பொங்கலுக்கு முதல் வாரம் அப்பா என்னிடம் "உனக்கு பொங்கலுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார். நான் "வாட்ச் மட்டும் போதும்பா" என்றேன். விளையாடி விட்டுத் திரும்பிய தம்பியிடமும் "பொங்கலுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார் அப்பா. உடனே அவன் "என்னங்கப்பா இது கூட தெரியாதா, அரிசி, வெல்லம், நெய், முந்திரி வேண்டும்" என்றவுடன் வயிறு குலுங்கச் சிரித்தோம்.

ஆர். சதீஷ்குமார், தாரமங்கலம்.



உயிரைக் காப்பாற்றிய நாய்!

ஜானகிமணாளன்

அந்தச் சிறுவனை எல்லோரும் 'அப்' என்று செல்லமாக அழைப்பார்கள். அவன் மிகவும் திறமைசாலி. புத்தி கூர்மை மிக்கவன். கடும் உழைப்பாளி. அத்துடன் எல்லா உயிர்களிடத்திலும் மிகுந்த அன்பு உடையவன்.

அவன் தந்தை ஒரு ஏழை விவசாயி. அவர் நாள் முழுவதும் வியர்வை சிந்தி வயலில் கடுமையாக வேலை செய்வார். என்றாலும் வீட்டில் உள்ள அனைவருக்கும் அவரால் உணவு தேடித் தர முடியவில்லை. ஆனால், அவர் அதற்காகச் சோர்ந்து விடுபவர் இல்லை. வரவுக்குத் தக்கவாறு செலவு செய்து, தனது சிறிய மரத்தால் ஆன வீட்டில் தைரியத்துடனும், மகிழ்ச்சியுடனும் வாழ்ந்து வந்தார்.

'அப்'பின் தாய் மிகவும் நல்லவர். அவனை மிகவும் நேசித்தார். தினம் தினம் நல்ல கதைகளைச் சொல்வார். உயர்ந்த நீதிகளை அவனுக்குப் புரிய வைப்பார். பிறர் வாழப் பாடுபட வேண்டும் என்று அடிக்கடி கூறுவார். மனிதர்களை மட்டுமல்லாது, எல்லா உயிர்களிடமும் அன்பும் கருணையும் கொண்டு வாழ வேண்டும் என்று வலியுறுத்துவார்.

ஒருநாள், அப்பாவுக்கு உதவியாக வயலில் வேலை செய்துவிட்டு, வீடு திரும்பிக் கொண்டிருந்தான் அப். அப்போது, வழியில் சாலையோரம், ஒரு நாய்க்குட்டி தரையில் விழுந்து புரண்டு கொண்டிருந்தது. அதன் காலில் பலமாக அடிபட்டிருந்தது. அந்தக் காயத்திலிருந்து ரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. யாரோ குறும்புக்காரச் சிறுவன் அதன் மீது கல் எறிந்து, அதைக் காயப்படுத்தி விட்டான் போலிருக்கிறது.

உடனே 'அப்'பிற்கு, 'எல்லா உயிர்களிடத்திலும் அன்பும் கருணையும் கொண்டு வாழவேண்டும்' என்று அவன் தாயார் அடிக்கடி கூறும் அறிவுரைதான் நினைவுக்கு வந்தது.

'அப்' அந்த நாய்க் குட்டியைக் கையில் தூக்கிக் கொண்டான். வலி பொறுக்க முடியாமல் 'வீல் வீல்' என்று, அது கதறியது. அவன் அன்புடன் அதன் தலையைத் தடவிக் கொடுத்தான். அவனுடைய அந்த இதமான தொடு உணர்வு அக்குட்டிக்கு ஆறுதலாக இருந்தது போலிருக்கிறது. உடனே, அது தன் அலறலை நிறுத்தி விட்டு, 'அப்'பைப் பார்த்து வாலாட்டியது.

'அப்' நாய்க் குட்டியைத் தன் வீட்டுக்குத் தூக்கிச் சென்றான். நீரைக் கொதிக்க வைத்துப் பஞ்சில் நனைத்து, அதன் காயத்தைத் துடைத்துச் சுத்தம் செய்தான். காயத்தில் மருந்து வைத்துக் கட்டினான்.

வீட்டில் அவனுடைய பங்காக, அவன் அம்மா கொடுத்திருந்த ரொட்டித் துண்டை, அந்த நாய்க்குட்டிக்கு ஊட்டி விட்டு, அதன் பசியைப் போக்கினான். பிறகு, படுக்கையில் தன் அருகிலேயே அதைப்



படுக்க வைத்துக் கொண்டு தூங்கிப் போனான். தினம் தினம் அவ்வாறே செய்தான்.

சில தினங்களில், அந்த நாய்க்குட்டி முற்றிலுமாகக் குணமடைந்து விட்டது. அதால், நன்றாக ஓடியாட முடிந்தது. எனவே, 'அப்' அதை எடுத்து வந்த இடம் வரையில் சென்று, "உனக்கு நன்றாகக் காயம் ஆறிப் போய் விட்டது; எங்காவது ஓடிப் போ..." என்று கூறிக் கொண்டே, அதை அங்கேயே விட்டு விட்டு, வீடு திரும்பி விட்டான்.

ஆனால், நடந்தது என்ன தெரியுமா...? அந்த நாய்க்குட்டி, அவனுக்கு முன்பே, திரும்பவும் 'அப்'பின் வீட்டுக்கு ஓடி வந்து விட்டது. அது அவனைப் பிரிந்து செல்ல மறுத்து, அவன் காலையே சுற்றிச் சுற்றி வந்தது. அதைக் கண்ட 'அப்'பின் தாயார், "இனி அது நம் வீட்டிலேயே இருந்து விட்டுப் போகட்டும்" என்று கூறி விட்டார்.


இவ்வாறு அந்த நாய்க்குட்டியும், அந்தச் சிறுவனும் நெருங்கிய நண்பர்களாகி விட்டனர். 'அப்' எங்கு சென்றாலும் நாய்க்குட்டியும் வாலை ஆட்டிக் கொண்டே பின்னால் சென்றது. குட்டி இல்லாமல் அவனையோ, அல்லது அவன் இல்லாமல் குட்டியையோ தனியாகப் பார்க்க முடியாது. அத்தனை நெருக்கம்.

இரண்டு மூன்று ஆண்டுகள் ஆயின. அதற்குள் நாய்க்குட்டி வளர்ந்து பெரிய நாய் ஆகிவிட்டது.

ஒரு கோடைக் காலத்தில், 'அப்' காட்டுக்குள் போய் வேட்டையாடி முயல்களைப் பிடித்து வர விரும்பினான். உடனே தன் தாயிடம் சென்று அனுமதி கேட்டான். அதற்கு அவர், "சரி... போய் வா.. ஆனால் ஒரு நிபந்தனை. அதிகாலையில் கிளம்பிச் சென்று விட்டு, மதிய உணவுக்கு வீடு திரும்பி விட வேண்டும்..." என்றார்.

மறுநாள், பொழுது விடிவதற்குள் 'அப்' கிளம்பிக் காட்டுக்குப் போனான். வழக்கம் போல், நாயும் அவனுடன் கிளம்பிச் சென்றது.

நண்பகல் கடந்து பிற்பகலும் வந்து விட்டது. ஆனால், காட்டுக்குள் சென்ற 'அப்' சொன்னபடி, மதிய உணவுக்கு வீடு திரும்பவில்லை. அவன் தாய் மகனைக் காணாமல் துடிதுடித்துப் போனார். மெல்ல





காகம் : ஏன் குரல் ஒருமாதிரியா யிருக்கு?

குயில் : நேற்று ஒரு வீட்டில் மீந்த ஐஸ்கிரீம் போட்டதைச் சாப்பிட்டு விட்டேன்.

— குடந்தை மோகன்.

மெல்ல மாலையும் வரலாயிற்று.

வீட்டில் இருந்த எல்லாரையும் கவலை ஆட்கொண்டது. உடனே 'அப்'பின் தந்தை, சில அக்கம் – பக்கத்தவர்களைக் கூட்டிக் கொண்டு, காட்டுக்குள் மகனைத் தேடிக் கண்டுபிடித்து வரக் கிளம்பிச் சென்றார்.

காட்டில் அவர்கள் ஒரு இடம் விடாமல் தேடி விட்டனர். 'அப்' அவர்கள் கண்ணில் படவே இல்லை. அவன் எங்கோ தொலைந்து போய் விட்டான் என்று கருதி, அவர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்ப உத்தேசித்தனர்.

அப்போது, சற்று தூரத்திலிருந்து நாயின் குரைப்பு ஒலி கேட்டது. உடனே 'அப்'பின் தந்தை, "இது எங்கள் வீட்டு நாயின் குரலேதான். அருகில்தான் எங்கோ சத்தம் கேட்கிறது. என் மகன் ஏதோ ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்க வேண்டும்... அதனால்தான் அவனுடைய நாய் குரைக்கிறது" என்றார்.

அது ஒரு குன்றுப் பிரதேசம். அங்கு ஒரு பெரிய பாறை கிடந்தது. நாய், தன் கால்களால், அப்பாறையைப் பிராண்டிப் பிராண்டி உரக்கக் குரைத்துக் கொண்டிருந்தது. அது கொஞ்சம் பெரிய பாறை. அதை ஏன் நாய் தன் காலால் பிராண்ட வேண்டும்?

அருகில் போய்ப் பார்த்த பிறகுதான் அவர்களுக்கு எல்லா விவரமும் புரிந்தது.

அந்தப் பாறை ஒரு குகையின் வாயிலை அடைத்துக் கொண்டு விழுந்து கிடந்தது. நாய் ஏன் அதைப் பிராண்ட வேண்டும்? ஒரு சமயம், 'அப்' குகையினுள் சிக்கிக் கொண்டு வெளிவர முடியாமல் தவிக்கிறானோ...? ஆம், அப்படித்தான் இருக்க வேண்டும்.

உடனே, எல்லாரும் ஒன்றுசேர்ந்து, அந்தப் பெரிய பாறையைக் குகை வாயிலை விட்டு நகர்த்தித் தள்ளினார்கள். அவர்கள் நினைத்தது சரிதான். குகைக்குள் 'அப்' சுருண்டு விழுந்து கிடந்தான்.

அவன் தந்தை சட்டென்று ஓடிப் போய், அவன் மூக்கில் கை வைத்துப் பார்த்தார். நல்லவேளை! மூச்சு ஓடிக் கொண்டிருந்தது. இரண்டு பேராகத் தூக்கி, 'அப்'பைக் குகைக்கு வெளியில் கொண்டு வந்தனர். வெளிக்காற்று முகத்தில் படத் தொடங்கியதும், 'அப்' நன்றாக மூச்சை இழுத்து விடத் தொடங்கினான். சற்று நேரத்தில் அவன் சோர்வு நீங்கிக் கண்விழித்தான். இனி கவலை இல்லை. 'அப்' பிழைத்துக் கொண்டான்.

"மகனே அப்...! நீ எப்படி இந்தக் குகைக்குள் மாட்டிக் கொண்டாய்...?" என்று வினவினார், அவன் தந்தை.


"அதுவா...? நான் ஒரு முயலைத் துரத்திக் கொண்டு இந்தப் பக்கமாக ஓடி வந்தேன். அந்த முயல் இந்தக் குகைக்குள் ஓடி விட்டது. நானும் இதற்குள் ஓடினேன். அப்போது இந்தப் பாறைக்கு என்ன ஆயிற்றோ தெரியவில்லை. குகை வாயிலுக்கு மேல், குன்றின் மீது இருந்த இது, உருண்டு கீழே விழுந்து, வாயிலை அடைத்துக் கொண்டு விட்டது. நான் உள்ளே மாட்டிக் கொண்டு விட்டேன்" என்றான் 'அப்'.


"பாறையை இந்த நாய் மட்டும் பிராண்டிப் பிராண்டிக் குரைத்திருக்காவிட்டால், நீ உள்ளே மாட்டிக் கொண்டிருப்பது எங்களுக்குத் தெரியாமலே போயிருக்கும். நாய் தான் உன்னைக் காப்பாற்றியுள்ளது..." என்றார் ஒருவர்.

"முன்பு இந்த நாய் அடிபட்டுக் கிடந்த போது, இதற்கு உதவி செய்து, நீ இதைக் காப்பாற்றினாய்... அந்த நன்றியை மறவாமல், அது இன்று உன்னைக் காப்பாற்றி விட்டது..." என்று நாயைப் புகழ்ந்தார் இன்னொருவர்.


அதை ஆமோதித்த 'அப்' அந்த நாயைத் தூக்கி மார்போடு அணைத்துக் கொண்டு, ஆசையோடு முத்தமிட்டான்.

'அப்' என்ற அந்த 'அப்பிரகாமை' நாய் மட்டும் காப்பாற்றியிராவிட்டால் என்ன ஆகியிருக்கும்? அமெரிக்க நாட்டுக்குப் பிற்காலத்தில் ஒரு ஜனாதிபதி அல்லவா கிடைக்காமல் போயிருப்பார்?


சுந்தரும் மோகனும் ~
ஏண்டா மோகன், ஒருமாதிரியா இருக்கே?
நேற்று அப்பா அம்மா என்னைக் கடைக்குக் கூட்டிட்டு போய் என் பிறந்த நாளுக்குப் புதுத் துணி வாங்கிட்டு ஐஸ்கிரீம் வாங்கித் தரமாட்டேன்னுட் டாங்க!
உனக்குப் பூச்சிப் பல்-ட்ரபுள். அதனால சொல்லியிருப்பாங்க!
அதெல்லாம் இல்லடா! வெறும் கஞ்சத் தனம்!
அப்படிப் பேசாதே! கஞ்சம்னா, நல்ல துணி இதெல்லாம் வாங்கித் தந் திருப்பாங்களா!
அன்று சனிக்கிழமை. அப்பா அம்மா வேலைக்குப் போயிருந்தபோது –
ஐஸ்! கப் ஐஸ்! பால் ஐஸ்!
வீட்லதான் யாரும் இல் லையே. பேனா வாங்கற காசுல நாலு ஐஸ் வாங்கிச் சாப் பிடலாம்...
கதை: எஸ். பி. சிவகுமார்
படம்:



மோகன் ஒரே நேரத்தில் நாலு வகை ஐஸ்கிரீமையும் அவசர அவசரமாக முழுங்கினான் –
அன்று இரவு –
என்னது! மோகனுக்கு இப்படி திடீர்னு காய்ச்சல் அதிகமாயிட்டே போகுது?
டாக்டரை அழைச்சுட்டு வர்றேன்!
டாக்டர் வந்து –
ஏன் திடீர்னு வந்துதுன்னு தான் தெரியலை!
பயப்படாதீங்க!
என் பையனை காப்பாத்துங்க டாக்டர். என்ன செலவானாலும் பரவாயில்லை
பார்க்கிறேன்..
இல்லை.. வந்து.. நான்தான் டாக்டர், அம்மா அப்பாவுக்குத் தெரியாமல் நாலு ஐஸ்கிரீம் ஒண்ணா சாப்பிட்டேன்!
ஐஸ் ஏதாவது சாப்பிட்டானா?
ஆங்.. அதுதான் காரணம்.. நல்ல பையன் உண்மையைச் சொல்லிட்டான்!
நாங்க வாங்கித் தந்தால்தானே சாப்பிடுவதற்கு!
அம்மா, அப்பா, என்னை மன்னிச்சுடுங்க!


வேறு அறையில்
நீங்களும் ரொம்பக் கண்டிப்பா இருக்க வேண்டிய அவசிய மில்லை. எப்பவாவது - ஐஸ்கிரீம் சாப்பிடுவதில் தப்பில்லை!
தேங்க்ஸ் டாக்டர்!
மறுவாரம் பள்ளியில் சுந்தரிடம் நடந்ததைச் சொன்னான்
அப்பாவும் அம்மாவும் ரொம்ப கஞ்சம்னு நினைச்சேன். 'ஆனா காய்ச்சல் வந்தபோதுதான் உண்மை புரிந்தது!
இப்ப வாவது புரிந்ததே!



ஆப்பிரிக்க யானைகள் அழிந்து வருகின்றனவா?

உங்கள் எல்லோருக்கும் என்னை மிகவும் பிடிக்கும். என்னை அடையாளம் தெரிகிறதா? என்ன பதிலே இல்லை! ஓ... உங்களில் பலருக்கு என்னை பார்க்கும் வாய்ப்பில்லை என்பது என் நினைவுக்கு வருகிறது.

ஆனால் என் சகோதரனை நீங்கள் நன்கு அறிவீர்கள்! கண்டு பிடிக்க் முடியவில்லையா, நானே சொல்லி விடுகிறேன். என் சகோதரன் ஆசிய யானை. நான் ஆப்பிரிக்க யானை.

நிலத்தில் வாழக்கூடிய விலங்குகளில் மிகப் பெரியவை என்ற பெருமை எங்களுக்கு இருப்பதில் எனக்கு மகிழ்ச்சிதான்!

எங்களில் பல இனங்கள் அழிந்து விட்ட நிலையில் எஞ்சியிருப்பது நானும் என் சகோதரனும் மட்டுமே!

உங்களைப் போன்று தனிமை விரும்பிகள் இல்லை நாங்கள். அம்மா, அப்பா, அத்தை, மாமா, மகள், மகன் போன்ற உறவு முறைகள் எங்களுக்கும் உண்டு. ஒரு பெரிய கூட்டத்தில் 50 முதல் 100 யானைகள் வரை இருப்போம் என்றால் எங்கள் குடும்பத்தை கற்பனை செய்து பார்த்துக் கொள்ளுங்கள்!

கதைகளில் யானை பலம்' பெற்று கதாநாயகன் எதிரிகளை வீழ்த்தினான் என்று படித்திருப்பீர்கள். உண்மையில் நாங்கள் பெரும் பலமாகக் கருதுவது துதிக்கையைத்தான்! எங்கள் துதிக்கை மிகவும் சிறப்பானது. 'டூ இன்

ஒன்' என்று சொல்வீர்களே - அதே போல் இது மூக்காகவும், கையாகவும் இரண்டு வேலைகளைச் செய்கிறது.

துதிக்கையின் உதவியால் வாசனையை வைத்தே உணவைக் கண்டறிந்து விடுவோம். பின் தந்தங்களின் உதவியால் தோண்டி துதிக்கையால் எடுத்து விழுங்கி விடுவோம். ஒரு பெரிய மரத்தையே பெயர்த்து தூக்கும் சக்தி துதிக்கைக்கு இருக்கிறதென்றால் இதன் பலத்தை நீங்களே கணித்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் நண்பர்களைப் பார்த்தால் 'ஹலோ' சொல்லி கை குலுக்குவதைப் போல நாங்கள் துதிக்கையால் ஹலோ சொல்லி எங்கள் அன்பை வெளிப்படுத்துவோம்.

எங்களின் இரண்டு முன் பற்களும் மிக நீளமானது. இதை நீங்கள் தந்தம் என்று அழைக்கிறீர்கள். எங்களில் ஆணும் பெண்ணும் நீண்ட தந்தங்களைப் பெற்றிருக்கிறோம். ஆசிய யானைகளில் பெண் யானைகளுக்கு தந்தம் வாய்க்குள் சிறியதாக இருக்கும். ஆணுக்கு மட்டுமே

எஸ். சுஜாதா


பெரிய தந்தம் உண்டு.

இத் தந்தங்களால் மரப் பட்டைகள், கிழங்குகள் போன்றவற்றை தோண்டி எடுப்போம். எங்கள் எதிரிகளுடன் போராடவும் தந்தம் பயன்படுகிறது.

இவ்வளவு பயனுள்ள அழகான தந்தத்தால் தான் எங்களுக்கு ஆபத்து அதிகம். எப்படி தெரியுமா? தந்தங்கள் விலை மதிப்புள்ளவை. பணத்திற்கு ஆசைப்பட்டு தந்தங்களுக்காக எங்களை வேட்டையாடுகின்றனர். இதனால் எங்கள் இனம் பெரும் அபாயத்தில் இருக்கிறது.

எங்களின் சாப்பாட்டு விஷயத்தைக்





நாளைக்கு 170 கிலோ உணவு தேவைப்படுகிறதே, இப் பெரிய உருவத்திற்கு.

இலைகள், கிழங்குகள், கனிகள், மரப் பட்டைகள் போன்றவையே எங்களின் உணவு. இதில் மரப்பட்டைகள் என்றால் எங்களுக்கு மிகவும் பிடிக்கும்!

உங்களுக்கு நீங்களே ஒரு கஷ்டத்தை உருவாக்கிக் கொள்ளும்போது 'யானை தன் தலையில் மண்ணை வாரி போடுவது போல' என்று பழமொழி சொல்வீர்கள். ஆனால் எங்கள் கஷ்டத்தைப் போக்கிக் கொள்ளவே நாங்கள் மண்ணை வாரி போட்டுக் கொள்கிறோம். எங்களுடைய தோல் மிகவும் தடிமனாக இருப்பதால் எறும்பு, பூச்சி, புழுக்கள் ஊர்வதை உணர முடியாது. எனவே மண்ணைப் போட்டு பூச்சிகளிடமிருந்து காத்துக் கொள்கிறோம்.

ஆசிய யானைகள் இருளடர்ந்த நிழற் பகுதியையே விரும்பும். நாங்களோ வெயிலிலும் சுற்றித் திரிவோம்.

கேட்டால் மயக்கமாகி விட மாட்டீர்களே! 24 மணி நேரத்தில் 16 மணி நேரம் உணவு தேடுவதிலேயே செலவிடுவோம். ஏன் என்றால் எங்கள் உணவுத் தேவை அதிகம். ஒரு

அறிவியல் உண்மைகள்


- ஆப்பிரிக்க, ஆசிய யானைகள் எலிபான்டிடீ (Elyphantidae) என்ற இனத்தைச் சார்ந்தவை.
- ஆப்பிரிக்க யானைகள் உருவத்தில் பெரியவை.
- ஆண், பெண் இரண்டிற்கும் நீண்ட தந்தங்கள் உண்டு.
- ஆண் யானை 11 முதல் 11½ அடி வரை வளரும். பெண் யானை 9 முதல் 10 அடி வரை வளரும்.
- பெருங் கூட்டமாக வசிக்கும். ஒரு கூட்டத்தில் 50லிருந்து 100 யானைகள் இருக்கும்.
- 2½ ஆண்டுகளுக்கு ஒருமுறை தாய் குட்டி ஈனும்.
- குட்டிகள் ஆறு மாதம் வரை தாய்ப்பால் குடித்து வளரும். பிறகு இலை, கிழங்குகளைச் சாப்பிட ஆரம்பிக்கும். இரண்டு ஆண்டுகள் வரை பால் குடிப்பதை நிறுத்தாது.
- குட்டி 12 லிருந்து 14 வருடங்கள் தாயின் அரவணைப்பில் வளரும்.
- துதிக்கை மூக்காகவும், கையாகவும் செயல்படுகிறது.
- பார்வை குறைவானது. கேட்கும் சக்தி அதிகம்.
- ஒரு தடவைக்கு நான்கு பற்கள் முளைக்கும். இந்தப் பற்கள் விழுந்த பின் அடுத்த நான்கு பற்கள் முளைக்கும். இவ்வாறு இதன் வாழ்நாளில் 24 பற்கள் தோன்றும். 24வது பல் விழும்போது யானையின் வாழ்க்கையும் முடிந்து விடும்.

இன்னொரு முக்கியமான விஷயம். என் சகோதரர்களின் காதைப் பார்த்தே வியந்திருப்பீர்கள். அவர்களின் காதை விட எங்கள் காது மிகவும் பெரியது. காதுகளை விசிறி போல் வீசி எங்களைக் குளிர்ச்சியாக்கிக் கொள்வோம்.

இரண்டரை ஆண்டுகளுக்கு ஒரு முறை பெண் யானை குட்டி போடும். குட்டி பிறந்த இரண்டாவது நாள் நன்றாக நடமாடும். ஆறு மாதம் வரை தாய்ப் பாலே உணவு. பிறகு மற்ற உணவுகளை சாப்பிடத் தொடங்கும். 12 முதல் 14 வருடங்கள் தாயின் மேற்பார்வையிலேயே வாழும். நான்கூட என் அம்மாவுடன்தான் இருக்கிறேன்.

தாய் யானை, குட்டிக்கு தண்ணீர் குடிப்பதற்கும், தண்ணீரைப் பீய்ச்சியடிப்பதற்கும் கற்றுக் கொடுக்கும் அழகைக் காண இரண்டு கண்கள் போதாது!

உங்கள் ஆசிய யானைகளை விட நாங்கள் உருவத்தில் சில மாற்றங்களைப் பெற்றிருக்கிறோம். எங்களை விட உங்கள் யானைகள் அழகிலும், அறிவிலும் சிறந்தன. சாதுவானவை!




''என்ன நரியாரே! காட்டுல எல்லா மிருகங்களும் ஏன் கூட்டம் கூடி நிக்கிறாங்க?''

''தலைவரே! இந்த காட்டுக்கு ரொம்ப வருசமா நீங்களே தலைவரா இருக்கீங்களாம்; அதனால உங்களை மாத்திட்டு புதுத் தலைவரை தேர்ந்தெடுக்கப் போறாங்களாம்!''

— தேவந்தி துரைராஜ், திருப்பத்தூர் - 2.

உங்களைப் போன்ற நல்லவர்களால் என் சகோதரர்களான ஆசிய யானைகள் இன்று பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஆனால் நாங்களோ 'அழிந்து வரக்கூடிய விலங்குகளின் பட்டியலில் இடம் பெற்று விட்டோம். பிற்காலத்தில் எங்களை புத்தகத்தில் மட்டுமே பார்க்க முடியும் என்ற நிலைக்குத் தள்ளி விடாதீர்கள். காப்பாற்றுங்கள்!

- மிகவும் வலிமையானது.
- இலைகள், கனிகள், கிழங்குகள், மரப்பட்டைகளே உணவு.
- ஆசிய யானைகளை விட மிகப் பெரிய காது இதற்கு உண்டு.
- ஆண் யானை ஒரு நாளைக்கு 170 கிலோ உணவு வரை உண்ணும். இதற்காக பதினாறு மணி நேரம் நீண்ட பயணத்தை மேற்கொள்ளும்.
- பெரிய தலையாக இருப்பதால் தலையை நீட்டியோ, பெரிய உடம்பாக இருப்பதால் குனிந்தோ உணவு தேட இயலாது. எனவே துதிக்கை இந்த வேலைகளைச் செய்கிறது.
- இவை மேய்ச்சல் நிலங்கள் மற்றும் காடுகளில் வாழ்கின்றன.
- தந்தம் விலை மதிப்புள்ளது. இவற்றால் பல பொருட்கள் செய்யப்படுகின்றன.
- தந்தத்தால் மரத்தைப் பெயர்க்கும்போதோ, மண்ணைத் தோண்டும்போதோ இவை உடைந்து விடுவதும் உண்டு.
- நூறு முதல் நூற்றி இருபது ஆண்டுகள் வரை உயிர் வாழும்.
- யானையின் கால்கள் மற்ற விலங்குகளின் கால் அமைப்பைப் போல் இருக்காது. தோள் வளையம், இடுப்பு வளையத்திலிருந்து கால்கள் நேராகத் தொங்குவதால் நீண்ட நேரம் நின்று கொண்டேயிருக்கும். நடக்கும்போது கால்கள் மடங்காது.
- முன்னங்கால்களில் நான்கு நகங்களும், பின்னங் கால்களில் மூன்று நகங்களும் இருக்கும்.
- தோல் மிகவும் தடிமனாக இருக்கும்.
- ஆப்பிரிக்க யானை அழிந்து வரும் விலங்குகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.




பழங்களுக்குரிய இலைகளைக் கண்டுபிடியுங்கள்!


— போட்டி




1




2




3




4





5




6









இங்கு இரண்டு தொகுதிகளாகப் படங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் தொகுதியில் மா, மாதுளை, புளி, திராட்சை, எலுமிச்சை, பலா என ஆறு பழங்கள் உள்ளன. இரண்டாம் தொகுதியில் இப்பழங்களுக்குரிய இலைகள் உள்ளன. போட்டி இதுதான். பழங்களுக்குரிய இலைகளைக் கண்டுபிடித்து எழுதி முகவரிக் கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள். மறக்காமல் உங்கள் முகவரியையும் எழுதுங்கள். முடிவு தேதி 30.4.98. அயல் நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியையும் கண்டிப்பாகத் தர வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடைகளை எழுதினால் பரிசு குலுக்கல் முறையிலேயே முடிவு செய்யப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.







ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

காப்பாற்றியது யார்?


மணியும் ரவியும் நண்பர்கள். ஒருநாள் இருவரும் கடலில் மீன் பிடிக்கச் சென்றனர்.

மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது திடீரென சூறாவளிக் காற்று வீசத் தொடங்கியது. அவர்களின் படகு கவிழ்ந்தது. மழை வேறு வலுக்கத் தொடங்கியது.

ரவியும் மணியும் நீந்த முடியாமல் தத்தளித்தனர். அப்போது எங்கிருந்தோ ஒரு மரக்கட்டை மிதந்து வந்தது.

மரக்கட்டையைப் பிடித்த ரவி, "மணி, இதைப் பிடித்துக் கொண்டு கரை சேர்ந்து விடு" என்று கூறினான்.

"ரவி நீ போறது தான் சரி. கண் சரியாகத் தெரியாத வயதான அம்மா, அப்பா இருக்காங்க. உன்னை விட்டால் அவங்களுக்கு வேறு வழி இல்லை. சீக்கிரம் கிளம்பு" என்றான் மணி.



"உன்னை நம்பிதான் உன் குடும்பமே இருக்கு. நீ போறது தான் நியாயம், கிளம்பு" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே அந்த மரக்கட்டையையும் காற்று அடித்துச் சென்றது.

செய்வதறியாது இருவரும் திகைத்தனர். சிறிது நேரத்தில் மயக்கமடைந்தனர். மறு நாள் காலை கண் விழித்த இருவரும் தங்களைக் காப்பாற்றியவர்களுக்கு நன்றி சொல்ல, அருகில் உள்ளவர்களிடம் விசாரித்தனர்.

"உங்களைக் காப்பாற்றியது மனிதர்கள் அல்ல. நேற்று இரவு பெரிய டால்பின் கூட்டம், உங்க ரெண்டு பேரையும் கொண்டு வந்து கரையில போட்டுச்சு. நாங்க வேகமா ஓடிப்போயி உங்களை தூக்கிட்டு வந்து வீட்டில் சேர்த்தோம். நீங்க டால்பின்களுக்குதான் நன்றி சொல்லணும்" என்றனர்.

ஆர். கோபிநாத்,
ஏழாம் வகுப்பு, 'அ' பிரிவு,
லட்சுமி மில் உயர் நிலைப் பள்ளி,
கோவில்பட்டி.

முயலுக்கு மூன்று கால்?

கவிப்பித்தனுக்கு அளவில்லாத மகிழ்ச்சி ஏற்பட்டது. அதற்கு இதுதான் காரணம். தமிழ்நாடு முழுவதும் நடந்த கவிதைப் போட்டியில் கவிப்பித்தனின் கவிதைக்கு முதல் பரிசு கிடைத்திருக்கிறது. ஒரு வாரமாகவே பாராட்டு மழையில் நனைந்து கொண்டிருந்தான். பத்திரிகைகளிலும் அவனைப் பற்றிய செய்திகள் வந்த வண்ணம் இருந்தன.

இன்று கவிப்பித்தனுக்குப் பாராட்டு விழா. மிகவும் உற்சாகத்துடன் இருந்தான். தலைமை தாங்கி பரிசளிக்க இருப்பவர் உலகம் போற்றும் பெரும் கவிஞர் மாணிக்கம்.

கவிப்பித்தனை மேடைக்கு அழைத்தார் அக் கவிஞர். பரிசு பெற்ற கவிதையை வாசித்தான் கவிப்பித்தன். அனைவரும் பாராட்டினர். கவிஞர் மாணிக்கம் கையால் பரிசு பெற்றான் கவிப்பித்தன். விழா முடிந்தது.

கவிஞர் மாணிக்கம் கிளம்பத் தயாரானார். கவிப்பித்தன் அவரிடம் வந்தான். அருகில் யாரும் இல்லை.

"ஐயா என் கவிதை பற்றித் தங்களின் கருத்து என்ன?" என்றான் கவிப்பித்தன்.

"உன் கவிதையின் தலைப்பை 'பிடி

வாதம்' என்பதற்கு பதில் 'முயலுக்கு மூன்று கால்' என்று வைத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்'' என்றார் அவர்.



''ஐயா நான் அதைத்தான் முதலில் வைக்க நினைத்தேன். எப்படி நீங்களும் அந்தத் தலைப்பையே சொல்கிறீர்கள்?'' என்று கேட்டான் கவிப்பித்தன்.

''நான் சின்ன வயதில் எழுதிய அந்த கவிதை எனக்கு மறந்து போகுமா என்ன? என்று கேட்டபடி காரில் ஏறிச் சென்று விட்டார் கவிஞர் மாணிக்கம்.

கவிப்பித்தனோ பித்து பிடித்தவன் போல திகைத்து நின்றான்.

கே.என். பாலபாரதி,
அரசினர் ஆண்கள் மேல் நிலைப் பள்ளி,
வத்தலக்குண்டு.

புத்தகம்

பள்ளி திறந்து இரண்டு மாதங்களாகி யும் ராமுவால் புத்தகம் வாங்க முடிய வில்லை.

தினமும் ஆசிரியரிடம் திட்டு வாங்கிக் கொண்டிருந்தான். நாளை புத்தகம் இல் லாமல் பள்ளிக்கு வர வேண்டாம் என ஆசிரியர் கடுமையாகக் கூறிவிட்டார்.

ராமுவுக்கு அழுகை அழுகையாக வந் தது. அம்மாதான் என்ன செய்வார்? வீட்டு வேலை செய்து படிக்க வைக் கிறார். ஏற்கெனவே நிறைய கடன்.

ராமு வருத்தத்துடன் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தான். அப்போது தரையில் ஏதோ பளபளப்பாக மின்னியது. எடுத்துப் பார்த்தான். அது ஒரு தங்க மோதிரம்.

இதை எங்கோ பார்த்திருக்கிறோமே என யோசித்தான். சில நிமிடங்களில் நினைவுக்கு வந்தது. இது தன் வகுப்பு ஆசிரியரின் மோதிரம் என்பதை உணர்ந்து கொண்டான்.

நேராக ஆசிரியரின் வீடு நோக்கிச் சென்று விவரத்தைக் கூறினான்.

ஆசிரியர் நெகிழ்ந்து போய் பாராட் டினார்.

''ராமு இந்தா இந்தப் பணத்தை அன்பளிப்பாக வைத்துக் கொள்'' என் றார் ஆசிரியர்.

''சார் பணம் எதுவும் வேண்டாம். என் அம்மா புத்தகம் வாங்கித் தரும் வரை பள்ளிக்கு வர அனுமதிக்க வேண்டும்'' என்றான் ராமு.




''என்கிட்டே பழைய புத்தகம் ஒரு செட் இருக்குது. தேடி வைக்கிறேன். நாளைக்கு வந்து வாங்கிட்டு போ'' என் றார் ஆசிரியர்.

நன்றி கூறி நிம்மதியாக வீட்டுக்குச் சென்றான் ராமு.

சு.குமார்.
ஏழாம் வகுப்பு,
விவேக் வித்யாலயா பள்ளி,
சென்னை – 82

பிருந்தாவனக் கதையரங்கம்



பார்வை

மராட்டிய மன்னர் சிவாஜியின் குரு சமர்த்த இராமதாசர். குரு சொற்படி ஆண்ட சிவாஜி பல வெற்றிகளைக் கண்டார்.

சிவாஜியின் சகோதரர் ஏகோஜி கி.பி. 1677-ல் தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்து வந்தார். சமர்த்த இராமதாசர் இராமேஸ்வர யாத்திரைக்குப் புறப்பட்டபோது தஞ்சைக்குச் சென்று சகோதரனை ஆசிர்வதித்து விட்டு வரும்படி கேட்டுக் கொண்டார் சிவாஜி. இராமதாசரும் அப்படியே செய்வதாக வாக்களித்தார்.

குருநாதர் தஞ்சை சென்றார். ஏகோஜி குருநாதரை எதிர் கொண்டழைத்து மரியாதை செய்தார்.

"ஏகோஜி! சோழ நாட்டுச் சிற்பக்கலை மிகச் சிறந்தது என்று அறிந்திருக்கிறேன். மடத்தில் நிறுவ ஸ்ரீராமர், சீதா, லட்சுமணன், ஹனுமான் விக்ரகங்களை மெழுகினால் செய்து எடுத்து வந்திருக்கிறேன். அவற்றை ஐம்பொன்னில் வடித்துத்தர நல்ல சிற்பியை அழைத்து வரச் சொல்" என்றார்.

மன்னரும் நாலா பக்கமும் தேர்ந்த சிற்பிகளை அழைத்து வரச் சொல்லி ஆட்களை அனுப்பினார். ஆனால் எல்லோருமே வெறுங்கையுடன் திரும்பி வந்தனர். ஒருவர் மட்டும், ஒரு வயதான சிற்பியுடன் வந்தார். ஆனால் "அவருக்கு இரண்டு கண்களும் பார்வை மங்கி விட்டதால் சிலை வடிக்க முடியாதாம்" என்று சொன்னார்.

ராமதாசரோ, "பரவாயில்லை; அவரை அழைத்து வா" எனக் கூறிவிட்டார்.

பணியாள் முதிய சிற்பியை அழைத்து வந்தான். தட்டுத்தடுமாறி இராமதாசரை வணங்கினார் சிற்பி. இராமதாசர் சிற்பியின் இரு விழிகளையும் தடவ, சிற்பியால் எதிரேயுள்ள மெழுகுச் சிலைகளையும், இராமதாசரையும் நன்கு பார்க்க முடிந்தது.

"ஸ்வாமி! எனக்குப் பார்வை துல்லியமாய் இருக்கிறது" என ஆனந்தக் குரல் கொடுத்தார் சிற்பி.

"சரி, இனி சிலை செய்யத் தடை

வெற்றி சிற்பி

ஒன்றுமில்லையே?'' என்று இராமதாசர் கேட்க, "அது என் பாக்கியம்'' என்று பணியைத் தொடங்கினார் சிற்பி.

சமர்த்த இராமதாசர் ஊருக்குத் திரும்பும் போது சிற்பி கேட்ட வேண்டுகோள் அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தது.

அப்படி என்ன கேட்டார்?


"ஸ்வாமி! சிற்பப் பணி முடிந்த பிறகு என் பார்வை முன்போலாகிவிட வேண்டும்'' என்றார்.

"எதனால் அப்படிச் சொல்கிறீர்கள்?'' என்று குருதேவர் வினவினார்.

"ஸ்வாமி! நானோ முதியவன். எம் பெருமான் சிலை வடிக்க அருட் பிரசாதமாகத் தாங்கள் கொடுத்த பார்வை, வாழ்வில் பல அவலங்களைப் பார்க்க வைக்கும். வாழ்க்கையின் இறுதிப் படிகளில் ஏறிக் கொண்டிருக்கும் நான் உங்களை சந்தித்ததையும், கோதண்டராமன் உருவம் சமைத்ததையும் போன்ற இனிய சம்பவங்களை அசைபோட்டபடியே காலத்தை ஓட்டி விடுவேன்'' என்றார்.

குருநாதர் சிற்பியை ஆசீர்வதித்து விடை பெற்றார். நான்கு சிலைகளும் செய்யப்பட்டன. சதாராவுக்கு அருகிலுள்ள 'சர்ஜன்கட்'டுக்கு கி.பி. 1681-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் கிருஷ்ண பட்சப் பஞ்சமி அன்று சிலைகள் வந்து சேர்ந்தன. சிலைகளின் கண்களில் இருந்த மெழுகை அகற்றி சிலைகளைக் கண்களில் ஒற்றிக் கொண்ட இராமதாசர், சிலைகளின் நுண்ணிய வேலைப்பாடுகளைக் கண்டு மெய் மறந்து நின்றார். அதே மாதம் கிருஷ்ணபட்ச நவமியன்று ஸ்ரீராமன் திருவடி சேர்ந்து விட்டார்.

ஆர். பொன்னம்மாள்



கேட்கட்டுமா டாக்டர்?

டாக்டர் கு. கணேசன்

● *ஜா. லாரன்ஸ், நாகர்கோவில்.*

? என் நண்பனுக்கு நீண்ட காலமாக நகம் கடிக்கும் பழக்கம் உள்ளது. இதனால் என்ன தீமை? இந்தப் பழக்கத்தை எப்படி நிறுத்துவது?

! நகம் கடிக்கும் பழக்கத்தால் நகங்களுக் கிடையே தங்கியிருக்கும் அழுக்கு மற்றும் கண்ணுக்குத் தெரியாத கிருமிகள் வயிற்றுக்குள் சென்று வயிற்றுப் போக்கு, சீதபேதி, குடல் புழுக்கள் போன்ற தொல்லைகள் வருவதற்கு வழி அமைக்கும். இதைத் தடுக்க, நகங்களை அதிகமாக வளர விடக் கூடாது. அவ்வப்போது அதை வெட்டி, வெந்நீரில் சோப்பு போட்டுக் கழுவ வேண்டும். நகம் கடிக்கும் பழக்கம் ஒரு தீய பழக்கம் என்பதை உன் நண்பன் உணர்ந்தாலே, இந்தப் பழக்கம் முடிவுக்கு வந்து விடும். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு உன் நண்பனுக்கு!



● *ஏ. முருகன், ஆலப்பாக்கம்.*

? உடல் ஆரோக்கியமாக இருக்க நீங்கள் கூறும் ஆலோசனை என்ன டாக்டர்?


! உடம்புக்குத் தேவையான சத்துள்ள உணவு, சுத்தமான தண்ணீர், முறையான உடற்பயிற்சி, போதிய ஓய்வு, சரியான சூரிய வெளிச்சம், சுத்தமான காற்று, மாசு இல்லாத சுற்றுப்புறம், உடம்பில் உண்டாகும் கழிவுகளை அவ்வப்போது வெளியேற்றும் பழக்கம், உடம்பை சுத்தமாக வைத்துக் கொள்ளும் பண்பு, நச்சுப் பொருள்களும் நோய்க் கிருமிகளும் எந்த ரூபத்திலும் எந்த வழியிலும் உடம்புக்குள் புகாத வண்ணம் பார்த்துக் கொள்கின்ற கடமையுணர்வு... இவை இருந்தால் போதும், உடல் ஆரோக்கியமாக இருக்கும்.



● *எஸ். நாகராஜன், மேலப்பாதி.*

? பிறக்கப் போகும் குழந்தை உடல் ஊனமுற்றதாக இருப்பதைப் பிரசவத்திற்கு முன்பே தெரிந்து கொள்ள முடியுமா, டாக்டர்?

! முடியும் நாகராஜன். பெண் கருவுற்ற 10 வது வாரத்தில் 'கோரியானிக் வில்லஸ் சாம்ப்ளிங்' (Chorionic Villus Sampling) என்ற பரிசோதனை மூலம் சிசு வளர்கின்ற தன்மையை அறிந்து அது பிறப்பதற்கு முன்பே உடல் வளர்ச்சி, மன வளர்ச்சி ஏதாவது பாதிக்குமா என்பதைக் கூறி விடலாம். அதன் பிறகு கருவுற்ற 18 வாரங்களில் சிசுவைச் சுற்றியுள்ள திரவத்தைப் (Amniotic fluid) பரிசோதித்துப் பார்த்தும், அல்ட்ரா சவுண்ட் ஸ்கேனிங் என்ற பரி சோதனை மூலமும் குழந்தையின் வளர்ச்சிக் குறைபாடுகளைப் பிரசவத்திற்கு முன்பே தெரிந்து கொள்ள முடியும்.



● *இரா. லலிதா, தக்கோலம்.*

? சிறுநீரகம் பழுதாவதற்கு என்ன காரணம், டாக்டர்?

! பிரதான காரணம், நோய்க் கிருமிகள். அடுத்த காரணம், உயர் ரத்த அழுத்தம். மூன்றாவது காரணம், சர்க்கரை நோய், கடைசிக் காரணம். சில மருந்துகளின் பின் விளைவுகள். இவை நம் சிறுநீரகத்தைத் தாக்கும் போது அது பழுதாகிவிடும்.

● *வெ. சந்தோஷ்குமார், செங்கற்பட்டு.*

? எனக்கு வலது கையில்

மரு இருந்தது. அது இப்போது உடம்பு முழுவதும் பரவுகிறது. இதற்கு என்ன சிகிச்சை, டாக்டர்?

! மருக்களை 'கிரையோகன்' என்ற கருவியால் அகற்றி விடலாம். அருகிலிருக்கும் தோல் நோய் நிபுணரைக் கலந்தாலோசித்தால் உனக்கு உடனடியாக நிவாரணம் கிடைக்கும்.





நகம் கடிக்கும் பழக்கத்தால் தீமையா?

● கே. மணிமேகலை, பொள்ளாச்சி.

? உணவில் நார்ச்சத்துள்ள பொருள்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று அடிக்கடி பத்திரிகைகளில் படிக்கிறேன். நார்ச்சத்தின் அவசியமென்ன? அது எந்த உணவுப் பொருள்களில் உள்ளது?


! நாம் உண்ணும் உணவில் எந்த அளவுக்கு நார்ச்சத்து (Fibre) உள்ளதோ அந்த அளவுக்கு உடல் ஆரோக்கியமாக இருக்கும். நார்ச்சத்துள்ள உணவை தினமும் சாப்பிட்டால் மலச்சிக்கலே வராது. உணவு நன்றாக ஜீரணமாகும். மற்ற உணவுச் சத்துகள் உடம்பில் சேரும். உணவுப் பாதையில் உண்டாகும் வாயுவை வெளியேற்றுவது இந்த நார்ச்சத்துதான். கொழுப்புப் பொருளை உடலில் சேர விடாமல் இது தடுக்கிறது. குளுக்கோஸ் உடனடியாக ரத்தத்தில் கலப்பதைத் தடுப்பதால் சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்துவதற்கும் இது உதவுகிறது.

தொடர்ந்து நார்ச்சத்துள்ள உணவைச் சாப்பிடும் பழக்கம் உள்ளவர்களுக்கு இரண்டு நோய்கள் வரவே வராது. அவை என்ன தெரியுமா? மூல நோய்; பெருங்குடல் புற்றுநோய். சரி, சகோதரி. இந்த நார்ச்சத்து எந்த உணவில் உள்ளது என்பதை இன்னமும் சொல்லவில்லையே... கோதுமை மாவு, கொண்டைக்கடலை, அவரை, முருங்கைக்காய், நெல்லிக்காய், திராட்சை, மாதுளை, கொய்யா, அகத்திக்கீரை, பொன்னாங்கண்ணிக் கீரை, புதினா, கறிவேப்பிலை, வாழைப்பழம், ஆப்பிள், வெங்காயம், முட்டைக்கோஸ். இவற்றில் ஏதாவது ஒன்றை தினசரி உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது.

● ஆர். விசாலம், செம்பொன்னார் கோயில்.

? எனக்குப் புத்தகம் படித்தாலோ, சினிமா பார்த்தாலோ கண்வலி ஏற்படுகிறது. கண்ணில் குறைபாடு இல்லை என்று கண் டாக்டர் கூறிவிட்டார். உடல் பலவீனத்தால் வலி வருகிறது என்கிறார். உண்மையா, டாக்டர்?

! உண்மைதான், சகோதரி. புரதச்சத்துக் குறைவு, வைட்டமின் மற்றும் தாதுச்சத்துக் குறைவினால் கூட கண்ணில் வலி ஏற்படலாம். மருத்துவரின் ஆலோசனைப்படி சத்து டானிக்குகளை சாப்பிட்டு அல்லது சத்துள்ள உணவுகளைச் சேர்த்துக் கொண்டு உங்கள் கண் வலியைக் குணப்படுத்தி விடலாம்.





வியக்க வைக்கும்

வால்ட் டிஸ்னி உலகம்

நம் எல்லோருக்கும் கார்டூன்கள் பிடிக்குமே! கார்டூன்களின் முன்னோடி வால்ட் டிஸ்னி என்பதையும் பலர் அறிந்திருப்பீர்கள். அவர் நினைவாக அமெரிக்காவில், புளோரிடா மாகாணத்தில் அமைந்துள்ள ஒரு பொழுது போக்கு பூங்காதான் 'வால்ட் டிஸ்னி உலகம்! இப்பூங்கா குழந்தைகளுக்கென்றே உருவாக்கப்பட்டது. எனினும், குழந்தைகளை மட்டுமின்றி, பெரியவர்களையும் பெரிதும் கவர்ந்து வரும் பூங்கா இது.

வால்ட் டிஸ்னி உலகத்துக்கு முன்னோடி கலிபோர்னியாவில் உள்ள டிஸ்னி லேண்ட். 1955 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது டிஸ்னி லேண்ட். முதல் பகுதி டிஸ்னியின் கார்டூன் கதாபாத்திரங்களை மையப்படுத்திய 'மாயாஜால உலகம்'. இரண்டாவது பகுதியில் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி பலவித 'மாயைகள்' உருவாக்கப்பட்டு உள்ளன. அடர்ந்த காட்டினுள் படகில் பயணம் செய்வது போலவும், நீர்மூழ்கிக் கப்பல் மூலம் கடலின் அடியில் செல்வது போலவும் பார்வையாளர்கள் உணரும் மாயத் தோற்றங்கள் இங்கு நிகழ்கின்றன. மூன்றாவது 'தேவதைகள் உலகம்'. நாம் கதைகளில் படித்து மகிழ்ந்த தேவதைகள் உலகம் நம் கண் முன்னே வந்துவிட்டாற் போல இது அமைந்திருக்கும். 1989ஆம் ஆண்டு இதன்

300 மில்லியனாவது (ஒரு மில்லியன் = பத்து இலட்சம்) பார்வையாளர் வரவேற்கப்பட்டார்.

இத்தகையச் சிறப்பு வாய்ந்த டிஸ்னி லேண்ட்டை அடிப்படையாகக் கொண்டே 'வால்ட் டிஸ்னி உலகம்' உருவாக்கப்பட்டது. 1971 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இதை உருவாக்க 400 மில்லியன் அமெரிக்கன் டாலர்கள் செலவானது. விநோத உலகம், சாகச உலகம், போர் உலகம், நாளைய உலகம் என நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

இப்பூங்காவில் உள்ள விளையாட்டுகள், நிகழ்ச்சிகள் போன்ற அனைத்தும் காலத்துக்குத் தக்கபடி புதிது புதிதாக மாற்றப்படுகின்றன. எனவே எந்தக் காலத்துக் குழந்தைகளையும் இது கவர்கிறது. பரிசு மற்றும் நினைவுப் பொருட்கள் வாங்கக் கடைகளுக்குக் குறைவில்லை. எண்ணற்ற உணவகங்களும் இங்கு உள்ளன. இசை நிகழ்ச்சிகளையும் கண்டு, கேட்டு மகிழலாம். ஆங்காங்கே, மிக்கி மவுஸ் மற்றும் டொனால்ட் டக் முதலிய கதாபாத்திரங்கள் உங்களை எதிர்கொள்வர். சவாரி செய்ய விரும்பினால் வாகனங்களுக்கும் குறைவில்லை. ஒரு பெட்டி ரயில் முதல் கேபிள் கார் வரை பலவித வாகனங்கள் உள்ளன. கேபிள் காரில் பயணம் செய்யும் போது வால்ட் டிஸ்னி உலகத்தின் 'வான் பார்வை' (Aerial View) கிடைக்கும்.

வால்ட் டிஸ்னி உலகத்தின் மையம் தேவதைகள் உலகத்தின் சின்ட்ரெல்லா கோட்டையே. இதில் திடீர் திடீரென மிக்கி மவுஸ்கள், டொனால்ட் டக்குகள் என பல கதாபாத்திரங்கள் தோன்றி மக்களை மகிழ்விப்பர். இவர்கள் மறைவிடங்களில் மறைந்திருப்பர்.

உலகில் நாளை என்ன நடக்கும் என்பதைக் கூட கற்பனை செய்து, அவற்றையும் நம் கண் முன்னே காட்சிக்கு வைத்துள்ளனர். உயிரோட்டத்துடன் உள்ள இவை நாளைய உலகத்தில் உள்ள எப்காட் மையத்தில் காணப்படுகின்றன.

இங்கு ஏரியின் இடையே பெரிய தீவில் நாம் புதிது புதிதாக பல அதிசயங்களைக் கண்டு பிடித்துக் கொண்டேயிருக்கலாம்!

போர் உலகத்தில் அமெரிக்காவின் பாரம்பரியத்தை விளக்கும் காட்சிகள், பொம்மைத் துப்பாக்கிகளுடன் அனிமேஷன் கதாபாத்திரங்கள் பாதுகாக்கும் கோட்டை முதலியன உள்ளன.

வால்ட் டிஸ்னி உலகை முழுமையாகச் சுற்றிப் பார்க்க சுமார் நான்கைந்து தினங்களாவது ஆகும். 28,000 ஏக்கர் பரப்பளவுள்ள இப்பூங்கா முழுக்கவும் தூய்மையுடன் இருப்பது குறிப்பிடத் தக்கது. பூங்காவின் தூய்மையைப் பராமரிக்கவே ஒரு தனிப்படை இயங்கி வருகிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!


உண்மையிலேயே, வால்ட் டிஸ்னி உலகம் நம்மை வியக்க வைக்கிறதல்லவா!

— அமராவதி





• வால்ட் டிஸ்னி



காட்டைக் காக்கணும்!

கனிகொடுக்கும் மரம் நிறைந்த
காட்டைக் காக்கணும் — தம்பி
கவனமாகக் காட்டு விலங்கு
பறவை காக்கணும்!

வீட்டைச் சுற்றிப் பசுமரங்கள்
நட்டு வளர்க்கணும் — தம்பி
வீணாய்ப் போகும் கழிவுநீரை
அதற்குப் பாய்ச்சணும்!

காய்கறிகள் நமக்கு அளிக்கும்
தோட்டம் போடணும் — தம்பி
கரியமில வாயுப் பெருக்கம்
கட்டுப் படுத்தணும்!

மரம் வளர்த்தால் மழைபொழியும்
மண்ணும் செழித்திடும் — தம்பி
மண்ணரிப்பும் நின்றுபோகும்
மனதில் வைக்கணும்!

— புதிய ஜீவா. பூண்டி நீர்த்தேக்கம்.

கொஞ்சும் இயற்கை!


கொஞ்சும் இயற்கை அழகினிலே
நெஞ்சம் மகிழும் கவிதையிலே!
பஞ்சு மெத்தை போலெங்கும்,
பச்சை புற்கள் தெரிகிறதே!

ஓடும் தென்றல் காற்றினிலே;
ஒன்றாய் ஆடும் மலரினிலே,
சேரும் வண்டு அன்புடனே;
சேதி சொல்லும் காதினிலே!

நாரை கொக்கு நதியினிலே,
நடனம் ஆடும் அழகினிலே,
பாரைக் கொஞ்சம் மறந்திடவே;
பாறை மீது அமர்ந்தேனே!

கோரைப் புற்கள் அசைந்திடவே;
குருவி கொத்தும் வேளையிலே,
தேரை தத்திச் செல்கையிலே;
தேகம் ஏனோ சிலிர்க்கிறதே!

— திமிரி. சொ. சரவணபவன்



8. பரிசும் பகையும்

மறுநாள் சனிக்கிழமை. பள்ளி விடுமுறை. பசுபதி செய்யச் சொன்னதன் பேரில், நிஜாவின் அப்பா கொடுத்திருந்த தொலைபேசிக்கு சித்ராவே போன் பண்ணினாள். நிஜாவின் அப்பாவே பேசினார். சித்ரா தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, ஓவியப் போட்டியில் தன்னைக் கலந்து கொள்ள அப்பா அனுமதித்துள்ள தகவலைக் கூறினாள்.

நிஜாவின் அப்பாவுக்கு ஒரே மகிழ்ச்சி.

''அங்கிள் ஒரு நிமிஷம். போனை வைத்து விடாதீர்கள். இந்தப் போட்டிக்கான நீதிபதிகளுள் நீங்களும் இருக்கீங்களா?'' என்று கேட்டாள் சித்ரா.


"ஆமாம்மா. எதற்காகக் கேட்கிறாய்? பரிசு கண்டிப்பாக உனக்குத்தான்."

"என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் அங்கிள். நீங்கள் நீதிபதி பட்டியலில் இருந்தால் என் பெயரைச் சேர்க்க வேண்டாம்!"

"என்னம்மா இப்படி பேசறே! முதல்ல உங்கப்பா முரண்டு பண்ணினார். ஒரு வழியா அவர் சம்மதம் கிடைச்சது. இப்போ நீ ஆரம்பிக்கிறே?"

"போட்டி நடப்பதற்கு முன்னாலேயே பரிசு எனக்குத்தான்னு நீங்க சொன்னதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியலே. உங்களுக்கு என்மேல் அன்பு இருக்கலாம். எனக்கு எந்த வகையிலாவது உதவ வேண்டும் என்ற எண்ணம் இருக்கலாம். ஆனால் அதற்காக விதிகளுக்குப் புறம்பாக எனக்குத்தான் முதல் பரிசு என்று நீங்கள் முடிவு பண்ணுவது போட்டியின் நோக்கத்தையே சிதற அடிப்பதாகும். போட்டியில் உண்மையாகவே என்னுடைய திறமை மற்றவர்களுடையதைக் காட்டிலும் சிறப்பாக இருக்கிறது என்று நீதிபதிகள் முடிவு பண்ணினால், பரிசு தரட்டும். தனிப்பட்ட சலுகை காட்டாதீர்கள். உண்மையாகவே, என்னை விடச் சிறப்பாக வரையக் கூடியவர்கள் இருந்தால் அவர்களை ஊக்குவிப்பது தானே நியாயம்? எல்லோரும் இப்படித் தனக்கு வேண்டியவர்களுக்குச் சலுகை காட்ட ஆரம்பித்தால், போட்டி நடத்துவதில் அர்த்தமே இல்லையே?''

''சித்ரா, மறுபடியும் நீ என்னைக் குழப்பறே. எனக்கு ஓவியத்தைப் பற்றி நன்றாகத் தெரியும் என்பதை நீ அறிந்திருக்க வாய்ப்பில்லை. உன்னுடைய திறமையை நான் நன்கு அறிவேன். அதனால்தான் கண்டிப்பாக உனக்குப் பரிசு கிடைக்கும் என்ற நம்பிக் கையில் உன்னை வாழ்த்தினேன்''



வெ. நல்லதம்பி

என்றார் நிஜாவின் அப்பா.

''இருக்கட்டும் அங்கிள். உங்களுக்கு என்மேல் தனியான அன்பு இருக்கிறது என்பது தெளிவாகி விட்டது. இது எல்லோருக்கும் தெரியும். முதலில் என் பெயரைப் பள்ளியில் அனுப்பவில்லை என்பதும், நீங்கள் அப்பாவின் மனதை மாற்ற முயற்சி செய்ததும் எல்லோருக்கும் தெரியும். இந்த நிலையில் நீங்கள் நீதிபதியாகவும் இருந்து, என்னுடைய படம் உண்மையாகவே சிறப்பானதாகவும் இருந்து பரிசும் கொடுக்கப்பட்டால், அந்தப் பரிசு படத்தின் சிறப்பைக் கருதித் தரப்பட்டதாக என்னால் பெருமைப்பட முடியாது. மற்றவர்களும் கூட, நீங்கள் என்மேல் கொண்டுள்ள தனியான அன்பின் காரணமாகவே எனக்குப் பரிசளித்ததாகப் பேசுவார்கள். அது பரிசுக்கும், பரிசளிப்பவர்களுக்கும் பெருமையல்ல. அதனால் போட்டியில் கலந்து கொள்ள இப்பொழுது எனக்கே யோசனையாக இருக்கிறது.''

நிஜாவின் அப்பா சில விநாடிகள் பதில் பேசவில்லை.

"என்ன அங்கிள் பதிலே இல்லை?" என்று கேட்டாள் சித்ரா.

''நான் நீதிபதியாக இருப்பதால் நீ கலந்து கொள்ள மறுத்தால், கண்டிப்பாக வேறு ஒருவரை நீதிபதியாக இருக்க ஏற்பாடு செய்கிறேன். சரிதானே?''

"மகிழ்ச்சி அங்கிள்."

"சித்ரா, இத்தனை சின்ன வயதில் இத்தனை நேர்மையாக நீ இருப்பதைப் பற்றி மிகவும் பெருமைப் படறேம்மா. போட்டியெல்லாம் முடிந்து, முடிவுகள் அறிவிக்கப்பட்ட பிறகுதான் நான் "போட்டி நடக்கப் போகிற மண்டபத்துக்கு வருவேன்" என்று சிரித்த நிஜாவின் தந்தை, "ஏம்மா, இனிமேலாவது நீ போட்டியில் வெற்றிபெற மறுபடி வாழ்த்தலாமா?" என்று கேட்டார்.

"மனம் நிறைந்த உங்கள் வாழ்த்துகள் எனக்குக் கண்டிப்பாக வெற்றியைத் தேடித் தரும் அங்கிள்."

அன்று மாலை பசுபதி சீக்கிரமே வீடு திரும்பி விட்டார். சித்ரா தயாராக இருந்தாள். அரை மணிக்கெல்லாம் சேர்மனின் கார் வந்து இருவரையும் அழைத்துச் சென்றது.

சேர்மனின் வீடு மிகப் பெரியது. அழகான நடு ஹாலில் கிழக்குப் பார்த்த சுவரில் சித்ரா, பூஜை மண்டபத்தையும், நடுவில் கலசம் வரைந்து, கலசத்தில் வரலக்ஷ்மி அம்மனையும் வரைந்தாள். முடிக்கும்போது இரவு பத்தரை மணியாகி விட்டது. அம்மனே கலசத்தைவிட்டு இறங்கி வந்து அருள் புரிவது போலிருந்தது.


சேர்மனுக்கும் அவர் மனைவிக்கும் மட்டில்லாத மகிழ்ச்சி. இவ்வளவு நேர்த்தியாக அழகு கொஞ்சும்படி இதுவரை வரலக்ஷ்மி ஓவியம் அமைந்ததே இல்லை. எத்தனை மறுத்தும் விடாமல், தாம்பூலம் வைத்து அதில் இரண்டு நூறு ரூபாய் நோட்டுகளையும் வைத்து சித்ராவிடம் தந்தார் சேர்மனின் மனைவி. தயக்கத்துடன் தந்தையை நோக்கினாள் சித்ரா.

''பரவாயில்லை, பசுபதி ஒன்றும் சொல்ல மாட்டார். வாங்கிக் கொள் சித்ரா" என்றார் சேர்மன்.

சேர்மனின் மனைவியை நமஸ்கரித்து விட்டு அதை வாங்கிக் கொண்டாள் சித்ரா.

"தெய்வங்களையே உருவாக்கும் அற்புதக் கலையம்மா ஓவியம்.

''ரேஷன்ல சர்க்கரை போடறாங்களாம்...




...கியூ வரிசைல நின்னு வாங்கிட்டு வாங்க!''

— சீர்காழி வி. ரேவதி

எல்லோருக்கும் எளிதில் கிடைத்து விடாது. நீ வருங் காலத்தில் ஓவியர் மணியம், மாருதி, கோபுலுவைப் போல் வளர்ந்து நம் புராதன ஓவியங்களை உலகறிய வைப்பாய். என் வாழ்த்துகள்" என்று வாழ்த்தினார் சேர்மனின் மனைவி.

சித்ரா, பசுபதியின் முகத்தைப் பார்த்தாள். அவர் அசட்டுச் சிரிப்பு சிரித்தார்.



காலையில் பள்ளி மாணவர்கள் ஓவியப் போட்டி, அதை ஏற்று நடத்திய லைன்ஸ் கிளப் சார்பில், அரசு மேல்நிலைப் பள்ளியின் மிகப் பெரிய மைய மண்டபத்தில் நடைபெற்றது. ஏராளமான மாணவ மாணவியர் கலந்து கொண்டனர். போட்டியின் தலைப்பு 'உனக்குப் பிடித்த ஏதாவது ஒரு பறவை.'

போட்டி மண்டபத்தில் சித்ராவை பார்த்ததும் விஜயா அதிர்ந்து போனாள். சித்ராவின் வளர்ச்சியையும், அவள் நாளுக்கு நாள் அடையும் பெருமைகளையும் பார்த்துப் பொறாமைப் படுகிறவள் அவள். "வகுப்பு டீச்சரிலிருந்து பெரிய மேடம் வரை எல்லாரையும் காக்கா புடிச்சு வைச்சிருக்கா. அதான் எந்த ஓவியப் போட்டின்னாலும் அவளுக்கே பரிசு கிடைக்கிறது" என்பாள் அடிக்கடி. போட்டி அறிவிப்பு வந்தாலே, "நான் எதுக்கு டீச்சர் பெயர் தரது? அதான் பரிசு வாங்கறதுக்குன்னே ஒருத்தியைத் தயார் பண்ணி வைச்சிருக்கீங்களே?" என்று குத்தலாகக் கேட்பாள்.

சித்ரா, போட்டியில் கலந்து கொள்ள உறுதியாக மறுத்து விட்டதும், லயன்ஸ் கிளப்புக்கு அனுப்பப்பட்ட லிஸ்டில் சித்ராவின் பெயர் இல்லாததும் அவளுக்கு உள்ளூர மகிழ்ச்சியாகவே இருந்தது. சித்ரா கலந்து கொள்ளாததால் பரிசு கண்டிப்பாகத் தனக்குத்தான் என்ற நம்பிக்கையில் அவள் இருந்தாள். பிறகு, சித்ரா எடுத்த முடிவில் ஏற்பட்ட மாற்றமும், அவளுடைய பெயரைத் தனியாகத் தலைமை ஆசிரியை அனுப்பியதும் விஜயாவுக்குத் தெரியாது. அதனால் போட்டி மண்டபத்தில் சித்ராவைக் கண்டதும் தனக்குத்தான் பரிசு என்ற அவள் எண்ணத்தில் மண் விழுந்தது. அந்த ஏமாற்றம் ஆத்திரமாகி விட்டது.

"நீ எப்படி போட்டியில் கலந்து கொள்ளலாம்? உன் பெயரைத்தான் பெரிய மேடம் அனுப்பவே இல்லையே?" என்று கடுமையாகக் கேட்டாள் விஜயா.

"என் முடிவை மாத்திக்கிட்ட பிறகு பெரிய மேடத்திடம் சொன்னேன். தனியாகவே என் பெயரை எழுதி, போட்டியில் சேர்த்துக் கொள்ள கடிதம் அனுப்பினார்கள்" என்றாள் சித்ரா அமைதியாக.

"எப்படியோ, மாட்டேன் மாட்டேன் கறவளுக்குப் பூச்சூட்டி அனுப்பிச்சிட்டாங்க. நீ பரவாயில்லே. உண்மையாகவே ஓவியத்தில் திறமை இருக்கோ என்னவோ, காக்கா பிடிக்கறதிலும், பரிசு வாங்கறதிலும் நல்ல திறமை இருக்கு உனக்கு, இனிமே என்ன? பரிசு கண்டிப்பா உனக்குத்தான்" என்று தன் உள்ள எரிச்சலை வெளிப்படையாகவே கொட்டினாள் விஜயா.

போட்டியில் கலந்து கொள்ளாமல் திரும்பிப் போய்விடலாமா என்று கூட எண்ணினாள் சித்ரா. அவள் அப்படி ஏதாவது பண்ணிவிடப் போகிறாளே என்ற பயம் பெரிய மேடத்திற்கும் இருந்தது. அதனால் போன் பண்ணிக் கேட்டு, சித்ரா போட்டி, மண்டபத்திற்கு வந்து தன் பெயரைத் தந்து விட்டதை உறுதி செய்து கொண்டார்.

போட்டி முடிந்த ஒரு மணி நேரத்தில்

"நாலு நாளா ஓட்டப் பந்தயம் நடத்தியும் வெற்றி பெற்றவங்க யாருன்னு தெரியலையா?"

"எப்படி தெரியும்? ஆமைக்கும் 'நத்தை'க்கும்தானே போட்டியே நடந்தது!"

— எம்.கே. வேங்கவேல்



முடிவு அறிவிக்கப்படும் என்று முன்பே அறிவித்திருந்தார்கள். எனவே போட்டி முடிவுக்காக அனைவரும் காத்திருந்தார்கள். சித்ராவும் தோழிகள் புடை சூழ விஜயாவும் முடிவுக்காகக் காத்திருந்தார்கள்.

ஒவ்வொரு பள்ளிக்கும் இரு பரிசுகளை நிறுவி இருந்தார்கள். அப்போதுதான் எல்லாப் பள்ளிப் பிள்ளைகளும் ஏமாற்றம் இன்றி மகிழ்ச்சி அடைவார்கள் என்பது அவர்கள் நோக்கம். பிறகு எல்லாப் பள்ளிகளுக்கும் சேர்த்து இரு பரிசுகள் ஒதுக்கி இருந்தார்கள். அது இரண்டாவது, இறுதிச் சுற்றுப் போட்டி.

மாணவ, மாணவியர் சேர்ந்து படிக்கும் பள்ளிகளுக்கு மாணவருக்கு ஒரு பரிசு, மாணவிக்கு ஒரு பரிசு என்றும், ஒதுக்கி இருந்தார்கள். மாணவ மாணவியருக்கு என தனித்தனியாகவே நடக்கும் பள்ளி என்றால், முதல் பரிசு என்றும், இரண்டாம் பரிசு என்றும் இருவருக்குக் கொடுப்பது என்றும் லயன்ஸ் கிளப் முடிவு செய்திருந்தது. அந்த முடிவுப்படி எல்லாப் பள்ளிகளுக்கும் இரண்டு பரிசுகள் கிடைப்பது உறுதி! போட்டி ஆரம்பித்து நடந்து முடிந்தது. மூன்று நடுவர்கள் படங்களை மதிப்பிட்டு முடிவு செய்தனர்.

லைன்ஸ் கிளப் துணைத் தலைவர் பஜன்லால் முடிவுகளை அறிவித்தார். முடிவுகளைக் கேட்டு உரிய பள்ளிக் குழந்தைகள் கைதட்டி மகிழ்ந்தார்கள்.

வித்யா உயர் நிலைப் பள்ளியின் முறை வந்தது. 'இரண்டாம் பரிசு ஆர். விஜயா' என்ற அறிவிப்பு எழுந்தது. கூட்டத்தினர் கைதட்டினர். "முதல் பரிசு பி. சித்ரா" என்ற அறிவிப்பு வந்ததும் மீண்டும் கை தட்டல்.

இப்போது அனைத்துப் பள்ளிகளுக்குமாக ஒதுக்கப்பட்ட இறுதிப் போட்டியின் முடிவு.

"இரண்டாம் பரிசு எஸ். மோகன், மாநகராட்சிப் பள்ளி, குரோம்பேட்டை!"

கூட்டத்தினரின் பலத்த கை தட்டல். துணைத் தலைவர் பஜன்லால், மோகனை மேடைக்கு அழைத்தார். கூட்டத்தினருக்கு அறிமுகப்படுத்தினார். மிடுக்காக நடந்து சென்றான் மோகன்.

அடுத்து அனைவரும் ஆவலோடு எதிர்

பார்த்த முதல் பரிசு பற்றிய அறிவிப்பு வந்தது.

"வித்யா உயர்நிலைப் பள்ளி பி. சித்ரா" கூட்டத்தினரின் கையொலி அடங்க நெடுநேரம் பிடித்தது. பஜன் லால் சித்ராவை அழைத்து கைகுலுக்கி கூட்டத்தினருக்கு அறிமுகம் செய்தார். அவள் கையில் பரிசைக் கொடுத்தார். சித்ரா நன்றி சொன்னாள். "சார், உங்களிடம் பேச அனுமதிக்க வேண்டும்" - ஒரு மாணவியின் குரல், கூட்டத்திலிருந்து கேட்டது.



அனைவரும் திரும்பிப் பார்த்தனர்.

"எஸ், கமான்" என்றார் பஜன்லால்.

விஜயா மேடை ஏறினாள். என்ன நடக்கப் போகிறது என்று எல்லோரும் ஆச்சரியத்தோடு பார்த்தனர்.

"சித்ராவுக்கு முதல் பரிசு கொடுத்தது செல்லாது." விஜயா உரத்த குரலில் சொன்னாள்.

"எப்படிம்மா இத்தனை உறுதியாகச் சொல்கிறாய்?" என்று மிகவும் பணிவாகப் புன்சிரிப்புடன் பஜன்லால் கேட்டார்.

"ஏனென்றால் அவள் வரைந்த ஓவியம் என் பென்சில், என் பெயின்டிங் பாக்ஸ், என்னுடைய பிரஷ் ஆகியவற்றால் போடப்பட்டது. நான் தண்ணீர் குடிக்கப் போன சமயம், அவள் என் செட்டை எடுத்துக் கொண்டு அவள் செட்டை என்னிடத்தில் மாற்றி வைத்து விட்டாள்."

"அப்படியா! என்னம்மா உன் செட்டில் ஸ்பெஷல்?" பஜன்லால் மிக அமைதியாகக் கேட்டார்.

"அவை, நம் நாட்டு மட்டமான தயாரிப்பு அல்ல. தரமான வெளிநாட்டுத் தயாரிப்பு. என் சித்தப்பா சிங்கப்பூரிலிருந்து எனக்காக வாங்கி அனுப்பியவை. அதில் போட்டதால்தான் சித்ராவுக்குப் பரிசு கிடைத்தது. இல்லாவிட்டால் கிடைத்திருக்காது."

விஜயா இப்படிச் சொன்னதும் பஜன்லால், நீதிபதிகளாக வந்திருந்த மூவரையும் திரும்பிப் பார்த்தார்.

அவர்கள் சிரித்தனர். "ஓவியத் திறமைக்குத்தான் பரிசே தவிர பெயின்டிங் பாக்ஸுக்கு அல்ல" என்றார் ஒரு நீதிபதி.

நீதிபதிகளில் இன்னொருவர், "ஒரு வேளை, நீயே அதில் தொடர்ந்து போட்டிருந்தால், உனக்கு முதல் பரிசு கிடைத்திருக்கும் என்று நினைக்கிறாயா?" என்று விஜயாவைப் பார்த்துக் கேட்டார்.

"ஆமாம் கண்டிப்பாக" என்று தலையாட்டினாள் விஜயா. மற்றொரு நீதிபதி "உனக்கு வேறு ஏதாவது பரிசு கிடைத்ததா இந்தப் போட்டியில்?" என்று கேட்டார்.

"ஆமாம்! முதல் சுற்றில் இரண்டாம் பரிசு" - மெல்லிய குரலில் சொன்னாள் விஜயா."

நீதிபதிகள் அவளது இருபடங்களையும் மேடைக்குக் கொண்டு வரச் சொல்லி ஒப்பிட்டுப் பார்த்தனர். விஜயாவின் இரு படங்களும் ஒரே செட்டில் போட்டவை என்று உறுதி செய்தார்கள். அதுபோல் சித்ராவின் படமும், சித்ரா கொண்டு வந்த அவளுடைய பிரஷிலும் பேப்பரிலும் போடப்பட்டவை என்பதையும் எளிதாகக் கண்டுபிடித்தார்கள்.

விஜயா புகார் சொன்னது போல் எந்த மாறாட்டமும் நடக்கவில்லை என்பதை நீதிபதிகள் உறுதி செய்தனர்.

ஆகவே சித்ராவின் வெற்றி உறுதியா

எங்கே ஒற்றுமை? - போட்டி முடிவு

இந்தப் போட்டி சுலபமாக இருந்திருக்கிறது என்பதை கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையிலிருந்தே தெரிந்து கொள்ள முடிகிறது. நான்கு பேர் மட்டுமே தவறான விடைகளைத் தந்திருந்தனர். எனவே பரிசுக்குரியோரை வழக்கம் போல் குலுக்கல் முறையிலேயே தேர்ந்தெடுக்க முடிந்தது.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்

1. எஸ். யோகசித்தி, ஒன்பதாம் வகுப்பு, 'அ' பிரிவு, புனித பவுல் மேல் நிலைப் பள்ளி, கிரீன்லேண்ட், ஆண்டிமடம் (அஞ்சல்), பெரம்பலூர் மாவட்டம்.
2. ப. விஜயன், ஆறாம் வகுப்பு, 'ஊ' பிரிவு, எம்.எஸ்.பி. சோலை நாடார் நினைவு மேல் நிலைப் பள்ளி, திண்டுக்கல்.
3. க.க. சுரபி, வடக்கு வீதி, நாகப்பட்டினம்.
4. டி. ஜோஷ்வின், ஐரேனிபுரம், கன்னியாகுமரி மாவட்டம்.
5. ஜி. ஸ்ரீநாத், மாதுங்கா, மும்பை.
6. எஸ். தெய்வானை, சைதாப்பேட்டை, சென்னை - .15.
7. அ. தாமஸ் விபாகர், ஐந்தாம் வகுப்பு, புனித வளனார் பாலர் பள்ளி, கடலூர்.
8. ஆர். நந்தினி, பாரதியார் தெரு, சாத்தூர்.
9. இரா. காயாம்பு, சோழபுரம், தஞ்சாவூர் மாவட்டம்.
10. வி. அனுஷா வசந்தன், பத்தாம் வகுப்பு, இராமநாதபுரம்.
11. எஸ். ஸ்டாலின் சீனிவாசன், ஆரோக்கியபுரம் அஞ்சல், தூத்துக்குடி மாவட்டம்.
12. என். கலைப்பொன்னி, திருப்பராய்த்துறை அஞ்சல், திருச்சி மாவட்டம்.
13. கி. மணிகண்டன், ஆர்.எஸ்.புரம், கோவை.
14. எஸ். அன்னபூரணி, இராதாபுரம், திருநெல்வேலி மாவட்டம்.
15. ஜெ. பூவிழி, கோட்டுச்சேரி, காரைக்கால்.

சரியான விடை

பன்னிரெண்டு படங்களின் இரண்டாவது எழுத்தும் 'ரு' என்பதே இவற்றிற்கு உள்ள ஒற்றுமை.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

யிற்று.

விஜயா குனிந்த தலையுடன் மேடையை விட்டு இறங்கினாள்.

சித்ராவின் புகழ் இப்போது மேலும் பரவியது. முதலில் வாடிக்கிடந்த அவள் முகம் இப்போது மலர்ந்து காணப்பட்டது.

நல்ல காலம். நிஜாவின் தந்தை நீதிபதிகளில் ஒருவராக இல்லாதது எத்தனை வசதியாகப் போய்விட்டது! அவர் மட்டும் நீதிபதியாக இருந்திருந்தால், 'இவரது மகள் நிஜாவை ஓவியமாக வரைந்த காரணத்திற்காக சித்ராவுக்கு வேண்டுமென்றே முதல் பரிசு தந்தார்கள்' என்று கொஞ்சமும் மனசாட்சி இன்றி விஜயா குறை கூறியிருப்பாள். அது உண்மையாக இருக்குமோ என்று மற்றவர்களும் சந்தேகப்பட்டிருப்பார்கள்.

பரிசுகள் குடியரசு நாளன்று நடைபெற உள்ள விழாவில் வழங்கப்படும் என்றும் பரிசு பெற்றவர்கள் நேரில் வந்து பரிசுகள் பெற்றுச் செல்ல வேண்டும் என்றும் அறிவித்தார் பஜன்லால்.

விஜயா சும்மா இருக்கவில்லை. சித்ராவுக்குத் தொந்தரவு கொடுக்கத் திட்டம் போட்டாள்.

(வளரும்)

GOKULAM

The monthly magazine for children

WHEEL OF FORTUNE

EASTER FUN WORLD OVER!

KITTY, THE PET

APRIL '98

Rs. 5/- Only



47, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097


மருந்தாகும் வெங்காயம்!


சிலருக்கு வெங்காயம் என்றாலே பிடிக்காது! அந்த வாசனையை நினைத்தாலே குமட்டிக் கொண்டு வரும். ஆனால் வெங்காயம் நிறைய மருத்துவ பயன்களைத் தருகிறது. வெங்காயம் மிகப் பெரிய பாரம்பரியம் கொண்டது. மனித நாகரிகத்துடன் தொடர்புடைய உணவுப் பொருள் இது! மனித இனத் தோற்றம் போலவே, இதன் பூர்வீகமும் மேற்கு ஆசியாவில்தான் என கருதப்படுகிறது.

அற்புதமான பிரமிடுகளைக் கட்டிய எகிப்திய பணியாளர்கள் வெங்காயம் மற்றும் பூண்டு சாப்பிட்டனர் என வரலாற்றுக் குறிப்புகள் சொல்கின்றன. மேலும் எகிப்திய நினைவுச் சின்னங்கள் மற்றும் கட்டடச் சுவர்களில் 'வெங்காயத்தின் படம் செதுக்கி வைக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல! மோசஸ் என்பவர் எகிப்திலிருந்து வெளியேறும் போது மருந்து மற்றும் உணவுக்கான வெங்காயத்தைக் கொண்டு வரவில்லை என் இஸ்திரேலியர்கள், அவரைக் குறை கூறுவதாக விவிலிய நூலிலுள்ள தகவல்கள் சொல்லுகின்றன.

வாழ்வியலிலும், மருந்தியலிலும் முக்கிய பங்காற்றிய வெங்காயத்தை, சுமார் 2000 ஆண்டுகட்கு முன்பே பிரிட்டிஷ் பாதிரியார்கள், விழாக்களின்போது பயன்படுத்தினர்.

இந்தியாவில் கி.மு. 600களிலிருந்தே வெங்காயமும், பூண்டும் மருந்துப் பொருட்களாக






உபயோகப்படுத்தப் பட்டன. ஆனால், கிரேக்கர்களும், ரோமானியர்களும் கி.மு.400களில் வெங்காயத்தினைப் பயன்படுத்தியதாகத் தெரிய வருகின்றது. கி.பி. 1500க்குப் பின்னர்தான் அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளுக்கு, ஸ்பானிஷ்காரர்கள் மூலம் வெங்காயம் அறிமுகமானது.

இப்போது உலகம் முழுவதும் ஏழை, பணக்காரர் வித்தியாசமின்றி அனைவராலும் பயன்படுத்தப்படும் உணவுப்

பொருளாகி விட்டது.

சமீபத்தில் மழை வெள்ளப் பாதிப்பால் வெங்காயத்தின் விலையைக் கேட்டாலே கண்ணீர் வந்தது நினைவிருக்கும். அயல் நாடுகளிலிருந்தும் வெங்காயம் இறக்குமதி செய்யப்படுகிறது.

உலகிலேயே அனைவராலும் அதிகமாகப் பயன்படுத்தப்படும் காய்கறிகளில் முதலிடத்தை வகிப்பது கொண்டையுள்ள வெங்காயம்தான்! ஒவ்வோர் ஆண்டும், உலகம் முழுவதும் சுமாராக 20,000,000,000 டன்கள் (2000 கோடி டன்கள்) வெங்காயம் உற்பத்தி



ஆகிறது.

வெங்காயத்தின் விஞ்ஞானப் பெயர் ஆல்லியம் சிப்பா (Allium Sepa). இது லில்லியேசிய இனமான ஒரு விதையிலைத் தாவரத்தைச் சேர்ந்தது. தாவரங்கள் உணவைப் பொதுவாக காய் மற்றும் கனிப் பகுதிகளிலேயே சேமித்து வைத்திருக்கும். ஆனால் வெங்காயம், குச்சியான வேர்ப் பகுதிக்கு மேலேயுள்ள மையப் பகுதியைச் சுற்றி வட்டமான சதைப் பற்றுள்ள இலைப் பகுதிகளில் உணவைச் சேமிக்கிறது. இதுவே நாம் உண்ணும் உருண்டையான குமிழ் போன்ற பகுதியாகும்! இதற்கு மேல் நீண்டிருக்கும் இலையுங்கூட உணவாகப் பயன்படுகிறது. வெங்காயம் மித வெப்ப நாடுகளிலேயே பயிரிடப் படுகிறது.

பொதுவாக வெங்காயம் கருஞ்சிவப்பாகவே இருந்தாலும், வெள்ளை, மஞ்சள் மற்றும் வெளிர் பழுப்பு நிற வெங்காயங்களும் உண்டு. இது இந்தியாவில் தமிழ்நாடு, ஆந்திரம், மகாராஷ்டிரம், பஞ்சாப், பீகார் போன்ற மாநிலங்களில் அதிகமாக விளைவிக்கப் படுகின்றது. வெங்காயம் அதன் வாசனைக்காகவும், வித்தியாசமான சுவைக்காகவுமே பெரிதும் விரும்பப் படுகின்றது. இதன் சதைப் பற்றான இலைப் பகுதியில் சர்க்கரை அதிகம் இருப்பதால் பச்சையாகவே சாலட் செய்யப் பயன்படுகிறது.


இதிலுள்ள அக்ரிட் அமிலம் (Acrid Acid) மற்றும் அலைல் புரோபைல் டைசல்பைடு (Allyl propyl disulphide) என்ற வேதிப் பொருட்கள் எளிதில் காற்றில் ஆவியாகும் தன்மை வாய்ந்தவை. வெங்காயத்தின் வாசனைக்கும், உரிக்கும்போது கண் எரிந்து, கண்ணீர் சுரப்பதற்கும் இந்த வேதிப் பொருளே காரணம்! இதிலுள்ள ஆன்தோசயனின் (Anthocyanin) என்ற நிறமியே இதன் கருஞ்சிவப்பு நிறத்துக்கும், க்வெர்சிட்டின் (quercetine) என்ற நிறமி மஞ்சள் நிறத்திற்கும் பொறுப்பேற்கிறது. இது நுண்கிருமி மற்றும் தொற்று நோய்களின் எதிர்ப்பு மருந்தாகவும் பயன்படுகிறது. மேலும் இது இரத்தத்திலுள்ள கொழுப்பைக் குறைப்பதாகவும் தெரிய வந்துள்ளது. வெங்காயம் இரத்தத்தின் சுத்திகரிப்பான்! இது பதப்படுத்தப்பட்டு ஊறுகாயாகவும் ருசிக்கப்படுகிறது.

— ஸ்வாதி


"ஐந்துக்குப் பக்கத்தில் ஆறு. ஆறுக்குப் பக்கத்தில் என்ன இருக்கும்?"

"கரை இருக்கும்!"

— பொன் குமார்



விடுகதைக்கு விடை சொல்லுங்கள்!



1. வட்ட வட்ட குருவி, வாலில்லாக் குருவி தேசமெல்லாம் சுற்றி வருது.
அது என்ன?
2. கட்டையைக் கடித்தால் இனிப்பு.
அது என்ன?
3. விளக்கைச் சுமந்து கொண்டு விடிய விடிய சுற்றுவான்.
அவன் யார்?
4. காலையில் ஓரிடம். மாலையில் வேறிடம்.
அவன் யார்?
5. பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்து.
அது என்ன?

க. பிரியா,
எட்டாம் வகுப்பு 'இ' பிரிவு,
அரசினர்
மேல்நிலைப் பள்ளி,
ஒத்தக்கால்
மண்டபம், கோவை.

விடை:
1. காசு
2. கரும்பு
3. மின்மினிப் பூச்சி
4. சூரியன்
5. வெண்டைக்காய்

1. அரைச் சாண் குள்ளனுக்கு கால் சாண் தொப்பி.
அது என்ன?
2. தண்ணீர் இல்லாத இடத்தில் தாவிப் பாயுது ஒரு கப்பல்.
அது என்ன?
3. அரைப்படி அரிசி பொங்கி ஆயிரம் பேர் உண்டாலும் மீதியிருக்கும்.
அது என்ன?
4. திரி இல்லாத விளக்கு உலகமெல்லாம் ஒளிரும்.
அது என்ன?
5. நாம் போகுமிடமெல்லாம் வருவான்.
அவன் யார்?


பா. மைதிலி,
எட்டாம் வகுப்பு,
அரசு பெண்கள் மேல்நிலைப்
பள்ளி, மேல்கரை,
மானாமதுரை,
சிவகங்கை மாவட்டம்.

விடை:
1. பேனா, 2. ஒட்டகம்,
3. சுண்ணாம்பு, 4. சூரியன்,
5. நிழல்


1. ஒருமுறை திறந்தால் பூட்ட முடியாது.
அது என்ன?
2. கொக்கு குடிக்க குடிக்க தண்ணீர் வற்றுது.
அது என்ன?
3. சிலம்பை உடைத்தால் பவளம் கொட்டும்.
அது என்ன?
4. எங்கள் வீட்டுத் தோட்டத்தில் பச்சைப் பாம்பு தொங்குது!
அது என்ன?
5. அக்கா வீட்டில் விளக்கேற்றினால் தங்கை வீட்டில் தானே எரியும்?
அது என்ன?

தெ. ஜீவானந்த்,
எட்டாம் வகுப்பு,
தஞ்சாவூர்.


விடை:
1. தேங்காய்
2. விளக்கு
3. மாதுளை
4. புடலங்காய்
5. கொடி அடுப்பு



உலக அழகி!
கதை: அ.சு. கிருஷ்ணன்
படம்: சசி
பெரிய காய்கறித் தோட்டம். காய்கள் பளபளப்புடன் இருந்தன.
ஒருநாள்—
ஏய் குள்ளக் கத்தரிக்காய்! உன் குண்டு உடம்புக்கு கிரீடம் ஒரு கேடா?
நான் உன்னுடன் பேசுவதாக இல்லை.
வாய்க்கு மட்டும் குறைச்சல் இல்லை.
இயற்கையின் படைப்பை விமர்சிக்க நீ யார்?
குண்டுப் பூசணியே கத்தரிக்காயின் திமிரைப் பார். ஏன் முகத்தை திருப்பிக்கிறே?
ஓ! உனக்கு ரெண்டு வார்த்தை பேசுவதற்குள் மூச்சு வாங்கிடும்ன்னு பயப் படுறியா?
உனக்கு ஏன்தான் இவ்வளவு திமிரோ?



காய்களிலேயே என்னைப் போல மென்மை யான உடம்பு யாருக்காவது இருக்கா?
வீண் வம்புக்கு அலையறே!
நானா அலையறேன். இரு. உன்னை அப்புறம் கவனிச்சுக்கிறேன்.
மறுநாள் –
யாரது? எனக்கு வணக்கம் சொல்லாமல் வேடிக்கை பார்ப்பது.
நான்தான் பச்சை மிளகாய்.
வாயில் போட்டால் கண்ணீர் வரும், அற்பனே! எனக்கு வணக்கம் சொல்ல மாட்டாயா?
நீ என்ன அவ்வளவு பெரிய ஆளா?
பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்துன்னு மனிதர்களே என் அழகை வர்ணிக்கிறார்கள், தெரியுமா?
என்ன பதிலையே காணோம்? என் அழகிற்கு முன் தலைகாட்ட வெட்கப்பட்டு உருளை, சேனை, கேரட் போன்றவர்கள் மண்ணிற்குள் மறைந்திருப்பது உனக்குத் தெரியாதா?
இப்படி ஒரு தவறான எண்ணம் இருக்கா உனக்கு?


எது தவறான எண்ணம்? உருளையிடம் கேட்டுப் பார்.
நாம் வாழப் போறது கொஞ்ச காலம்தான். பிறகு சமையல் அறைதான் புகலிடம்.
உன் உபதேசம் தேவையில்லை. இப்படிப் பேசுவதால்தான் அம்மிக் கல்லிலும், மிக்ஸியிலும் அரைபடுகிறாய்.
ஏய் கசப்பி! உன் நண்பன் பேசுவதைக் கேட்டாயா? பாகல் காய்ன்னு பேர் மட்டும் பெரிசா இருக்கு.
நான் என்ன செய்தேன்?
ஹிந்தியில் பாகல்ன்னா பைத்தியம்ன்னு அர்த்தம்! தெரியுமா உனக்கு?
அளந்து பேசு.
யாரு முருங்கையா? முரட்டுத்தனமாக இருக்கும் உனக்கே இவ்வளவு கர்வம் இருக்கும் போது பட்டுப்போல இருக்கும் எனக்கு எவ்வளவு இருக்கும்?
நீதான் உலக அழகி போதுமா?
வெண்டைக்கு கர்வம் தலைக்கேறி விட்டது.


மறுநாள் –
காய்கறிகள் பறிக்கப்பட்டு கடைகளுக்கு அனுப்பப்பட்டன.
கடையில் –
கத்தரியும், பாகலும் அரை கிலோ கொடுப்பா.
பிஞ்சு வெண்டை இருக்கு, வேணுமா?
இரு. இரு. நானே ஒடிச்சுப் பார்த்து எடுக்கிறேன்.
மற்றக் காய்கள் வெண்டையைப் பரிதாபமாகப் பார்த்தன.

ஏப்ரல் முட்டாள்!

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்

காட்சி - 1
இடம் : மதுரா வீடு


ஷீலா : மதுரா! மதுரா!

மதுரா : வா ஷீலா!

ஷீலா : ஒரு மகிழ்ச்சியான செய்தி சொல்லப் போறேன்!

மதுரா : சொல்லு சீக்கிரம்!

ஷீலா : போன வருஷம் போலவே இந்த வருஷமும் உன் தம்பி முரளிக்கும் என் தம்பி சுரேஷுக்கும் அவங்க பள்ளிக்கூடத்திலே 'நல்ல நண்பர்கள்' பரிசு கிடைச்சிருக்கு!



மதுரா : அப்படியா? முரளி இதைப் பத்தி எங்கிட்டே சொல்லவேயில்லையே!

முரளி : (வீட்டினுள் நுழைந்தபடி) இதோ வந்துட்டேன். இனிப்போடு சொல்லணும்னுதான் வந்துக்கிட்டேயிருக்கேன். ரெண்டு பேரும் எடுத்துக்குங்க!

ஷீலா : இந்த 'நல்ல நண்பர்கள்' பரிசு தொடர்ந்து பல வருஷமா உங்களுக்குக் கிடைச்சுக்கிட்டு வரது எங்களுக்கு மகிழ்ச்சியாயிருக்கு முரளி!

மதுரா : ஷீலா, இவங்க நட்பைப் பிரிக்க முடியாது.

ஷீலா : ஆமாம் மதுரா!

காட்சி - 2
இடம் : பள்ளிக்கூடம்

முரளி : சுரேஷ்! சாப்பிடப் போகலாமா?

சுரேஷ் : உனக்காகத்தான் நானும் காத்துக்கிட்டிருக்கேன் முரளி! போன வருஷம் இதே ஏப்ரல் மாதத்திலே ஒரு சம்பவம் நடந்ததே... உனக்கு நினைவிருக்கா?

முரளி : என்ன சம்பவம்?

சுரேஷ் : போன வருஷம் ஏப்ரல் முதல் வாரம்! இந்த வகுப்பிலே இருந்த எல்லா மாணவர்களும் சேர்ந்து என்னை 'ஏப்ரல் முட்டாளா'க்கி எப்படி எப்படியெல்லாம் கேலி பண்ணாங்க...

முரளி : ஓ! அதைச் சொல்றியா? பாவம், உன் முதுகிலே கூட யாரோ 'இவன் ஒரு முட்டாள்'னு பேப்பர்லே எழுதி ஒட்டிட்டாங்க.

சுரேஷ் : அப்படி ஒட்டினது மட்டுமில்லாம, அதை எழுதினது நீதான்னு பொய் கூட சொன்னாங்க. ஆனா அவ்வளவு பேரும் என்னைக் கேலி பண்ணின் போது, நீ ஒருத்தன்தான் எனக்காக ஆறுதல் சொன்னே!

முரளி : ஆமாம் சுரேஷ்! இந்த ஏப்ரல் முட்டாள் செய்யற வழக்கம் உனக்கும் பிடிக்காது; எனக்கும் பிடிக்காது. இது ஒரு விளையாட்டா?

சுரேஷ் : விளையாட்டுன்னு சொல்லி நல்ல சட்டைகளைப் பாழாக்கறாங்க. வீணா கோபத்தை உண்டாக்கறாங்க. அடடே நேரமாச்சே. டிபன் பாக்ஸைத் திறக்கலாமா?

முரளி : சுரேஷ்! அதுக்கு முன்னால

உனக்கு என் பிறந்த நாள் வாழ்த்துகள். அது மட்டுமில்லே, உனக்குப் பிடிச்ச, ஒண்ணு கொண்டு வந்திருக்கேன். என்னன்னு சொல் பார்க்கலாம்!

சுரேஷ் : எனக்குப் பிடிச்சதா? வேர்க் கடலை உருண்டை.

முரளி : அதையேதான் இந்த 'டிபன் பாக்ஸ்'லே கொண்டு வந்திருக்கேன். என் அக்கா உங்கிட்டே கொடுக்கச் சொன்னாங்க! இந்தா நீயே திறந்து பாரு!

சுரேஷ் : நன்றி முரளி! என்னடா இது, வெறும் மணலும் காகிதமும்தான் இருக்கு? ம்! காகிதத்திலே 'நீ ஒரு ஏப்ரல் முட்டாள்'னு கூட எழுதியிருக்கே?

முரளி : ஐய்யய்யோ என்ன நடந்தது சுரேஷ்! இது எப்படி நடந்தது? எனக்கு ஒண்ணுமே புரியலை. வீட்டிலே என் அக்காவைத்தான் உனக்காக கடலை உருண்டை பிடிச்சு வைக்கச் சொன்னேன்.

சுரேஷ் : உன் அக்கா கடலை உருண்டை வைக்கும் போது நீ பாத்தியா?

முரளி : இல்லே. ஆனா என் அக்கா நிச்சயம் இப்படி செய்திருக்க மாட்டாங்க... நம்ம வகுப்பிலேதான் யாரோ கடலை உருண்டையை விழுங்கிட்டு, உன்னையும் என்னையும் முட்டாளாக்க இப்படி எழுதிப் போட்டிருக்காங்க.

சுரேஷ் : இல்லை முரளி. இந்த வேலையை நீதான் செய்திருக்கே...

முரளி : அப்படி சொல்லாதே சுரேஷ்! என்னை நம்பு சுரேஷ்! நம்ம நட்பைப் பிரிக்கத்தான் யாரோ வேணும்னு இப்படி செய்திருக்காங்க! வேணும்னா நீயே என் அக்காவை வந்து கேட்டுப்பாரு!

சுரேஷ் : நீ என்ன சொன்னாலும் நான் நம்பமாட்டேன்! இந்த டிபன் பாக்ஸை நானே திறக்கணும்னு சொல்லி, நீ எங்கிட்டே கொடுத்தது ஏன்னு இப்பத்தான் எனக்குப் புரியறது! நான் இனிமேல் உன்னோடு பேசமாட்டேன். என் நட்பை நீ மறந்துடு!

முரளி : சுரேஷ் நில்லு, போகாதே! என் மேலே தப்பில்லை... என்னை நம்பு!

"அழ வைக்க முடியாதுன்னு பெருமையா சொல்லிக்கிட்டு இருந்த என்னை என் தாத்தா அழவச்சுட்டார்!"

"எப்படிடா?"

"வெங்காயம் உரிக்க வச்சுதான்!"

— காழி. ஆர். சீதாராமன்



காட்சி - 3

இடம் : மதுரா வீடு

மதுரா : முரளி, ஏன் ஒரு மாதிரி இருக்கே?

முரளி : அக்கா, சுரேஷ் இனிமே என்னோடு பேசமாட்டானாம்!

மதுரா : ஏன், என்ன ஆச்சு?

முரளி : இன்னிக்குக் காலையிலே நீ என் டிபன் பாக்ஸ்"லே வச்சுக் கொடுத்த வேர்க்கடலை உருண்டைகளைக் காணோம்... பதிலுக்கு மணலும், 'நீ ஒரு ஏப்ரல் முட்டாள்'னு எழுதின காகிதத் துண்டும்தான் இருந்தது.

மதுரா : அப்படியா?

முரளி : சுரேஷ்கிட்டே டிபன் பாக்ஸைக் கொடுத்து திறக்கச் சொன்னேன். திறந்ததும் காகிதத் துண்டை எடுத்துப் படிச்சான். நான்தான் அவனை ஏப்ரல் முட்டாளாக்க அப்படி செய்தேன்னு நினைச்சு, கோபிச்சுக்கிட்டுப் போயிட்டான்.

மதுரா : அச்சச்சோ, அப்படியா நடந்துட்டுது? சரி சரி, டிபன் சாப்பிட வா. அப்புறம் அதைப் பத்தி பேசலாம்!

முரளி : எனக்கு டிபன் வேண்டாம்! இந்த மாதிரி யாரு செய்திருக்காங்கன்னு நான் கண்டு பிடிச்சு, சுரேஷ்கிட்டே சொல்லியாகணும்! அப்பத்தான் எனக்குத் தூக்கமே வரும்!

காட்சி - 4

இடம் : பள்ளிக்கூடம்


மாது : முரளி!

முரளி : என்ன மாது?

மாது : சுரேஷ் இந்த டிபன் பாக்ஸை உங்கிட்டே கொடுத்துட்டு வரச் சொன்னான். சுரேஷ் அக்கா, உனக்காக இதுலே கோதுமை அல்வா வச்சுக் கொடுத்திருக்காங்களாம்! இந்தா.

முரளி : மாது! இந்த சுரேஷ் என்னைத் தவறாகப் புரிஞ்சுகிட்டு, எங்கிட்டே பேசறதில்லே. ஆனா அவன் அக்கா என் மேலே எவ்வளவு அன்பு வச்சிருக்காங்க, பார்த்தியா? நீயும் உட்கார் மாது. ரெண்டு பேருமா இந்த கோதுமை அல்வாவை ஒரு கை பார்க்கலாம். என்ன மாது இது? இதுலே கோதுமை அல்வாவைக் காணோம். வெறும் மணலும் காகிதத் துண்டும்தான் இருக்கு!

மாது : ஆமாம்! 'நீ ஒரு ஏப்ரல் முட்டாள்'னு எழுதியிருக்கு. முரளி, சுரேஷ் உன்னைத் தந்திரமா ஏப்ரல் முட்டாளாக்கியிருக்கான்.



முரளி : ஆமாம், இப்பவே சுரேஷைப் பார்த்து இதைப்பத்தி விசாரிக்கறேன். நீயும் கூட வா மாது!

மாது : முரளி என்னை விட்டுடு, எனக்கு வேலை இருக்கு நான் வரேன்!

முரளி : சுரேஷ்!

சுரேஷ் : முரளியா? ஏன் என்னோடு பேச வந்தே?

முரளி : ஏப்ரல் முட்டாளாக்கற பழக்கம் எப்போதுமே எங்கிட்டே கிடையாது சுரேஷ்! நீதான் யாரோ செய்த தப்பை நான் செய்ததா நினைச்சு, நட்பை மறந்துட்டே. அந்தக் கோபத்துல இன்னிக்கு என்னை ஏப்ரல் முட்டாளாக்கியிருக்கே!

சுரேஷ் : என்னது நான் உன்னை ஏப்ரல் முட்டாளாக்கிட்டேனா?

முரளி : ஆமாம்! நீ மாதுகிட்டே கொடுத்தனுப்பிச்ச டிபன் பாக்ஸ்லே என்ன தெரியுமா இருந்தது?

சுரேஷ் : கோதுமை அல்வாதான் இருந்திருக்கும். இன்னிக்கு உன்னோட பிறந்த

நாள்! அதுக்காக உனக்குப் பிடிச்ச கோதுமை அல்வாவை என் அக்கா உனக்காகக் கொடுத்தனுப்பிச்சா! அதைத்தான் மாது மூலம் கொடுத்தனுப்பிச்சேன்!

முரளி : சுரேஷ்! 'நீ ஒரு ஏப்ரல் முட்டாள்'னு எழுதிய இந்தக் காகிதம்தான் இந்த டிபன் பாக்ஸுலே இருந்தது. மாதுவையே கூப்பிட்டுக் கேள்!

சுரேஷ் : முரளி! என் அக்கா கொடுத்த டிபன் பாக்ஸைத்தான் அப்படியே உனக்குக் கொடுத்தனுப்பிச்சேன். வேண்டுமானால் நீயே என் அக்காவை நேரில் வந்து கேட்டுப் பார்! நடந்ததைத் தெரிந்து கொள்ளலாம்!

முரளி : நான் செய்யாத தப்பை நான் செஞ்சதா நீ சொன்னதை நினைச்சு, நான் எவ்வளவு வருத்தப்பட்டேன்னு நீயும் என் அக்காவை வந்து கேட்டுப்பாரு!

சுரேஷ் : சரி, வா போகலாம்!

காட்சி - 5
இடம் : ஷீலா வீடு

சுரேஷ் : *(இரகசியமாக)* டேய் முரளி! உன் அக்காவும், என் அக்காவும் நம்மைப் பத்தித்தான் ஏதோ பேசிக்கிட்டிருக்காங்க. இப்படி மறைவா நின்னு கேட்போம்!

ஷீலா : மதுரா! நீ செய்த ஒரு சின்ன விளையாட்டு இவ்வளவு பெரிய வினையாயிடும்னு நான் நினைக்கவே இல்லை.

மதுரா : ஆமாம் ஷீலா! 'நல்ல நண்பர்கள்'னு பட்டம் வாங்கின முரளியையும், சுரேஷையும் சோதிச்சுப் பார்க்கத்தான் இந்த விளையாட்டை விளையாடினேன். வேர்க்கடலை உருண்டைகளுக்குப் பதிலா வெறும் மணலையும், காகிதத் துண்டையும் போட்டு 'சுரேஷ்' கிட்டே கொடுக்கும்படியா முரளி கிட்டே கொடுத்தனுப்பிச்சேன். ஆனால் சுரேஷ் இதுக்காக நல்ல நட்பையே விட்டுக் கொடுத்துடுவான்னு நான் நினைக்கல்லே! நான் செய்ததை நினைச்சு எனக்கே வருத்தமாத்தான் இருக்கு. இதற்கு என்ன செய்யலாம் ஷீலா?

ஷீலா : மதுரா! வருத்தப்படாதே! முரளியும், சுரேஷும், மறுபடியும் பழைய படி நல்ல நண்பர்களாக, ஒரு வழி செய்திருக்கேன்!

மதுரா : அது என்ன வழி?

ஷீலா : நீ அன்றைக்கு செய்தது மாதிரியே நானும் 'நீ ஒரு ஏப்ரல் முட்டாள்'னு ஒரு காகிதத்திலே எழுதி டிபன் பாக்ஸ்லே போட்டு, சுரேஷ் மூலமா முரளிக்கு கொடுக்கச் சொல்லியிருக்கேன். இது சுரேஷுக்குத் தெரியாது. உள்ளே கோதுமை அல்வா வச்சிருக்கிறதா சொல்லி அனுப்பிச்சிருக்கேன்.

மதுரா : அச்சச்சோ! இதனால் என்னென்ன நடக்கப் போறதோ?

ஷீலா : நீ கவலையே படாதே! டிபன் பாக்ஸ் முரளி கைக்குப் போனதும், ஆசையா திறந்து பார்ப்பான்... அப்புறம் சுரேஷ்கிட்டே அதைப் பத்தி விசாரிப்பான். அப்புறம் என்ன? நடந்தது என்னன்னு தெரியாம, ஒருத்தருக்கொருத்தர் பதிலுக்குப் பதில் விட்டுக் கொடுத்து பழையபடி நல்ல நண்பர்களாயிடுவாங்க! எப்படி என் யோசனை?

சுரேஷ் : *(உள்ளே வந்து)* பார்த்தாயா முரளி? எல்லாம் உன் அக்காவும், என் அக்காவும் விளையாடின விளையாட்டுத்தான்! நான்தான் மொதல்லே அவசரப்பட்டு உன்னைக் கோபிச்சுக்கிட்டேன், என்னை மன்னிச்சுடுடா!

மதுரா : அடடே, நாங்க பேசினதையெல்லாம் கேட்டுட்டீங்களா?


ஷீலா - மதுரா : நீங்க ரெண்டு பேரும் சேர்ந்ததுக்கு இந்தாங்க நிஜமாவே கோதுமை அல்வா, வேர்க்கடலை உருண்டை!


''நான் செஞ்சுரி அடிக்கிறது கொஞ்சம் தவறிப் போயிடுச்சு!''

''99 ரன் எடுத்து ஆட்டம் இழந்துட்டியா?''

''இல்லை. ஒரு ரன் எடுத்தேன். மீதி 99 எடுக்கறதுக்குள்ளே ஆட்டம் இழந்துட்டேன்!''

— எம்.கே. வேங்கவேல், சேலம்.





உங்கள் நூலகம்

ஐந்து மொழி அகராதி, சக்திப்புயல், பக். 270 ரூ. 100/- மணிமேகலைப் பிரசுரம், 4. தணிகாசலம் சாலை, சென்னை – 17.

இப்பொழுதெல்லாம் தனிமொழி அகராதி என்பது மெல்ல மெல்ல விடை பெற்று வருகிறது. மாணவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளை கற்று வருவதால், பல மொழி அகராதிகளின் தேவை பெருகி வருகிறது. இருப்பினும் இவற்றைத் தொகுப்பதில் உள்ள உழைப்பைக் கண்டு அஞ்சி பதிப்பகத்தார் இதில் ஆர்வம் காட்டுவதில்லை. மிகுந்த துணிச்சல் தேவைப்படும் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளதற்காக மணிமேகலைப் பிரசுரத்தை எத்தனை பாராட்டினாலும் தகும். ஆங்கிலத்தை அடிப்படையாக வைத்து, தமிழ், பிரஞ்சு, ஜெர்மன் இதுதவிர ஆசிய மொழிகளுக்கும் பொருள் தொகுத்திருப்பது மிக அரிய முயற்சி. மாணவர் உலகம் நன்கு வரவேற்று ஊக்கமளிக்க முற்றிலும் ஏற்ற அருமையான புத்தகம்.

உலகைக் குலுக்கிய பூகம்பங்கள், மு. சேரன், பக்.112, ரூ.21/- மணிமேகலைப் பிரசுரம், 4. தணிகாசலம் சாலை, சென்னை – 17.

பூகம்பம் ஏற்பட என்ன காரணங்கள் என்பதை விளக்கிவிட்டு, குலுக்கிய ஏராளமான பூகம்பங்களின் விளைவுகளை விவரமாகக் கூறுகிறது புத்தகம். எத்தனை தகவல்கள் என்பதைக் கூறும்போது திகைப்பாகவும், நடுக்கமாகவும் உள்ளது. சிறுவர்கள் மட்டுமல்ல, எல்லா வயதினரையும் படிக்க வைக்கும் நூல்.

நம்பிக்கை இல்லம், சுகுமாரன், பக் 88, ரூ.18/- ஜீவா பதிப்பகம், 36. ஈசானி மூர்த்தி கோயில் தெரு, திருவொற்றியூர், சென்னை – 19.

சினிமா பார்க்கும் வெறியில் கெட்ட பழக்கங்களை வளர்த்துக் கொள்ளும் சேகர், அவன் செய்யாத குற்றத்திற்காக பள்ளியிலும், அப்பாவாலும் தண்டிக்கப்பட்டு, சினிமாவே இல்லாத நல்லூரில் உள்ள தன் பெரியப்பா வீட்டுக்குப் போகிறான். நல்ல சூழ்நிலை காரணமாக முற்றிலும் மாறுபட்ட, முன் மாதிரி மாணவனாகிறான். சூழ்நிலையே மனிதனைக் கெட்டவனாகவும் நல்லவனாகவும் மாற்றுகிறது என்பதை அழகாக உணர்த்துகிறது நாவல். எளிய தெளிவான நடை. கோகுலம் வாசகர்களுக்கு ஏற்கனவே அருமையான சிறுகதைகளைத் தந்துள்ள ஆசிரியரின் படைப்பு. குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் கோவை எல்லப்பா ரங்கம்மாள் அறக்கட்டளையின் வள்ளியப்பா நினைவுப் பரிசைப் பெற்றுள்ள சிறப்பும் உண்டு இதற்கு.

— ரே

குருவி நடக்குமா? – ரேவதி, பக்.72 ரூ.20/- பழனியப்பா பிரதர்ஸ், 14. பீட்டர்ஸ் சாலை, சென்னை – 600 014.

கோகுலத்தின் முன்னாள் கௌரவ ஆசிரியர் ரேவதி அவர்களால் எழுதப்பட்ட அறிவியல் கதைகளின் தொகுப்பு. கோகுலத்தில் வெளி வந்தபோதே மாணவர்களிடமும், ஆசிரியர்களிடமும் பெரும் வரவேற்பைப் பெற்றது. ஓவியர் சசியின் படங்கள் அருமை. எல்லோரும் வாங்கிப் படித்து, பாதுகாக்க வேண்டிய நூல்.

— விஜி

எங்கள் பள்ளியில் நடந்தது!



வெகுளாமை


தமிழ் ஆசிரியர் "வெகுளாமை - அதாவது யாரும் எதற்கும் கோபம் கொள்ளக் கூடாது" என்று பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது பாடத்தில் கவனமில்லாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மாணவனை ஆசிரியர் கோபத்துடன் எழுப்பினார். உடனே சக மாணவன் ஒருவன் "வெகுளாமை" என்று கூறவும் ஆசிரியருக்கு சிரிப்பு வந்து விட்டது. அவனை உட்கார்ந்து வகுப்பில் கவனம் செலுத்தும்படி அன்பாகக் கூறினார்.

ஆ. குமார், பதினோறாம் வகுப்பு,
வரிக்கல் கிராமம்.



எஃகுக் குழம்பா?

பள்ளியில் உணவு இடைவேளையின் போது என் நண்பர்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவது வழக்கம். சாப்பிட உட்கார்ந்த உடன் யார் என்ன கொண்டு வந்திருக்கிறோம் என்பதைச் சொல்வோம். என் நண்பன் "நான் எஃகுக் குழம்பு கொண்டு வந்திருக்கிறேன்" என்றான். அருகிலிருந்த இன்னொரு நண்பன் "இரும்பு, எஃகு எல்லாம் போட்டுக்கூட குழம்பு வைப்பாங்களாடா?" என்று கிண்டல் செய்தான். "உங்களுக்கு இங்கிலீஸ் தெரியலைன்னு சொல்லுங்க, நான் முட்டைக் குழம்பு கொண்டு வந்



திருக்கிறேன்" என்றான். "இங்கிலீஸ் பேசறவன் முழுசா பேசணும்" என்று சொன்னேன் நான். "தெரியாமல் சொல்லிட்டேன்" என்றான் நண்பன் விரக்தியுடன்.

பி. மணிகண்டன், ஒன்பதாம் வகுப்பு,
சி.ரா.அரசு மேல்நிலைப்பள்ளி,
திருத்தங்கல்.

போதி மரம்!

எங்கள் பள்ளியில் மாலை வேளையில், பல குழுக்களாகப் பிரிந்து படிக்க வேண்டும். ஒவ்வொரு குழுவுக்கும் தலைவன் இருப்பான். அன்று எங்கள் குழுத் தலைவன், உடல்நிலை சரியில்லாததால் சற்று அயர்ந்து தூங்க ஆரம்பித்தான். ஆசிரியர் அருகில் வந்ததும் நான் அவனை எழுப்பினேன். உடனே முழித்தவன் "இப்படித்தான் புத்தர் போதி மரத்தடியில் ஞானோதயம் பெற்றார்" என்றான். இதைக் கண்ட ஆசிரியர் அவனைப்



பாராட்டிச் சென்றார்!

ஆர். ராமு, **வெள்ளையாம்பட்டு.**

போட்டாலும் உடையாது!

வாரம் ஒரு பாடவேளையில் எங்கள் ஆசிரியர் பாடம் நடத்தாமல் பொது அறிவு நிகழ்ச்சி, கதை சொல்லுதல், பாடுதல், விடுகதை போடுதல் என இரண்டு பிரிவாக பிரித்து நடத்து வார். இந்த நிகழ்ச்சி எங்கள் அனைவருக்கும் மிக வும் பிடிக்கும். அன்று விடுகதைப் போட்டி நடத் தினார். இரு அணிகளும் மாறி மாறி பதில் கூறி னோம். இரு அணிகளுமே சமமான மதிப்பெண்



பெற்றிருந்தோம். "பழைய விடுகதைகளுக்கெல் லாம் சுலபமாக பதில் சொல்லிட்டீங்க. இப்ப நான் புதுசா ஒண்ணு சொல்றேன்" என்றார் ஆசிரியர். நாங்களும் ஆவலுடன் காத்திருந்தோம். "எத்தனை முறை போட்டாலும் உடையாதது எது?" என்றார். நாங்கள் பதில் தெரியாது விழித்தோம். ஆசிரியர் பதில் கூற முயன்றபோது எதிரணியில் இருந்த மாணவன் எழுந்து "கையெழுத்து சார்" என்றான். ஆசிரியர் அவனை வெகுவாகப் பாராட்டினார்.

வி. நாகராஜன், **எட்டாம் வகுப்பு 'சி' பிரிவு**
அ.ஆ.மே.நி. பள்ளி, ஆட்டையாம்பட்டி.

பழைய குப்பை...

அறிவியல் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். "பயனற்ற பொருள்களைக் கொண்டு பயனுள்ள பொருட்கள் செய்யலாம். உதாரணமாக பழைய பாட்டில்களை புதிய பாட்டில்களாகவும், பழைய பிளாஸ்டிக்




பொருட்களை அழித்து புதிய பிளாஸ்டிக் பொருட்களாகவும், பழைய குப்பைகளிலிருந்து..." என்று சொல்லி முடிப்பதற்குள் என் அருகில் இருந்த மாணவன் "புதிய குப்பைகளை உருவாக்கலாம்" என்றான். ஆசிரியரும், நாங்களும் சிரித்தோம். "அவசரப்பட்டு ஏதாவது சொல்லி விடுவதா? பழைய குப்பைகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கலாம்" என்று கூறினார் ஆசிரியர்.

சிவ. பாக்யா, **ஐந்தாம் வகுப்பு,**
ஞானாம்பிகா உதவி தொடக்கப்பள்ளி,
கருப்பம்புலம்.

மணி என்ன ஆச்சு?

நான் பள்ளிக்கு சீக்கிரமே சென்று விட் டேன். சிறிது நேரம் கழித்து சைக்கிளில் வந்த என் தம்பி மாட்டு வண்டியின் மீது மோதி விட்ட தாகத் தோழி கூறினாள். உடனே அவனைப் பார்க்கச் சென்றேன். "மணி என்ன ஆச்சு?" என்று பதற்றத்துடன் கேட்டேன். அவனோ "மணி ஒன் பது பத்து" என்று சாதாரணமாகச் சொன்னான். பள்ளி என்பதை மறந்து அனைவரும் சிரித்தோம்.

ஆர். ஜெயந்தி, **தூத்திப்பட்டு.**



மாய வடை!

சுப்புசாமிக்கு வடை சாப்பிட வேண்டும் என்று வெகு நாட்களாய் ஆசை. ஆனால் வறுமையில் வாடிய அவரது குடும்பத்தாரால் அவரது ஆசையை நிறைவேற்ற முடியவில்லை.

ஒரு நாள் சுப்பு கடை வீதியில் போய்க் கொண்டிருந்தபோது, ஒரு கிடங்கில் மூட்டைகளை இறக்கிக் கொண்டிருந்தனர்.

"நானும் மூட்டை இறக்கட்டுமா?" என்று கேட்டார் சுப்பு சாமி. சம்மதித்தனர்.

கடைசியாக இறக்கியது சிறிய உளுந்து மூட்டை. சுப்புசாமி மூட்டையை முதுகில் சுமந்தபடி, 'இதுமட்டும் எனக்கு சொந்தமானால் எப்படி இருக்கும்! இதில் எத்தனை வடைகள் சுடலாம்' என்று கற்பனை செய்து கொண்டே போனார்.

அவ்வழியே சென்ற ஒரு தேவதை அவருக்கு உதவ நினைத்து, 'இந்த மூட்டை இவன் முதுகில் ஒட்டிக் கொண்டு இவன் வீட்டில் போய் இறங்கட்டும்' என்று அருளினாள்.


கிடங்குக்குப் போனால் மூட்டையை முதுகை விட்டு இறக்க முடியவில்லை. ஒருவன் 'கத்தியால் அறுத்து, உளுந்தை எடுத்து விடலாம்,' என்று யோசனை சொன்னான்.

அத்தனை மூட்டையை சாதாரணமாக ஏற்றி இறக்கியபோது இது மட்டும் ஒட்டிக் கொண்டது புரியாத புதிராக இருந்தது, சரக்கை ஏற்றி வந்த வியாபாரிக்கு.

பவித்ரா

'தானமாகத் தந்ததாக இருக்கட்டும்; இவன் மாயாவியாய் இருந்தால் பிரச்னை தொடரும்' என நினைத்த வியாபாரி சுப்புசாமியை அனுப்பி விட்டார்.

சுப்புசாமி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. வீட்டிற்குச் சென்றதும் 'அப்பாடா' என உட்கார்ந்தார். மூட்டை நழுவிக் கீழே விழுந்தது. பிரமித்தார். தாயாரையும், மனைவியையும், தம்பி, தங்கைகளையும் அழைத்து, "இந்த உளுந்து காலியாகும் வரை வடைதான் நமக்குச் சாப்பாடு. என் ஆசை தீரும் வரை வடை தின்ன வேண்டும்" என்றார். மூட்டையைப் பிரித்து கொஞ்சம் உளுந்தை எடுத்து மனைவியிடம் கொடுத்து, "மளிகைக் கடையில் இதைக் கொடுத்து விட்டு வடை சுடத் தேவையான எண்ணெய், எரி பொருள் எல்லாம் வாங்கி வா. அம்மா, அவள் வருவதற்குள் வடைக்கு உளுந்தை ஊறவை. அவள்



வந்ததும் வடைக்கு அரைப்பாள்" என்றார் பரபரப்புடன்.

தாயாரும், மனைவியும் அவர் சொன்னபடி செயல்பட்டனர். பாத்திரத்தில் அரைத்த உளுந்து மாவை ஆசை யோடு வழித்துப் போட்டாள் சுப்புசாமியின் மனைவி.

"அடேயப்பா! பசங்களா... இன்றைக்கு நல்ல வேட்டைதான்!" என்றார் சுப்புசாமி.



"ஐயையோ! இங்கே வந்து இந்த அதிசயத்தைப் பாருங்களேன்!" என்று அவர் மனைவி கூக்குரலிட, மனைவி இருக்குமிடத்துக்கு விரைந்தார்.

என்ன ஆச்சரியம்! மனைவி வழித்துப் போடப் போட கல்லுரலில் உளுந்து மாவு நிரம்பி வழிந்தது.

"எல்லாம் பகவான் செயல்! இது கிடக்கட்டும்! நீ போய் அடுப்பைப் பற்ற வைத்து எண்ணெய்ச் சட்டி ஏற்றி வடை சுட்டுத்தா" என்று அவசரப்படுத்தினார் சுப்புசாமி.

ஆட்டுரலை விட்டு எழுந்து போய் வடை சுட்டார் சுப்புவின் மனைவி. அரிகரண்டியால் எடுத்த வடைகளை வடி கூடையில் போட்டு விட்டுத் திரும்பினால், எண்ணெய்யில் மீண்டும் வடைகள்!

அதற்குள் அங்கு வந்த சுப்புசாமி யும் அவரது உடன் பிறந்தவர்களும், தாயாரும் ஆளுக்கொரு வடை எடுத்துச் சாப்பிட்டனர்.

நெடு நேரமாக யாரும் அடுத்த வடை எடுக்காததைக் கண்டு திரும்பிய சுப்புசாமியின் மனைவி அனைவரையும் ஒரு நோட்டம் விட்டார்.

எல்லோர் கையிலும் ஒரு விள்ளல் போக மீதி வடை அப்படியே இருக்க, மூச்சுத்திணற வாய் கொள்ளாமல் வடை வந்து கொண்டே இருந்தது!

இதை யார், எப்படி நிறுத்துவது? யாராவது உதவி செய்யுங்களேன்!

''செருப்பு போட்டுக்கிட்டு போனியே, எங்கேடா செருப்பைக் காணோம்?''

''வெளியே போகும்போது செருப்பு போட்டுக்கிட்டு போகச் சொன்னீங்களே, திரும்ப வரும்போது போட்டுக்கிட்டு வரணும்னு சொல்ல லியே!''

— த. வரதன்

பெருமைக்குரியவர்கள்!

அரையாண்டுத் தேர்வு முடிந்தது.

அருண், சிதம்பரம், பிரேம், குணா நால்வரும் மரத்தடியில் கூடினர்.

"நாளைக்கு நம்மளோட நீண்ட நாள் ஆசையான மலை மேல, காட்டுக்குள்ள இருக்கிற கோட்டையைப் பார்க்கப் போகலாம்'' என்றான் குணா.

"டேய் நாம மட்டும் போனா பயமாயிருக்காதாடா? அங்கதான் இப்போ ஆள் நடமாட்டம் இல்லையாமே!'' என்று பயந்தபடி கேட்டான் பிரேம்.



"உனக்குப் பயமாயிருந்தா நீ வர வேண்டாம். நாங்க மூணு பேர் மட்டும் போறோம் என்றான் சிதம்பரம்.

கோவிச்சுக்காதீங்கடா. நானும் வர்றேன்'' என்று தன் சம்மதத்தைத் தெரிவித்தான் பிரேம்.

"சரிடா. எல்லாரும் கேட்டுக்குங்க. காலை, மதியம் ரெண்டு வேளைக்கும் சாப்பாடுக்கு அப்புறம்...'' என்று அருண் இழுத்தான்.

"அப்புறம் என்ன? ஆளுக்கு ஒரு கடலை மிட்டாய் பாக்கெட்டோ, பிஸ்கட் பாக்கெட்டோ வாங்கிக்கிடலாம். எதுக்கும் குடிக்கிறதுக்கு தண்ணீர் பாட்டில் எடுத்துக்கலாம் என்ன?'' என்று குணா யோசனை சொன்னான்.

மறுநாள் நால்வரும் கோட்டையை நோக்கி நடந்தார்கள்.

வண்ணத்துப் பூச்சிகளும் இனிய குரல் பறவைகளும் பறந்ததைப் பார்த்துக் கொண்டே போன அவர்கள் தொலைவில் எட்டிப் பார்த்த கோட்டையைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள்.

சாக்லெட் சுவைத்தவாறே பேச்சிலும் சுவை சேர்த்துக் கொண்டிருந்தார்கள்.

"இவ்வளவு பெரிய கோட்டை எப்படி வந்தது?'' என்று சிதம்பரம் கேட்டான்.

"நம்ம பக்கம் பாண்டிய அரசர்கள் ஆட்சி நடந்தது. அவங்க கட்டியிருப்பாங்க'' என்றான் குணா.

"அதுக்குப் பின்னால விஜயநகரத்து மன்னர்களோட பிரதிநிதிகள் மதுரையில இருந்து ஆட்சி செய்தாங்களே. அப்போ அமைச்சரா இருந்தாராம் அரியநாதர். அவர் நிறையக் கோட்டைகள் கட்டினாராம். பழ செல்லாம்

அழகி

புதுப்பிச்சாராம். சார் வகுப்பிலே சொல்லலே?'' என்று அருண் நினைவு படுத்தினான்.

கோட்டையைப் பற்றிய சுவையான செய்திகளை விவாதித்துக் கொண்டே கோட்டையை அடைந்தார்கள்.

''கோட்டை பாதுகாப்பானதா இருந்திருக்கு. முக்கியமா ஆயுதங்கள், போர் வீரர்கள் பாதுகாப்புக்கு உதவி இருக்கு. அதை உடைச் சிட்டாலோ, பிடிச்சிட்டாலோ வெற்றி எதிரி கையில்தான்'' என்றான் அருண்.


''ஆனா இன்று எந்தப் பயனும் இல்லாம கிடக்கு'' என்றான் சிதம்பரம்.


''இதிலே கோட்டானும் வௌவாலும் தான் குடியிருக்குன்னு சொல்றாங்க'' என்றான் அருண்.

''இல்ல சிதம்பரம். பயன் இல்லேன்னு ஏன் நினைக்கிறே?'' என்று கேட்டான் பிரேம்.

''பின்னே?''

''பாரு. கோட்டை எவ்வளவு கம்பீரமா இருக்கு! லேசா ஒரு பக்கம் வாசல் வச்ச மாதிரி விரிசல் விட்டிருக்கு. மற்றபடி நம்ம முன்னோர்கள் எவ்வளவு பிரம்மாண்டமா கட்டடங்களைக் கட்டினாங்கன்னு காட்ட ஒரு உதாரணமா நிற்குதே!'' என்றான் பிரேம்.





''பூச்சிகளுக்குள் ஜோக் போட்டி வைச்சா எந்தப் பூச்சி முதல் பரிசு வாங்கும்?''

''தெரியலையே.''

'' 'விட்'டில் பூச்சிதான்!''

எஸ். சஷ்டிநாதம்,
பாண்டிச்சேரி.

''ஆமா, ஆனா அரசும் ஆலும் முளைச்சி மதில்சுவர் வெடிச்சிட்டு இருக்கு பார்த்தியா?'' என்றான் அருண்.

உள்ளே செடி கொடிகள் அடர்ந்து கிடந்தன. கட்டட அமைப்பும் தெரிந்தது.

''கோட்டைக்குள்ளே இன்னொரு கோட்டை இருக்கிற மாதிரி தெரியுது'' என்றான் குணா.

அவர்கள் மதில் மேலிருந்தே உள்ளே கண்டதை எல்லாம் விவரித்துக் கொண்டிருந்தார்கள்.

''இறங்கி அங்கே போகலாமா?'' என்று கேட்டான் பிரேம்.

''வேண்டாம். மதில் மேலேயே தளம், சுற்றி வரும்படியா சாலை போல இருக்கு. பார்த்தீங்களா? இந்தப் பாதை வழியே போயி முதல்ல சுற்றிப் பார்ப்போம். அப்பதான் எல்லா இடமும் நல்லாத் தெரியும்'' என்றான் குணா.

அவர்கள், பழங்கால வீரர்கள் தீப்பந்த வெளிச்சத்தில் ஆயுதங்களுடன் பாராக் கொடுத்துச் சென்று காவல் காத்த பாதை வழியே சுற்றிப் பார்த்தார்கள்.

ஓரிடத்துக்கு வந்து நின்றார்கள்.

அது கீழே இருந்து மேலே வரும் படிக்கட்டுகள் முடியும் இடம் போல இருந்தது. அந்த இடத்தில் அவர்கள், வெய்யில் ஏறியதாலும் நீண்ட தூரம் நடந்து வந்த களைப்பாலும் உட்கார்ந்து விட்டார்கள்.

பிரேம் மட்டும் உள் கோட்டையை பக்கவாட்டிலிருந்த ஒரு வட்ட சாளரத்தின் வழியே பார்த்துக் கொண்டிருந்தான்.

''டேய், டேய்!'' என்று மெதுவாகக் கூப்பிட்டான். எல்லோரும் ஓடி வந்து முண்டியடித்துக் கொண்டு அவன் காட்டிய திசையில் பார்த்தார்கள்.

அரிவாள், வேல் கம்புகளுடன் சிலர் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர்.

திகிலுடன் நால்வரும் தலையை அதிகம் உயர்த்தாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த இடம் உள்கோட்டை போல இருந்ததாக குணா சொன்ன இடம்தான்.

மீண்டும் வாயைத் திறந்தவன் பிரேம்தான்.

''டேய் இவங்கள பார்த்தா பெரிய திருடர்கள் போல இருக்குடா.''

''ஆமா பிரேம், பங்கு பிரிக்கிறதுல சண்டை போலிருக்கு'' என்றான் குணா.

எல்லோரும் பார்த்தார்கள். பயம் பற்றிக் கொண்டது.

''டேய் வாங்கடா. இங்கே நிற்க வேண்டாம் போயிடுவோம்'' என்றான் அருண்.

மறுகணம் தம் ஊர்ப் பாதையில் நால்வரும் விரைந்து சென்று கொண்டிருந்தார்கள்.

மகிழ்ச்சிக்காகப் போன இடத்தில் அவர்களுக்குக் கிடைத்தது மனக்கலக்கம்தான்.

இருந்தாலும் அன்று மாலைக்குள் நால்வரும் ஒரு முடிவுக்கு வந்தார்கள். இதுபற்றி வெளியில் யாரிடமும் சொல்லவில்லை. சொல்லி ஒன்றும் ஆகப் போவதில்லை என்றும் அவர்களுக்குத் தெரியும்.

உருப்படியான ஒரு பணியை அவர்கள் மேற்கொண்டார்கள்.

அதன் விளைவாக ஒரே வாரத்தில் அவர்கள் பள்ளித் தலைமை ஆசிரியருக்கு அவர்களின் மாவட்ட ஆட்சியரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது:

'அருண், குணா, பிரேம், சிதம்பரம் என்ற உங்கள் பள்ளி எட்டாம் வகுப்பு மாணவர்கள் கீழ்க்காணும் விஷயமாக எனக்கு நேரடியாய்த் துணிவாக எழுதியுள்ளார்கள். அவர்களை அதற்காக

முதலில் பாராட்டுகிறேன்.

'அவர்கள் கடிதத்திலிருந்து சில பகுதிகளை உங்கள் பார்வைக்குக் கொண்ர விரும்புகிறேன்:

'கோட்டானும் வௌவாலும் குடியிருக்கும் என்று நினைத்து, பழம்பெருமையைப் பறை சாற்றும் அந்தக் கோட்டையைப் பார்க்கப் போனோம்.

'அங்கே எங்கள் களிப்பைப் பறித்துக் கொண்டது ஒரு திருட்டுக் கும்பல்! பழம் கட்டடங்களைப் பாதுகாத்துத் தாருங்கள். பள்ளி மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் மகிழ்ச்சியை அள்ளி அளியுங்கள்.

'இதுபோன்ற பழங்காலச் சின்னங்களைப் பாதுகாக்க, அவற்றைப் புனரமைக்கவும் சுத்தப்படுத்தவும் எங்கள் உழைப்பைத் தர நாங்கள் ஆயத்தமாக உள்ளோம். விடுமுறைகளில் நாங்கள் நற்பணி ஆற்றும் நல்வாய்ப்பை எங்களுக்குத் தாருங்கள். கோட்டைகளைக் கொடியவர்களின் இருப்பிடமாக்கி விடாமல் எல்லோரின் கண்களுக்கும் விருந்தளிக்கும் நல்லிடமாக்க உதவுங்கள்.'

'இப்படி எழுதியுள்ள அவர்களைப் பாராட்டுகிறேன். தங்களையும் ஆசிரியர்களையும் பாராட்டுகிறேன். நல்ல மாணவர்களை உருவாக்கி இருக்கிறீர்கள்.

'அந்த மாணவர்கள் விரும்பியபடி செய்ய உடனே நடவடிக்கை தொடங்கியுள்ளேன்.


'மேலும் அவர்கள் மூலம்தான் சமூக விரோதிகள் அங்கே நடமாடுகிறார்கள் என்னும் துப்பு கிடைத்தது. அதற்காகவும் சிறப்புப் பாராட்டு! சமூக விரோதிகளைப் பிடித்து விட்டோம்' என்று கடிதம் முடிக்கப்பட்டிருந்தது.

பள்ளிக்கே பெருமை சேர்த்த அந்த நால்வரையும் பள்ளியே பிரமிப்புடன் பார்த்தது.

குறுக்கெழுத்துப் புதிர் - விடை

[1] மை	சூ	ர்	■	ரி	[2] க	க்	ல	[3] நி
ந்	■	[4] நா	டு	■	த்	■	■	த்
த	■	■	■	[5] பா	த	ம்	■	தி
ன்	ய	ரி	[6] சூ	■	ரி	■	[7] கீ	ரை
■	■	■	■	■	■	■	■	■
[8] வி	[9] சா	■	தி	■	ம்	த	கி	[10] கா
ண்	■	[11] கு	ந்	தி	■	■	■	ந்
மீ	■	■	ம	■	[12] சி	லி	■	த
ன்	தீ	ரு	[13] சா	[14] அ	■	[15] வே	த	ம்

துணுக்குகள்!



பொன்மொழி


ஒரு முட்டாள் தன் வீட்டில் மட்டும் மதிக்கப்படுவான். ஒரு பிரபு தன் ஊரில் மட்டும் மதிக்கப்படுவான். ஒரு அரசன் தன் ராஜ்யத்தில் மட்டும் மதிக்கப் படுவான். ஆனால், ஒரு கற்றுணர்ந்த மேதாவி உலகமெங்கும் மதிக்கப்படுவான்.

– சௌராஷ்ட்ர பழமொழி

ப. ரவிச்சந்திரன்,
கிழக்கு முகப்பேர்.

நவரத்தினங்கள்

அக்பர் சக்ரவர்த்தியின் அரசவையில் பல துறைகளிலும் புகழ் பெற்ற ஒன்பது அறிஞர்கள் இருந்தார்கள். நவரத்தினங்கள் என்று குறிப்பிடப்படும் இவர்கள் பீர்பால், மான்சிங், தோடர்மால், ஹகிம்ஹுமாம், முல்லா தோபியாஜா, ஃபைஜி, அபுல்பஸல், ரஹீம், தான்சேன் ஆகியவர்களாவர்.




தொகுப்பு: கே. ராஜேஸ்வரி,
7ஆம் வகுப்பு 'ஆ' பிரிவு,
கோவிலூர் 604 404

ஹீரோ யார்?

உலகமெங்கும் அதிக மொழிகளில் அச்சிட்டு வெளிவரும் காமிக்ஸ் ஹீரோ யார் தெரியுமா?

பாந்தம் (Phantom) என்று அழைக்கப்படும் முகமூடி வீரர் மாயாவிதான்.

சமீபத்தில் உலக காமிக் அசோசியேஷன் எனும் நிறுவனம் நடத்திய சோதனையில் 48 மொழிகளில் இவர் கதைகள் வெளிவருகின்றனவாம்.




இரண்டாமிடம் வால்ட் டிஸ்னியின் ஹீரோ மிக்கி மவுஸ்தான். மொழிகள் 42.

மூன்றாமிடம் டெனிஸ் என்ற சிறுவன் கதை (Dennis).

ஆதாரம்: Dimond Comics

முகமது ஆபீல், ஒன்பதாம் வகுப்பு,
அரசினர் ஆண்கள்
மேல்நிலைப் பள்ளி, வத்தலக்குண்டு.



தெரிந்து கொள்வோமா?

மோட்டார் – ஹென்ரி போர்டு
விமானம் – ரைட் சகோதரர்கள்
பிலிம் – கோடாக்
டயர் – டன்லப்
ரயில் – ஸ்டீவன்ஸன்
டி.வி – ஜான் பெயர்டு
தொலைபேசி – கிரகாம் பெல்


கே. அனுஷா,
ஒன்பதாம் வகுப்பு, கருங்குளம்.

ரயில் விந்தைகள்

● ரயில் தண்டவாளம் ஒரே நேர்க் கோட்டில் வளைவு திருப்பம் ஏதும் இல்லாமல் 525 கிலோ மீட்டருக்கு ஒரு நாட்டில் போடப்பட்டுள்ளது. எங்கு தெரியுமா? ஆஸ்திரேலியாவிலுள்ள நூலபார் சமவெளியில்.

● உலகிலேயே நீளமான தண்டவாளம் ரஷ்யநாட்டின் தலைநகரான மாஸ்கோவிற்கும், விளாடிவோஸ்டாக் நகருக்கும் இடையே போடப்பட்டுள்ள டிரான்ஸ் சைபீரியன் ரயில்பாதைதான். தூரம் 9,300 கிலோ மீட்டர்.

● உலகின் மிகப் பெரிய ரயில் நிலையம் நியூயார்க் 'கிராண்ட் சென்ட்ரல்' தான். 30 ஏக்கர் நிலப்பரப்பில் 47 பிளாட்பாரங்களைக் கொண்டது.



● ரயில்வே அமைப்பு முழுவதும் மின்சாரத்தினால் இயக்கப்படும் ஒரே நாடு ஸ்விட்சர்லாந்து.

● மிக நீளமான குகை ரயில் பாதை ஆல்ப்ஸ் மலையில் உள்ளது. 20 கிலோ மீட்டர் தூரம் மலையைக் குடைந்து இப்பாதை போடப்பட்டுள்ளது.

● உலகிலேயே மிக உயரமான இடத்துக்குச் செல்லும் ரயில் தென் அமெரிக்காவில் உள்ள சிலி நாட்டில் கடல் மட்டத்துக்கு மேல் 4800 மீட்டர் உயரத்தில் உள்ளது.

● நீளமான 'கண்காட்சி ரயில்' இந்தியாவின் சுதந்தரப் பொன்விழா கண்காட்சி ரயில்தான்.


விந்தை விநோதங்கள் நூலிலிருந்து
தகவல் : **முகமது ஹாரூன்பாஷா,**
பதினோராம் வகுப்பு,
அரசினர் ஆண்கள்
மேல்நிலைப் பள்ளி,
வத்தலக்குண்டு.



'பழ'மொழிகளும் உவமைகளும்

● தானாக பழுக்காததை தடி கொண்டு அடித்தால் பழுக்குமா?
● எட்டாத பழத்திற்கு கொட்டாவி விட்டானாம்.
● குருவி இருக்க பனம் பழம் விழுந்தது போல.
● பலாப்பழத்தை ஈ மொய்த்தாற் போல.
● பழம் நழுவி பாலில் விழுந்ததுபோல.
● வாழைப்பழத்தில் ஊசி இறக்கியதுபோல.

தொகுப்பு – ஆர்.ஏ. சரளா உத்ரா


"அது அரிசிக்கடை அப்பாவு குழந்தை!"
"அதான் நொய் நொய்னு அழுகிறதா!"
— பொறையாறு கங்கா கணேசன்
சிரி...
"ஸ்லோ சைக்கிள் ரேஸ்ல கலந்துக்கப் போறேன் பாட்டி."
"எல்லோரையும் முந்திக்கிட்டு, முதல்ல வந்து பரிசை வாங்கிட்டு வாடா!"
— சீர்காழி வி. ரேவதி
"அந்த ஹோட்டல் முன்னாடி ஏன் கழுதைகள் நிக்குது?"
"அங்கே மிஞ்சிப் போன பேப்பர் ரோஸ்ட்களை வெளியே போடுவாங்க!"
— பாளை பசும்பொன்
"என் நாய் பிஸ்கட் போட்டா வாலாட்டும்!"
"என் வீட்டு நாய் பிஸ்கட் போட்டா கூட வாலாட்டாது!"
"ரொம்ப திமிர் பிடிச்ச நாய் போல இருக்கு!"
"ஊஹூம்! அதுக்கு வாலே கிடையாது!"
— பொன். குமார்

எங்கு? எப்படி?

சூயிங்கம் பிறந்தது எங்கு?

தற்போது குழந்தைகளிலிருந்து பெரியவர்கள் வரை சூயிங்கத்தை மென்று கொண்டிருக்கின்றனர். இப்பழக்கம் சமீபத்திய ஃபாஷன் என நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம். அப்படியல்ல! கற்காலத்திலேயே சூயிங்கம் பழக்கம் இருந்திருக்கிறது என்ற உண்மையை, லண்டன் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். பிராட் போர்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த, எலிசபெத் அவெலிங் என்ற பெண், வட ஐரோப்பாவில் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட, கரி எண்ணெயிலான (தார்) சின்னச் சின்ன கறுப்பு உருண்டைகளைக் கண்டு பிடித்துள்ளார்.




இவை கி.மு. 7000 ஆண்டுகட்கு முற்பட்டவை. இவைகளில் மனிதர்களின் 'பல் தடங்கள்' உள்ளன. அதிலுள்ள 'பற்குறி'களின் அளவு, அந்த தார் உருண்டைகள் பெரும்பாலும் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் மென்றவை என்பதைத் தெரிவிக்கின்றன. அது மட்டுமல்ல, அவை வலி நிவாரணியாகவும், பால் பற்களை அகற்றும் பசையாகவும் பயன்படுத்தப்பட்டன என்ற உண்மையும் தெரிய வருகிறது.

இவ்வகைத் தார் பூஞ்ச் மரம் என்ற காட்டு மரத்தின் பட்டையிலிருந்து தயாரிக்கப்பட்டவை என எலிசபெத் சொல்கிறார். அவரே அதே போன்ற ஒரு பொருளை உருவாக்க முயற்சி செய்த போது, தற்போதைய சூயிங்கத்தைப் போன்ற மென்மைத் தன்மையுடன் ஒரு பொருள் கிடைத்தது. ஆனால் இனிப்பு மட்டுமில்லை! இதே போன்று நம் முன்னோர் பயன்படுத்திய சூயிங் தார் உருண்டைகள் சுவீடன் நாட்டிலும் கிடைத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மின்மினி ஒளிர்வது எப்படி?

இரவு நேரத்தில் வயிற்றின் அடிப் பகுதியில் விளக்கைக் கட்டிக் கொண்டு உலாவரும் பூச்சிகளைப் பார்த்திருப்பீர்கள்!

இது 'மினுக் மினுக்'கென மின்னுவதாலேயே, 'மின்மினி' என்று அழைக்கிறோம்! உயிருடன் உள்ள பொருட்கள் வெளிச்சம் தரும் போது, அவைகள் 'உயிர் ஒளிர்வுகள்' என்று சொல்லப்படுகின்றன.



இதற்கு வெளிச்சத்தைத் தருவது யார்? இது ஒரு விந்தையான வேதிவினை மூலம் நடைபெறுகிறது. மின்மினியின் தோலுக்கடியில் உள்ள செல்களில் லூயூசிபெரின் என்ற வேதிப் பொருள் உள்ளது. இது லூயூசிபெரோஸ் என்ற நொதியுடன் சேர்ந்து, ஆக்ஸிஜனேற்றம் அடையும்போது ஒளி உண்டாகிறது.

ஆமாம்! ஒளி உண்டாகும் போது, வெப்பமும் உண்டாகுமே! அதனை இந்த சிறியப் பூச்சி எப்படி தாங்குகிறது? மின்மினி உண்டாக்கும் வெளிச்சம் 'குளிர் ஒளிதான்' (Cold Light)!

பொதுவாக ஒரு மின் விளக்கு எரிவதற்குப் பயன்படும் மின் சக்தியில் 95 சதவீதம் வெப்பமாகவே வீணாகிறது; உண்மையில் 5 சதவீதம் மின் சக்தி மட்டுமே ஒளியாக வெளிச்சம் தருகிறது! ஆனால் மின்மினி உருவாக்கும் வெளிச்சத்தில் இந்த விகிதம் தலைகீழாக அமைந்துள்ளது! மின்மினி ஒளியை விடும்போது, அதே அளவு ஒளிவிடும் மெழுகுவர்த்தி வெளிப்படுத்தும் வெப்பத்தைப் போல 1/80,000 மடங்கு வெப்பமே, மின்மினியின் விளக்கிலிருந்து வெளியேறுகிறது! அதாவது 0.0000125°C வெப்பமே! ஐஸ் கட்டியின் வெப்ப நிலை 0°C தானே! எனவே இந்த 'ஐஸ் விளக்கு' எப்படி மின்மினியைச் சுடும்!

— எஸ். மோகனா

யானை மேலே...

விஜி

அன்று ஞாயிற்றுக் கிழமை. கார்த்திகாவும் விவேக்கும் விளையாடிக் கொண்டிருந் தார்கள். அம்மா சாப்பிட பல முறை அழைத்தும் விளை யாட்டு சுவாரசியத்தில் மூழ்கி யிருந்தார்கள்.

“நீங்க ரெண்டு பேரும் ஆசையாகக் கேட் டீங்களேன்னு, மணக்க மணக்க நெய்விட்டு, ஏலம், முந்திரி, வெல்லம், தேங்காய் போட்டு புட்டு செஞ்சிருக்கேன். ஆறினால் சாப்பிட முடியாது” என்று அம்மா சொன்னார்.

புட்டின் மீது கவனம் வந்தவுடன் விளை யாட்டை அப்படியே போட்டுவிட்டு சமைய லறையை நோக்கி ஓடினார்கள் இருவரும்.

“ஓடிப் போய்க் கொட்டிடாதீங்க. நான் வந்து எடுத்துத் தரேன்” என்று சொல்லிக் கொண்டே அம்மாவும் சமையலறைக்குச் சென் றார்.

இருவரும் தங்களுக்கு மிகவும் பிடித்த புட்டை ஆவலோடு சாப்பிட ஆரம்பித்தனர்.

அப்போது ‘டிங்... டிங்’ என்று மணி சத்தம் கேட்டது. விவேக் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு வாசலுக்கு ஓடினான்.

அவன் கண்களை அவனால் நம்ப முடிய வில்லை! அதற்குக் காரணமும் இருந்தது. நான்கு வீடு தள்ளி தெருவில் ஒரு யானை வந்து கொண்டிருந்து.

விவேக்கின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை! சாப்பிட்டுக் கொண்டிருந்த கார்த்திகாவை யும் அழைத்தான்.

“எதுக்குடா இவ்வளவு அவசரமாக் கூப் பிடறே?” என்று கேட்டபடியே வாசலுக்கு வந்தாள் கார்த்திகா.

“இங்கே பாரு யானை வந்திருக்கு” என்று எச்சில் கையை நீட்டிக் காண்பித்தான்.

“நம்ம தெருவில் யானை வந்து இதுவரை நான் பார்த்ததே இல்லை!” என்று வியந்தாள் கார்த்திகா.

“ஆமாம்! மாலுக்குட்டியை யானை மேலே உட்கார வச்சு இறக்குறாங்க பாரேன்” என்று உற்சாகத்துடன் கூறினான் விவேக்.

“அக்கா எனக்கும் யானை மேலே ஏற ணும்னு ஆசையாயிருக்கு” என்றான்.

“அக்காவும், தம்பியும் சாப்பிடாமல் அங்கே என்ன செய்துக்கிட்டிருக்கீங்க?” என்று கேட்டபடியே அப்பாவும் வாசலுக்கு வந்தார்.

“அப்பா நம்ம தெருவுக்கு யானை வந் திருக்கு பாருங்க!”

“ஆமாம்! பட்டணத்துத் தெருவில் யானை வருவது அதிசயம்தான்! எங்க ஊர்ல தினமும் காலையில் கோயில் யானை வீடு வீடா வரும்” என்று தன் அனுபவத்தை நினைவு கூர்ந்தார் அப்பா.

“அப்பா, நீங்களும் மாலுக்குட்டி மாதிரி யானை மேலே ஏறுவீங்களா?” என்று கேட் டான் விவேக்.

“தினமும் யானை மேலே ஏறி விளை யாடுவேன். கரும்பு, வாழைப் பழம் எல்லாம் என் கையாலேயே கொடுப்பேன். யானைக்கு என்னை நல்லா அடையாளம் தெரியும். அதுக்கு ‘விச்சு’ன்னு பேர் கூட வச்சிருந் தேன்” என்று அப்பா சொல்லிக் கொண் டிருக்கும் போது யானை மூன்றாவது வீட் டிற்கு வந்து சேர்ந்தது.


யானையுடன் அந்த தெருக் குழந்தை களும் உற்சாகமாக நடந்து வந்தார்கள்.

“அப்பா நானும் யானை மேலே ஏறட் டுமா?”

“ரெண்டு பேருமே ஏறுங்க. இந்த வாய்ப்பு மறுபடியும் எப்போது கிடைக்குமோ?”

“அம்மா கரும்பு இருக்கா? யானைக்கு கொடுக்கப் போறேன்” என்று அம்மாவை நோக்கிக் குரல் கொடுத்தான் விவேக்.

“கரும்பு சீசன் எல்லாம் முடிஞ்சு எவ்



ளவு நாளாகுது! இபப எங்க்க ம்போறது கரும்புக்கு?" என்று அம்மா கேட்டார்.

"வாழைப் பழமாவது எடுத்துத் தாங்க" என்று ஏமாற்றத்துடன் கேட்டான் விவேக்.

"நேற்றுதான் ஒரு டஜன் வாழைப்பழம் வாங்கி வச்சேன். இன்னிக்கி காலையிலே புட்டோடு சேர்த்து பிசையலாம்னு பார்த்தா ஒரு பழம் கூட இல்லை. அக்காவும் தம்பியும் காலி பண்ணியாச்சு."

''எனக்கு வாழைப்பழம் இப்பவே வேணும்" என்று அழ ஆரம்பித்தான் விவேக்.

விவேக்கின் அழுகையைப் பார்த்த அம்மா பக்கத்து வீட்டிலிருந்து இரண்டு வாழைப்பழங்களை வாங்கி வந்தார்.

யானையும் விவேக் வீட்டு வாசலில் வந்து நின்றது. யானையை மிக அருகில் பார்த்ததில் சிறிது பயம் வர ஆரம்பித்தது விவேக்கிற்கு. அப்பா விவேக்கை யானை மேல் ஏற்ற ஆயத்தமானார்.

"அக்கா முதலில் ஏறட்டும். அதற்கடுத்து நான் ஏறுகிறேன்'' என்றான் விவேக்.

கார்த்திகா சிறிதும் பயமின்றி யானை மீது ஏறத் தயாரானாள். அப்பா அவளைத் தூக்கி யானைப் பாகனிடம் கொடுத்தார். கார்த்திகா ஜம்மென்று யானை மீது உட்கார்ந்தாள். பிறகு அம்மா, அப்பா, விவேக்கைப் பார்த்து கையசைத்தாள். முகமெல்லாம் சந்தோஷத்துடன் கீழே இறங்கினாள்.

அடுத்து விவேக்கை ஏற்ற தேடினார் அப்பா. அவனோ அம்மாவின் பின்புறம் ஒளிந்து கொண்டான்.

''சீக்கிரம் வாடா. யானை அடுத்த வீட்டுக்குப் போகணும்'' என்று அவனை இழுத்தார் அப்பா.

அவ்வளவுதான். "வேண்டாம்ப்பா, பயமாயிருக்கு'' என்று கத்த ஆரம்பித்தான் விவேக்.

"சரி ஏற பயமாயிருந்தால், வாழைப்பழத்தையாவது கொடு" என்று அப்பா சொல்லவும் 'சரி'யெனத் தலையாட்டினான் விவேக்.

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பழத்தை வாங்கிட்டு கார்த்திகாவின் கையைப் பிடித்த படியே யானையின் அருகில் வந்தான். யானை பழத்தைப் பார்த்ததும் துதிக்கையை நீட்டியது.

உடனே அலறியடித்துக் கொண்டு வீட்டிற்குள் ஓடினான் விவேக். பழத்தையும் கார்த்திகாவே கொடுக்க வேண்டியதாயிற்று.

"விவேக் பயப்படாதே! நான் உன்னைத் தூக்கிக்கிறேன். ரெண்டு பேருமா சேர்ந்து காசு கொடுப்போம்'' என்று அம்மா சொன்னார்.

அம்மா ஒரு ரூபாயுடன் விவேக்கைத் தூக்கிக் கொண்டு யானையிடம் வந்தார். அம்மாவின் கழுத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டு, கண்களையும் மூடிக் கொண்டான் விவேக்.

அம்மா, காசு கொடுக்கவும் யானை ஆசீர்வாதம் செய்ய விவேக்கை நோக்கி துதிக்கையை நீட்டியது.

அந்த நேரம் விவேக் லேசாகக் கண் திறக்க... அவ்வளவுதான்! கத்தோ கத்தென்று கத்தி அழ ஆரம்பித்தான். சில நிமிடங்கள் கழிந்தன. அழுது முடித்து பார்த்தபோது வாசல் காலியாக இருந்தது. வேகமாக ஓடிச் சென்று பார்த்தான் விவேக். யானை அடுத்த வீட்டில் நின்றிருந்தது.

மறுபடியும் யானை மேல் ஏற ஆசை வந்தது விவேக்கிற்கு.

துப்பறியும் விவேக்!

விவேக்கின் அப்பா நேர்மையான காட்டிலாகா அதிகாரி. போன வாரம்தான் கேரளாவிற்கு மாற்றலாகி வந்திருந்தார். அவருக்கு சில எதிரிகள் இருந்தனர். எனவே அவர் வீடு எப்போதும் காவலர்களால் கண்காணிக்கப்பட்டு வந்தது.

அன்று விவேக்கின் அப்பாவிற்கு பிறந்த நாள். அவருக்கு பிறந்த நாள் பரிசு கொடுப்பதற்காக விவேக் அதிகாலையிலேயே படுக்கையை விட்டு எழுந்தான்.

சமையலறைப் பக்கம் வந்த விவேக் சற்று நிதானித்தான். சமையற்காரர் நாகன் பழம் நறுக்கி விட்டு தேன் பாட்டிலை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். பின் வேகமாக அந்த பாட்டிலுடன் நடந்தார்.

விவேக்கிற்கு ஏதோ சந்தேகம் கிளம்ப நாகனைப் பின் தொடர்ந்தான்.

சிறிது தூரம் சென்றதும் நாகன் ஒரு குடிசைக்குள் நுழைந்தார். விவேக் மெதுவாகச் சென்று குடிசைக்குள் பார்வையைச் செலுத்தினான்.

நாகன் அங்கிருந்த முரட்டு ஆசாமியிடம் பாட்டிலைக் கொடுத்துவிட்டு வேறொரு பாட்டிலை வாங்கினார். பின் வேகமாக விவேக் வீடு நோக்கி நடந்தார்.

விவேக்கிற்கு ஒன்றும் புரியவில்லை. பாட்டிலிலோ மலையாளத்தில் எழுதப்பட்டிருந்தது.

மீண்டும் நாகனை கண்காணித்தான். நாகன் பாட்டிலிலிருந்த தேன் போன்ற திரவத்தை பழத்துடன் கலந்து விவேக் அப்பாவிடம் கொடுத்தார்.

சாப்பிடப் போகும் வேளையில் விவேக் பாய்ந்து வந்து தடுத்தான்.



அப்பா என்னவென்று விசாரித்தார். விவேக் அந்த பாட்டிலில் எழுதியிருப்பதை படிக்கச் சொன்னான். மலையாளம் தெரிந்த விவேக்கின் அப்பா 'காட்டுத்தேன்' எனப்படித்து விட்டு, "நான்தான் வாங்கி வரச் சொன்னேன்" என்றார்.

விவேக் நாகனிடம் மன்னிப்புக் கேட்டான்.

— இரா. சுனில்,
பதினோராம் வகுப்பு, தாஜ்புரா
கிராமம், ஆற்காடு.

தூக்கம்!

ரவியும் மணியும் நண்பர்கள். இருவரும் படிப்பில் கெட்டிக்காரர்கள்.

ரவியிடம் ஒரே ஒரு கெட்ட பழக்கமிருந்தது. அது அவனுடைய தூக்கம்தான்! மற்ற பிள்ளைகளைப் போல் பள்ளி விட்டதும் விளையாடச் செல்லமாட்டான். தூங்க ஆரம்பித்து விடுவான். பிறகு எழுந்து சிறிது நேரம் படித்துவிட்டு, சாப்பிட்டவுடன் மீண்டும் தூக்கம். விடுமுறை என்றாலோ சாப்பிடுவதிலும், தூங்குவதிலுமே பொழுதைக் கழித்துக் கொண்டிருப்பான்.

ரவியின் பெற்றோர்களுக்கு அவனின் தூக்கத்தை நினைத்து கவலையாக இருந்தது. மணியின் அம்மாவிடம் இது பற்றி கூறினர்.

நாளை ரவியை தங்கள் வீட்டிற்கு அனுப்பி வைக்கும்படி கூறினார் மணியின் அம்மா.

மறுநாள் மாலை மணியின் வீட்டை அடைந்தான் ரவி.

"என்னை வரச் சொன்னீங்களாமே?" என்றான் ரவி.

"ஆமாம் ரவி. உட்கார். உன்னிடம் முக்கியமான விஷயம் பேச வேண்டும்" என்றார் மணியின் அம்மா.

"என்ன ஆன்ட்டி சொல்லுங்க."

"மணிக்கு உடம்பு சரியில்லை. மயக்கம் வருது. நான் வேலைக்குப் போயிட்டு வர லேட்டாகும். அதனால் பள்ளிக் கூடத்திலும், நான் வீடு திரும்பும் வரை வீட்டிலும் அவனை பத்திரமாகப் பார்த்து, மயக்கம்



வந்தால் இந்த மாத்திரையைக் கொடுக்க ணும். செய்வியா ரவி" என்றார் வருத்தத் துடன் மணியின் அம்மா.

"கண்டிப்பா செய்வேன். இப்ப எங்கே மணி?" என்றான் ரவி.

"பக்கத்து தெருவிலே விளையாடிட்டு இருக்கான்."

வேகமாக மணியைத் தேடிச் சென் றான் ரவி.

அன்றிலிருந்து ரவியின் தூக்கம் குறைந்தது. ரவி மற்றவர்களைப் போல விளையாடுவது, கதைப் புத்தகம் படிப்பது என மணியுடன் நேரத்தைச் செலவிட்டான்.

"உங்க திட்டப்படி ரவியோட தூக்கம் போயே போச்சு. அவனும் மற்றவர்களோடு சேர்ந்து விளையாடறான். ஆனால் அந்த மாத்திரையின் ரகசியம்தான் புரியலை" என்றார் ரவியின் அம்மா.

"அது வெறும் வைட்டமின் மாத்திரை தான். டாக்டர் அவனுக்கு கொடுக்கச் சொன்னார். அதோட மயக்கம் என்பதை நானே சேர்த்துக் கொண்டேன்" என்றார் மணியின் அம்மா.

"ரவியிடம் உண்மையைச் சொல்லி விடலாமா?" என்றார் ரவியின் அம்மா.

"அவனுக்கு போன வாரமே இந்த உண்மை என் மூலம் தெரிஞ்சுடுச்சு" என் றான் மணி.

நம்ம திட்டம் வெற்றி என்றார் உற் சாகத்துடன் மணியின் அம்மா.

— வ. அம்பிகா,
முனிசிபல் காலனி,
தஞ்சாவூர்.

பிருந்தாவனக் கதையரங்கம்

பரிசு?

கந்தன், அடைக்கலராஜ், மோகன் மூவரும் நண்பர்கள். நிறைய புத்தகங்களை வாங்கிப் படித்து, போட்டிகளுக்கும் பதில் அனுப்பி வைப்பார்கள்.

ஒரு நாள், ஏதோ ஒரு பத்திரிகையிலிருந்து இவர்கள் மூவருக்கும் பரிசு விழுந் திருப்பதா கவும்; பரிசாக 'கொசு அடிக்கும் கருவி' அனுப்பி வைப்பதாகவும் குறிப்பிட்டுக் கடிதம் வந்திருந்தது.

மூவருக்கும் சந்தோஷம் தாங்கவில்லை. பள்ளி முழுவதும் இச்செய்தி பரவியது. ஆசிரியர்கள் பாராட்டினர்.

இரண்டு நாட்களில் மறுபடி தபால் ஒன்று வந்தது அந்தப் பத்திரிகையிலிருந்து.

மூவரும் ஆர்வத்துடன் பிரித்தனர்.

"போட்டியில் ஒரே ஒரு பதிலில் தவறு செய்துவிட்டீர்கள். அதை கவனிக்காது



முதலில் பரிசு பெற்றதாக அறிவித்து விட் டோம். மன்னிக்கவும். இருந்தாலும் கொசுவை அடிக்க உங்களுக்கு ஒரு எளிய வழியை இங்கு சொல்கிறோம். மாலையான தும் கதவை மூடிக் கொண்டு இரண்டு கை களாலும் கொசுவை அடித்தால் அரை மணி நேரத்திற்குள் அந்த அறையில் உள்ள கொசுவை ஒழித்து விடலாம். என்ன மகிழ்ச் சிதானே! தொடர்ந்து போட்டியில் பங்கு பெற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கி றோம்."

கடிதத்தைப் படித்துவிட்டு மூவரும் சிரித் தது முப்பது வீடுகளுக்குக் கேட்டிருக்கும்!

— துரை. கார்த்திக்,
தேசிய மேல் நிலைப்பள்ளி, மன்னார்குடி.

பள்ளி, வீடு, ஓய்வு நேரத்தில் டீ.வி. முன் அமர்ந்து விடுவது என வருடம் முழுவதும் ஒரே மாதிரியான வேலைகளைச் செய்து கொண்டிருக்கும் நமக்கு கோடை விடுமுறையை நினைத்தாலே மகிழ்ச்சிதானே! ஊருக்குச் செல்வதும், உறவினர்களைப் பார்ப்பதும், மீண்டும் அடுத்த கோடை விடுமுறையை எதிர்பார்த்துக் காத்திருப்பதும் நம் எல்லோருக்கும் ஏற்படக்கூடிய பொதுவான அனுபவங்கள்தான்.

"சென்ற கோடை விடுமுறையில் என்ன செய்தீர்கள்?" என்று சிலரைக் கேட்டோம்.

எம். நூர்ஜஹான் (எட்டாம் வகுப்பு):

எப்பொழுதும் உறவினர்கள் வீடுகளுக்குத்தான் செல்வோம். ஆனால் சென்ற ஆண்டு அப்பாவின் நண்பர்கள் குடும்பத்தினருடன் எங்கள் குடும்பமும் சேர்ந்து நாகூர், வேளாங்கன்னி, தஞ்சை, திருச்சி என நான்கு ஊர்களுக்குச் சென்று வந்தோம். இப்போது நினைத்தாலும் அந்த அனுபவம் மிகவும் இனிமையாகத் தெரிகிறது. தனிக்குடும்பமாக இல்லாமல் நண்பர்களுடன் அரட்டையடித்துச் சென்றது, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் பழகியது, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்த்தது என அத்தனையும் இனிமையான விஷயங்கள்!

கார்த்திக் (ஏழாம் வகுப்பு):

என் அத்தை அப்போதுதான் மாற்றலாகி மதுரைக்குச் சென்றிருந்தார்கள். எனவே மதுரையில் விடுமுறையைக் கழிக்கத் திட்டமிட்டோம். அலுவல் காரணமாக அப்பா வரவில்லை. எங்கள் சித்தப்பா அழைத்துச் சென்றார். காலையில் பஸ்ஸில் கிளம்பினோம். மதுரைக்குச் செல்ல இரவாகி விட்டது. அங்கிருந்து அத்தை வீடு இருக்கும் திருநகருக்குச் செல்ல டவுன் பஸ் பிடித்தோம். பயணக் களைப்பாலும், பசியாலும் தூங்க ஆரம்பித்தோம். சித்தப்பா பெட்டிகளுடன் முன்புறம் உட்கார்ந்திருந்தார். பஸ்ஸில் கூட்டம் அதிகம். சிறிது தூரம் சென்றவுடன் அடுத்த ஸ்டாப்பிங்கில் இறங்குமாறு கூறினார் சித்தப்பா. அம்மாவும் எங்களைத் தயார் செய்தார். பஸ் நின்றது. நாங்கள் பின்புற வழியாக இறங்கினோம். பஸ் உடனே சென்றது. ஆனால் சித்தப்பா இறங்கவில்லை. புது இடம், முகவரியும் அம்மாவிடம் இல்லை. நாங்கள் இறங்கிய இடம் நான்கு சாலைகள் இணையும் இடம் வேறு. எந்தப் பக்கம் போவதென்றும் தெரியலை. இருட்டில் அம்மா எங்களைப் பிடித்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தார். சிறிது தூரம் சென்றதும் சித்தப்பா பெட்டிகளுடன் பரபரப்பாய் வருவது தெரிந்தது. நாங்கள் இறங்கிய இடம் பஸ் நிறுத்தம் அல்ல, சிக்னல் என்று பின்புதான் தெரிந்தது. ஒருவழியாக வீடு போய்ச் சேர்ந்தோம். இது ஒரு த்ரிலிங்கான அனுபவம்!

நினைத்தாலே

டெய்சி ராணி (ஒன்பதாம் வகுப்பு):

வருடா வருடம் சென்றாலும் அந்த இடம் ஒவ்வொரு முறையும் புதிதாகவே தோன்றும். சென்ற வருடமும் நான் சென்றது திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பாபநாசத்திற்குத்தான். அது என் பாட்டி, தாத்தா ஊர். நாங்கள் போய் இறங்கியவுடன் அக்கம் பக்கத்தவர்கள் கூடி விடுவார்கள், எங்களை உபசரிக்க. வீட்டின் பின்புறம் நெல்லி, மா, கொய்யா தோட்டம். அதற்கடுத்து தாமிரபரணி



இனிக்கும்...


ஓடும் கால்வாயில். நாங்கள் நீண்ட நேரம் நீச்சலடித்து விளையாடுவோம். பக்கத்திலேயே பொதிகை மலை இருக்கிறது. அதிகாலையில் உறவினர், நண்பர்களுடன் அகத்தியர் அருவியைக் காண மலையேறுவோம். ஒரே உற்சாகமாக இருக்கும். அருவியில் குளித்து விட்டு காலை சாப்பாட்டிற்குத் திரும்புவோம். வெயிலுக்கு இளநீர், நுங்கு, தின் பண்டங்கள் என வாய்க்கு ஓய்வே இருக்காது! இத்தனையும் முடிந்து ஊருக்குத் திரும்பும் போதுதான் சென்னையின் நினைவே வரும்!

காஞ்சனா (ஒன்பதாம் வகுப்பு):

நாங்கள் விடுமுறைக்கு ஊருக்கெல்லாம் போக மாட்டோம். என் தோழிகள் ஊருக்குப் போறேன் என்று சொல்லும் போது எனக்கும் ஆசையாயிருக்கும். அதனால் சென்னையிலேயே சினிமா, கடற்கரை, உறவினர் வீடு என அழைத்துப் போவார்கள் அவ்வளவுதான்! இந்த வருடம் கம்ப்யூட்டர் கோர்ஸ் படிக்கலாம் என்றிருக்கிறேன்.

இரா. பாலசுப்ரமணியன்

நான் எஸ்.பி.ஓ.ஏ. பள்ளியில் படிக்கிறேன். சென்ற கோடை விடுமுறைக்கு என் பெற்றோருடன் கல்கத்தாவிற்குச் சென்றேன். ஹுக்ளி நதியின் மீது கட்டப்பட்டிருந்த இரு பாலங்களும் காண்பதற்கு அழகாக இருந்தன. ஹுக்ளி நதியில் படகில் பயணம் செய்து பேலூர் ராமகிருஷ்ணாசிரமத்திற்குச் சென்று இனிமையான சூழலில் தியானம் செய்தேன். காளிகட்டிற்குச் சென்று காளியைத் தரிசித்தேன். விக்டோரியா நினைவு மாளிகையில் வைக்கப்பட்டிருந்த பழம் பெரும் நினைவுச் சின்னங்களைக் கண்டு களித்தேன். பிர்லா கோளரங்கத்திற்குச் சென்று விண்வெளியின் விந்தைகளைக் கண்டு வியந்தேன். 'ஸால்ட் லேக்'கில் உள்ள 'நிக்கோ பார்க்' என்னும் பொழுது போக்கு பூங்காவில் விளையாடினேன். அலிப்பூர் மிருகக்காட்சி சாலையில் அரிதான பறவைகளையும் வங்கப் புலிகளையும் பார்த்தேன். இந்தியாவின் தேசியக் கவிஞரான இரவீந்தரநாத் தாகூர் வாழ்ந்த இடத்தையும் கண்டேன். கல்கத்தாவைப் பற்றிய பசுமையான நினைவுகளுடன் சென்னை வந்து சேர்ந்தேன்.



♦ கோகுலத்தில் வெளிவரும் விளையாட்டுச் செய்திகள் படிக்க எளிமையாகவும், சுவையாகவும் இருக்கின்றன.

வ. தையல்நாயகி,
எட்டாம் வகுப்பு,
அரசு மேல் நிலைப்பள்ளி,
மணக்கால் அய்யம்பேட்டை.

♦ எங்களைப் போன்ற மாணவர்களின் படைப்புகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது கோகுலம் மட்டுமே! மார்ச் அட்டைப்படமே அசத்தல்.

கோகுலம் சிறுவர் சங்க
உறுப்பினர்கள்,
முத்துராமலிங்கபுரம்,
விருதுநகர் மாவட்டம்.

♦ திருவாழத்தான் எழுதிய 'பயம் என்னும் பேய்' கதையைப் போலவே நாங்களும் 'அச்சமில்லை... அச்சமில்லை' பாடல் வரிகளைச் சொல்லிக் கொண்டே செல்வது வழக்கம்!

நவீன், செந்தமிழன், ரமணி, செந்தில்
வேல், வெள்ளையன், ஆறாம் வகுப்பு,
அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
வத்தலக்குண்டு.

♦ 'நாட்டுப் பற்றை வளர்க்கும் தேசிய மாணவர் படை' பேட்டி பயனுள்ளது. நான் என்.சி.சியில் சேராமல் விட்டதை எண்ணி வருந்துகிறேன்.

உஷா முத்துராமன், திருச்சி - 17.

♦ 'உலகின் உயர்ந்த கட்டடம்' கட்டுரை பல தகவல்களை அறியச் செய்தது. எனினும் ஒரு சந்தேகம்! கட்டடத்தை கட்டி முடிக்க 41 மில்லியன் அமெரிக்க டாலர்கள் செலவானது, அதில் ஏற்பட்ட விபத்திலும் 41 மில்லியன் அமெரிக்க டாலர்கள் சேதாரம் ஏற்பட்டது என்பது சரியா?

வினோத் குமார், பெரம்பூர்.

வினோத்குமார் தவறை சுட்டிக் காட்டியதற்கு நன்றி. ஒரு மில்லியன் சேதாரம் என்பதே சரி. தவறுக்கு வருந்துகிறோம். – ஆர்.

♦ பிப்ரவரி '98 கோகுலம் இதழில் 'கோகுலம் நினைவலைகள்...' என்ற தலைப்பில் வெளியான ஆரம்ப கால கோகுலம் வாசகர்களின் பேட்டியைப் படித்ததும் எனது நினைவலைகள் 1971ம் ஆண்டிற்குப் போயின.

இன்றுவரை நான் கோகுலம் வாசகனாய் இருந்து கொண்டிருக்கிறேன்.

1971ம் ஆண்டு கோகுலத்தின் விலை 30 பைசா. வாண்டு மாமா எழுதிய 'பலே பாலு' சித்திரத் தொடர்கதை இன்னும் பசுமை மாறாமல் என் நெஞ்சிற்குள்.

அந்தப் பள்ளிப் பருவ நாட்களில், பத்திரிகைகளையும் படிக்க வேண்டும், அறிவு, திறமை போன்றவற்றை அவற்றிலிருந்தும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற உணர்வை என்னுள் ஊட்டியது கோகுலம் இதழே என்று இப்போது சொல்லிக் கொள்வதில் மிகவும் பெருமிதமடைகிறேன்.

தற்போது முழு நேரப் பணியாக தினமலர் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறேன். இதுவரை 800க்கும் மேற்பட்ட சிறுவர்களுக்கான கதைகளையும், 2000க்கும் மேற்பட்ட படப்புதிர்களையும் எழுதி இருக்கிறேன்.

சிறுவர்களுக்கு என்றே 25க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி உள்ளேன். 'பொது அறிவுப் புதிர்கள்' என்ற நூல், 1996ஆம் ஆண்டு வெளிவந்த சிறுவர் நூல்களில் சிறந்த நூல் என்று தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழக அரசின் 'தமிழ் வளர்ச்சித் துறை'யினரின் பரிசு பெற்றுள்ளது.

நான் பரிசு வாங்கும் போது, இந்த இமாலய வெற்றிக்கும் மகிழ்ச்சிக்கும் காரணமாக இருந்த கோகுலம் இதழைத்தான் நினைத்துக் கொண்டேன். இன்று நான் ஒரு குழந்தை எழுத்தாளரானதற்குக் காரணமாக இருந்தது 'கோகுல'மே என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

மு. அப்பாஸ் மந்திரி, காவேரிப்பாக்கம்,
வேலூர் மாவட்டம்.


Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621
Subscription : (Inland) Annual Rs. 60/-; Half Yearly Rs. 30/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-

மாறுபட்டிருப்பது எது?



விடை : கங்காரு. வயிற்றில் பையுடைய விலங்கு

பகிர்ந்து கொடுங்கள்!



இருபது கிலோ கொள்ளு இருக்கிறது. அதை இருபது குதிரைகளுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டும். ஆண் குதிரை ஒன்றுக்கு மூன்று கிலோ, பெண் குதிரை ஒன்றுக்கு இரண்டு கிலோ, குட்டி குதிரை ஒன்றுக்கு அரை கிலோ வீதம் பகிர்ந்து கொடுங்கள் பார்க்கலாம்!

— ப. ரவிச்சந்திரன்,
கிழக்கு முகப்பேர்.


விடை : ஆண் குதிரை — 1 - 3 கிலோ
பெண் குதிரை — 5 - 10 கிலோ
குட்டிகள் — 14 - 7 கிலோ
20 கிலோ

"எங்க வீட்ல 2 மாருதி இருக்குதே!"

"அப்படியா! எப்ப வாங்கினீங்க?"

"போன வாரம் வந்த குரங்காட்டியிடம்தான்!"

— கி. மனோகரன்.



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka

YOUR ENTERTAINER FOR THE SUMMER VACATION
CHILDREN'S FIRST CHOICE

INDIA'S LARGEST SELLING COMICS

DIAMOND COMICS

Release In Feb.



JOIN THE DIAMOND BOOK CLUB
AND FILL YOUR LIFE WITH FUN, THRILL & LAUGHTER

Just fill in the coupon given below and send it to us along with a Money Order or Postage Stamps worth Rs. 10/—

We shall be offering six books every month. To get a rebate of **Rs. 4/-and Free postage (approx. Rs. 7/—)** you'll have to order six books at a time in a month. In case these books are not of your choice then you are free to select any six books from the list of 'Diamond Comics' titles and we shall send you the same. But to get these benefits you'll have to order six books at a time.

We'll send you a Choice Card every month. If you like the books offered by us in the Choice Card then you need not send us the card back. In case you do not like the books then you send us the names of atleast 7 books of your choice so that we can send you 6 books of your choice available with us at that time.

Under this scheme, we shall be sending you a V.P. Packet by the 20th of every month.

Yes I would like to become a member of 'DIAMOND BOO CLUB' and take advantage of the benefits. I have read all yo rules and shall abide by these I promise to accept the V.P. eve month.

NAME ______

ADDRESS ______

POST OFFICE ______ PIN CODE ______

I am sending Rs. 10/- by M.O./enclosing Postage Stam worth Rs. 10/-

My Birth date ______

Note : We shall not enrol you as a member till we receive t membership fee.

NEW AMAR CHITRAKATHA

• Tales of Durga • Gandhari • Lokmanya Tilak • Ashoka • Gopal The Juster • Freedom Struggle of India

DIAMOND COMICS PVT. LTD. A-11, SECTOR-58 NOIDA-201301

DISTRIBUTORS : Madras : Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road • New Century Book House (P) Ltd. (Branches Madurai & Coimb **Hyderabad :** • Shailendra Agencies, Bashir Bagh •Neel Kamal Book Distributors, Sultan Bazar **Bangalore :** Sapna Book Stall, Gandhi Nagar, •A.K. Agencies, Rajaji Nagar •The Nav Karnataka Publications (P) Ltd., Crescent Road. **Calicut :** Remami Agencies P.O. Arakinar Calicut •Amity International Book House Arfa Bldg., East Kattaparamba, Calicut